உ

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா மலர்

## (Holy commencement of 61st Year)



மணிவிழா தம்பதிகள்:

சிவஸ்ரீ. ந.யோகானந்த (மோகன்) குருக்கள் – ஸ்ரீமதி. யோ. மாலினி யோகானந்தக்குருக்கள்

25-01-2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்பாணம் சுருவில்

ஐய்யனார் கோயில் ஆலய பிரதம குருவும்

லண்டன் ஸ்ரோன்லி

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் ஆலய குருவுமாகிய

" ஸ்ரீ வத்ஸ கோத்திர"

சிவஸ்ரீ. ந.யோகானந்த (மோகன்) குருக்கள், ஸ்ரீமதி. யோ. மாலினி

தம்பதிகளின்

# ஷஷ்டியப்த பூர்த்தி

## மங்கள வைபவ வெளியீடு

துர்முகி வருடம், தை மாதம்

25-01-2017 - புதன்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டுத் தரவுகள்


நூலின் பெயர் : "ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா மலர்"

மொழி : தமிழ் மற்றும் ஆங்கிலம்

விடயம் : ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா நாயகர் சிவஸ்ரீ நா. யோகானந்த குருக்கள் அவர்களது வாழ்க்கை சிறப்புகளும், பெரியோர் வழங்கிய ஆசிகளும், வாழ்த்துக்களும் மற்றும் பல்துறை ஆக்கங்களும்

முகவரி : 56A Stoneleigh Broadway
Epsom, Surrey,
KT17 2HS
United Kingdom

வெளியீடு : சிவஸ்ரீ யோகானந்த குருக்கள் குடும்பத்தினர்

பதிவு : 25-01-2017

அச்சுப்பதிவு : RS Printers Ltd
88 Horsenden Lane North
Greenford
Middlesex
UB6 7QH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா காணும் தம்பதியினர்



சிவஸ்ரீ. ந.யோகானந்த (மோகன்) குருக்கள்
ஸ்ரீமதி. யோ. மாலினி யோகானந்தக்குருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா காணும் தம்பதியினரின் பெற்றோர்




சுவர்க்க ஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள் – சுவர்க்க ஸ்ரீமதி யோகாம்பாள் தம்பதிகள்

சுவர்க்க ஸ்ரீ சோ.இராமநாத குருக்கள் – சுவர்க்க ஸ்ரீமதி அமிர்தேஸ்வரி தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

எமது பெற்றோராகிய சுருவிலை சேர்ந்த ஸ்ரீ.ஸ்ரீமதி யோகானந்தக்குருக்கள் மாலினி அம்மா தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் இன்று (27-01-2017) கொண்டாடப்படுவதனை முன்னிட்டு நாம் பெருமையடைகின்றோம், மகிழ்ச்சியடைகின்றோம். அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்குமுரிய எமது பெற்றோருக்கு அறுபது வயது பூர்த்தியாவதை எம்மால் நம்பமுடியவில்லை. எம்மை உலகிற்கு அறிமுகப்படுத்தி இன்று நாம் ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து நிற்பதற்கு காரணமானவர்கள் பெற்றோர் என்றால் அது மிகையாகாது.

எமது சொந்த ஊரான யாழ்ப்பாணம் சுருவில் ஐயனார்கோவில் குருவாகதிகழ்ந்தவர் எமது அப்பா. எமது தாத்தா அமரர் சோ. நடராஜக்குருக்கள் அவர்கள் பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அவருக்கும் யோகாம்பாள் தம்பதிகளுக்கும் இளைய மகனாக பிறந்தவரே. எமது அப்பா யோகானந்தக்குருக்கள், இவர் ஊரவர்களாலும் உறவுகளாலும் செல்லமாக மோகன் என்று அழைக்கப்படுபவர். எமது அம்மா மாலினி அவர்கள் பருத்தித்துறை சிவன் கோவில் பிரதம குரு சோ. இராமநாதகுருக்கள், அமிர்தேஸ்வரி தம்பதிகளின் புத்திரியாவார்.

இன்று இலங்கை மண்ணை விட்டு லண்டன் வந்தாலும் நாம் எமது சமய அனுஷ்டானங்களை ஒழுங்காக செய்வதற்கு எமது பெற்றோரே காரணம். அதேபோல் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அந்தணர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். எமது அனுஷ்டானங்களை கைவிடாது அதன்படி ஒழுகுதலே எமது அந்தண மரபிற்கு பெருமை அதுவே எமது வாழ்விற்கும் 'சிறப்பு. அந்தவகையில் இன்று எமது பெற்றோரின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு இந்நூலை வெளியிடுவதில் பெருமை அடைகின்றோம்.

இந்நூலுக்குரிய ஆசியுரைகளையும், வாழ்த்துரைகளையும் மற்றும் பல்துறை ஆக்கங்களையும் வழங்கி உதவிய எமது மதிப்பிற்குரிய அந்தணக்குருமாருக்கும், பெரியவர்களுக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. பெரியோர்களின் ஆசியுடனும், நல்ல வழிகாட்டுதலுடனும் இந்த ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா மலரை என்னால் முடிந்த வரை சிறப்புற வடிவமைத்து இருக்கின்றேன். இதற்கு எனக்கு நல்ல ஆலோசனைகளையும் நூலுக்கு பொருத்தமான ஆக்கங்களையும் வழங்கியவர்களையும் இந்நேரத்தில் நினைவு கூற விரும்புகின்றேன்.

இந்த ஷஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கு நேரே வருகை தந்து எமது பெற்றோரை வாழ்த்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மற்றும் அனைத்து வழிகள் மூலமும் வாழ்த்துக்களை தெரிவித்த எமது உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

நிறைவாக நாம் எமது பெற்றோரின் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவத்தை காண்பதற்கும் அது தொடர்பாக இந்நூல் வெளிவருவதற்கும் எமக்கு அருள்பாலித்து எம்மை காத்தருளும் எமது குலதெய்வமாகிய சுருவில் அய்யனார் பெருமானின் ஆசியுடனும் சுழிபுரம் ஓடையம்பதி பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரசுவாமியினதும் ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பிகையினதும் பாதார விந்தங்களை வணங்குவதோடு என்றும் துணைநிற்க மனதார வேண்டுகிறோம்.

சுபம்

இங்ஙனம்

**ஜெயராம் சர்மா (லவன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய தாய் தந்தைக்கு...
# மூத்த மைந்தனின் சின்னவேண்டுகோள்!!!

ஆராரோ பாடி தாலாட்டிய என் அன்னையின் இனிய குரல்!
முதல் முத்தம் தந்து கையில் ஏந்திய என் தந்தையின்ஸ்பரிஸம்!
தத்தி நடந்த முதல் நடையில் விழும்போது ஏந்திப்பிடித்தநான்கு கைகள்!
நான் கொஞ்சிப் பேசிய முதல் வார்த்தைகளை
மெய் மறந்து செவிமடுத்த அன்பு முகங்கள்!
நிலவு காட்டி முதல் சோறு ஊட்டிய என் அன்னையின் அன்பும்,
கூட்டிச்சென்று பள்ளி விட்ட என் தந்தையின் அரவணைப்பும்,
இன்றும் என் உயிர் நாடியில் பரவசமாய்தவழ்ந்தோடிக்கொண்டிருக்கின்றன !!!

என் ஒவ்வொரு தோல்வியிலும் தோள் கொடுத்த,
என் ஒவ்வொரு வெற்றியிலும் பேரானந்தம் அடைந்த,
மூன்று தசாப்த மணவாழ்க்கையின் சான்றாதாரமான,
மூத்தபுதல்வன் என்னை கை பிடித்து நல் இல் வாழ்க்கைக்குவழிகாட்டிய
என் இனிய அன்னை தந்தை இருவருக்கும்!
என் ஏழேழு ஜென்மமும் பணிந்து வாழ வரம் வேண்டிநிற்கின்றேன்!!

அம்மா ! அப்பா ! இன்று உங்கள் திருமண நன்னாளில்
என் திருமதியுடன் வாழ்த்துக்கள் கூறி ஆசீர்வாதம் வேண்டிவணங்குகின்றேன் ...
என்றும்உங்கள் மூத்த மைந்தனாய் பிறப்பெடுக்க!!!!

அன்புமகன்

**ராம் (சிவராம் சர்மா)**
**ஜனனி சிவராம் சர்மா**

---

Though you are my husband's parents, I look on you both as a second parents. From very early on in our relationship you have made me feel loved and welcomed. I remember being so nervous when I came to meet you both that first time in London. You both welcomed me in your heart and made me a part of your lives. You are wonderful parents to your own five children; to me you are people I can go to for advice and support or simply a chat. You help with whatever I have asked for. I do not feel you are told often enough just how much you are cared about and how grateful I am that you are both in my life. The journey you have crossed together with full of highs and lows. You smile together in success and you support each other in loss. You both make a loving family with your love and sacrifice and I am happy to be a part of this Beautiful family. I just want to thank you both so very much for the love and support you have given me and my family since the very first time I met you both. I admire you both in every way, and I look up to you both as an example of Wonderful Couple.


Congratulations on your Shashtiapthapoorthy (60th Birthday) Mama.

Happy Wedding Anniversary my Dear Mama & Maami.

Love and Best wishes :

**Your Daughter-in-law – Janani Sivaram**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The selfless father

Hardworking, caring, selfless. If I were to describe our father in three words, these would be the most appropriate.

Our father is one of the most hardworking people I have ever known. It is admirable how he works this hard on a daily basis for hours and hours, always with a smile on his face. If it is warm or cold, if early in the morning or late at night, if he is well or unwell; there is nothing that keeps him from doing his duty in the most sincere way. His motivation being the blessings of Goddess Sri Rajarajeshwary, he is certainly one of the few human beings on this planet that completely dedicate themselves to their duty and work.

Our father is one of the most caring people I have ever known. He equally divides his love and care between all of us, meaning his children and their better halves who describe themselves as lucky to have such a unique father-in-law. Regardless of where we are, how independent we are or how careless we are ourselves at times, our father never loses sight of what is important, which is family and caring for each other. Nevertheless, it goes without saying that recently he concentrates most of his love and affection towards his recently born grand-son, our son Vidyut. Seeing him as a grand-father truly pleases us as he is known to be happier than ever.

Our father is one of the most selfless people I have ever known. Everything he does is for the family. There has not been a day when he thought about himself. He sacrificed and still sacrifices his personal growth and health for the sake of the family. Our father is the reason for us all being here, where we are now, successfully leading and progressing in our lives.

"Our father" is an expression that I use with immense respect. I look up to him and our mother as a unity, consisting of unconditional love, sacrifice, and commitment. In the hope that I will always make them proud, I seek their blessings and wish that Goddess Sri Rajarajeshwary will bless them with many more years together to cherish even more precious memories.


May your blessings accompany our ways, always and forever.

**Gobi (Raguram Sharma)**

**Uma Raguram Sharma**

**Vidyut Raguram Sharma**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் தந்திடும் பிதாவை வணங்குவதால் ஞாலம் நம்மை வாழ்த்துமே....

எங்களை ஈன்றெடுத்து எங்களை அன்பாக, பண்பாக எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் எங்களை வளர்த்து, எங்களுக்கென்று ஒரு அழகிய வாழ்க்கையை அமைத்து தந்த எங்கள் பாசத்துக்குரிய பெற்றோர் இன்றைய தினம் சஷ்டியப்த பூர்த்தி விழாவை கொண்டாடுவதன் மூலம் அவர்கள் பல்லாணடு காலம் சகல சௌபாக்யங்களுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம்.

"ஞானம் தந்திடும் பிதாவை வணங்குவதால் ஞாலம் நம்மை வாழ்த்துமே. தந்தையின் சொற்படி நடப்பதால் அவரின் சிந்தை என்றும் குளிருமே. விந்தைகள் பலவற்றை வாழ்வினில் நிகழ்த்த தந்தையின் அருளாசி வேண்டுமே. அப்பாவின் ஆசிப்படி நடப்பதை விடுத்து தப்பாக நடந்திடல் கூடாது.ஞாலம் நம்மை என்றும் போற்றிட பாலமாக இருப்பவர் தந்தையே". நான் எங்கேயோ வாசித்த வரிகள் இன்னும் என் மனதில் படிந்து இருக்கின்றன. சுய நலம் இல்லாத, தங்களுக்கு என்று ஒரு இன்பமான வாழ்க்கையை யோசிக்காமல் தங்கள் இன்பமான வாழ்க்கையே தங்கள் பிள்ளைகள் தான் என்று வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் எங்களை செதுக்கி இந்த சமுதாயத்தில் இன்று நாங்கள் எங்களுக்கு என்று ஒரு பெயருடன் இருக்கும் படி எங்களை வளர்த்தெடுத்தார்கள் எங்கள் பெற்றோர்கள். எங்களை பத்து மாதங்கள் சுமந்தாள் வயிற்றில், பல வருடங்கள் சுமந்தாள் வாழ்வில் எங்கள் தாய். எங்கள் தாய்யையும் எங்களையும் தன் நெஞ்சில் சுமப்பவர் எங்கள் தந்தை. எங்களுக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து பல பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் எங்களுக்கு ஒரு குறையும் வைக்காமல் எங்களுக்கென்று ஒரு அழகிய வாழ்க்கையை அமைத்து தந்திருக்கிறார்கள்.

தங்களுக்கு வந்த மருமகளை தமது மகளாகவே எண்ணி அவர்கள் உறவாடும் விதம் கண்டு எனது மனைவி ஸ்ரீ ஜனனி என்றுமே என்னிடம் கூறி வியந்ததுண்டு. ஜனனியும் தனக்கு இப்படியொரு மாமா, மாமி கிடைத்ததை எண்ணி சந்தோஷமடைவதுடன் அவர்கள் இருவரும் என்றும் இறைவனின் அருளுடன் எல்லா நலன்களுடன் இருக்க வேண்டும், அவர்களின் ஆசியும், வழிகாட்டுதலும் எங்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும் என்று என்னிடம் பலமுறை கூறி இருக்கிறார்.

அப்பா! அம்மா! இந்த நன்னாளில் என் திருமதியுடன் உங்கள் பாதம் பணிந்து வாழ்த்துக்களை கூறுகின்றோம். எங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழும் நீங்கள் இன்று போல் என்றும் நோய் நொடி இன்றி சந்தோசமாக, எங்களை வழி நடத்தி பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

**அன்பு மகன் லவன் (ஜெயராம் சர்மா)**

**அன்பு (மரு)மகள் ஸ்ரீ ஜனனி ஜெயராம் சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாசமிகு அப்பா அம்மா....

இன்றைய நாள் சஷ்டியப்த பூர்த்தி விழாவினை கொண்டாடும் எனது பாசமிகு அப்பா, அம்மா உங்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்து உங்களின் ஆசிகளை வேண்டி உங்கள் பாதம் பணிகின்றேன். நீங்கள் எமக்கு பெற்றோராக கிடைத்தது நாங்கள் செய்த பாக்கியமாகவே நினைக்கின்றேன். எங்களை வளர்க்க நீங்கள் பட்ட கஷ்டங்களும், அவமானங்களும் பல பல என்று நான் அறிவேன். ஆனாலும் அவற்றை நீங்கள் பொருட்படுத்தாது எங்களை எல்லாம் இந்த நிலைக்கு வளர்த்து நல்லதொரு வாழ்க்கையை வித்திட்டுருக்கிறீர்கள். வெளிநாடு வந்தாலும் எமது பண்பாடையும் கலாசாரத்தையும் மறக்காது தொடர்ந்து அதை பின்பற்றவும் வாழ்க்கையை கட்டுப்பாடுடன் வாழ கற்று கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் இருவரும் இன்று போல் என்றும் சந்தோசமாக, நீண்ட ஆயுளுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு அன்பு மகன்
**வினோ (ஸ்ரீ ஹரிராம் சர்மா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்னையும் பிதாவும் முன்னேறி தெய்வம்"

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்பது வள்ளுவன் குறள். இல்வாழ்க்கையில் அன்பாகவும், அறத்துடனும் இருந்து எங்களிற்கு கஷ்டம் தெரியாமல் வளர்த்தவர் எங்கள் அப்பா.

"திரைகடல் ஓடி திரவியம் தேடு" என்பார்கள். அப்பா வெளிநாட்டிற்கு வந்து எங்களையெல்லாம் பல கஷ்டங்களிற்கு மத்தியிலும் உருவாக்கியவர். அப்பாவிற்கு உறுதுணையாக அம்மாவும் இருந்து எங்களை முன்னேற்றினார்.

"தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

தாயே திருக்கோயிலாவாள் குழந்தை தாயினுடைய கருவறையாகிய திருக்கோவிலில் வளர்ந்து இவ்வுலகத்தை 12 திங்களுக்கு பிறகு பார்க்கிறது. அது போன்று அக்குழந்தை தன்னிலும் மேம்பட்டவனாக வாழவேண்டும் என்று விரும்பித் தனது குழந்தைகளைக் கண்ணுங் கருத்துமாகத் தந்தை வளர்க்கின்றான். அதனாலே குழந்தைகளின் முன்னேற்றத்தில் அக்கறையுள்ளது தந்தை கூறும் கருத்துக்கள் மந்திரம் போன்றவை. ஆகையால் தாய் கோவிலைப் போன்றவள். தந்தை சொல்வது மந்திரச் சொற்களாகும். இத்தகைய தாய், தந்தை ஆகியோரின் பெருமையை விளக்கும்.

பழமொழியின் கருத்திற்கேற்ப இரவும் பகலும் இமை மூடாமல் என் வாழ்க்கையைப் பற்றி எண்ணி என்னை நல்லதோர் நிலைமைக்கு முன்னேற்றி, எனக்கு நல்லதோர் இல்லற வாழ்க்கையை அமைத்து கொடுத்த என் தாய், தந்தைக்கு என்றும் கடமைப்பட்டு வாழ்வேன்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற "

என்ற வள்ளுவன் குறளிற்கேற்றப அப்பாவின் கனவுகளை நனவாக்கியிருக்கிறோம். தேயும் நிலவும் வளரும் நிலவும், ஒரு நாள் வானில் ஒன்றாய் பூப்பதை போல அம்மாவுடன் அகவை 60 காணும் அப்பா பல்லாண்டு வாழ்க.

கருத்தொருமித்த தம்பதியராய்
சுற்றம் வியக்கம் வாழ்வை காண்பீர்
உதாரணத் தம்பதியராய்
ஊர் போற்ற உறவும் போற்ற
இணைபிரியாத வாழ்வினிலே
நூற்றாண்டு காலம் வாழ்ந்திடவே
உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

அன்புடன்

என்றும் உங்களை மனதில் சுமக்கும்
உங்கள் மகள் **வைஷ்ணவி ஸ்ரீ கரன்சர்மா**
மருமகன் **ஸ்ரீ கரன்சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



லண்டன் ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தான மண்டபத்தில்
25-01-2917-ல்
சஷ்டியப்த பூர்த்தி சாந்தி காணும்

## சிவஸ்ரீ ந.யோகானந்த மோகன் குருக்கள் ஸ்ரீமதி மாலினி

தம்பதிகளுக்கு வாழ்த்து.
ஈசானசிவம் டாக்டர் சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்

சுளிபுரம்- சுருவில் "கிரியாகலாபமுக்தாமணி" சிவஸ்ரீ சோ.நடராஜக் குருக்கள் ஸ்ரீமதி யோகாம்பாள் இருவரின் செல்வப் புதல்வனான மோகன் அவர்களுக்கு (நட)ராஜயோகா(ம்பாள்) தம்பதிகளின் இளைய புத்திரன் என்பதனால் ஸ்ரீ பாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரர் மற்றும் பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ ஹரிஹரபுத்ர ஐயனாரின் திருவருளாலும் யோகானந்தன் என நாமகரணமும் கிடைத்தது அதிர்ஷ்டமாகும். பின்னர் அவருக்கு தர்மபத்தினியாக மாலினி என்னும் மாது வந்து இணைந்திருப்பது பெரும்பாக்கியம் எனலாம். மாமனார் மாமியார் இருவரும் தமது மருமகளை வீட்டுக்கு வந்த "யோகலக்ஷமி" எனவே அன்பு பாராட்டினர். பெற்றோரும் மற்றோரும் வாழ்த்திப் பாராட்ட தம்பதிகள் இருவரும் இல்லறத்தை நல்லறமாயியற்றி புத்திரசெல்வங்களுடன் மற்றவையனைத்தையும் குறைவறப் பெற்று "சிவாசசாரியப்பட்டாபிஷேகத்தையும் பெற்று தாயதந்தையருக்கும் மற்றும உற்றார் உறவினருக்கும் நாட்டு நிலைமையையும் பொருட்படுத்தாது உரிய கடமைகளனைத்தையும் செய்துவருங்கால தம்பதிகள் திருமணஞ்செய்து ஆண்டு இருபத்தைந்தில் வெள்ளிவிழாவையும் அகவை ஐம்பதில் பொன் விழாவையும கண்டுகழித்து தற்போது வயது அறுபதில் மணிவிழாவைக் காணவுள்ளனர். நம ஒவ்வொருவருக்கும் நாம பிறந்த நட்சத்திரம் மாதாமாதமும் தமிழ்மாதமும நட்சத்திரமும் வருடாவருடமும் வருவது அனைவருக்கும தெரியும். ஆனால் நாம் பிறந்த தமிழ்வருஷம் பிறந்த தமிழ மாதம் ஆகியவற்றுடன் நாம் பிறந்த ஜனம நட்சத்திரமும் ஒருங்கிணைவதென்பது வாழ்நாளில் ஓரேயொருமுறை மட்டுமே நிகழக்கூடிய அபூர்வமான சம்பவமாகும். அவ்வேளையில் அவரவர் பிறந்த ஜாதகத்தில் கிரகநிலைகளில் சூரியன் சந்திரன் சனி குரு போன்றவை அமைந்துள்ள ராசிகளில் மீண்டும் வந்து அமையும் அற்புதத்தைக் காணலாம். செவ்வாய புதன் ஆகியவைகூட பாவஸ்புடங்களில் ஒருங்கிணையும் வாய்ப்பு ஏற்படும். எனவே அறுபதாவது வயது மிக முக்கியமானதாகக் கருதப்படுவதனால் சகல கிரகபாதிப்புக்களும் சாந்தியாகவும் தம்பதிகளும சந்ததியினரும் சர்வமங்களங்களை அடையவும் குடும்பததலைவனுக்கும் தலைவிக்கும் அறுபது வயது ஆரம்பம் அறுபது வயது பூர்த்தி ஆகியவற்றின்போது சாந்தி பூஜைகள் ஹோமங்கள் தானங்கள் மங்கள ஸ்னானம் மாங்கல்யதாரணம் போன்றவற்றை மக்கள் மருமக்கள் பேரக்குழந்தைகள் முன்னின்று நடாத்தி வருவது நமது கலாச்சாரமாகும். இன்று மணிவிழாக்காணும் சிவஸ்ரீ யோகானநதக் குருக்கள் ஸ்ரீமதி மாலினி மணிவிழாத்தம்பதிகள் எழுபதுகளில் பவளவிழாவையும் எண்பதுகளில் சஹஸ்ரசந்திர தர்சனங்கண்டபின் ஸதாபிஷேக முத்துவிழாவைபவத்தையும் கண்டுகளித்து கொள்ளுப்பேரன்பேத்திகளுடன் நூறாண்டுகாலம் நோய்நொடிகளின்றி வாழ வாழ்த்துவோமாக! வாழ்க பல்லாண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Sivasri 'Sivaakamagana Baaskaran'

**T.MAHADEVA KURUKKAL**

Dharmasasta Gurukulam

*GAYATRI PEEDAM*

*Inuvil, Chunnakam*

*TelePhone:* 021 224 1560

'சிவாகமஞான பாஸ்கரன்'

**சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்**

அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீ பீடம்

ஸ்ரீ கண்ணகாபரமேஸ்வரி தேவ்யாலயம்

இணுவில், சுன்னாகம்.


திகதி 25-12-2016

## சஷ்டி அப்த பூர்த்திகாணும் சிவாசார்யர் பெருமையோடு வாழ ஆசி கூறுகிறேன்

அந்தன பெருமக்களுடைய வாழ்வில் 59வயது பூர்த்தி 60 வயது பூர்த்தி 70 வயது பூர்த்தி 75 வயது பூர்த்தி 80 வயது பூர்த்தி இவை எல்லாம் விசேசமானவை 59 வயதில் உக்ரரத சாந்தியும் 60 வயதில் சஷ்டி அப்த பூர்த்தி சாந்தியும் 70 வயதில் பீமரத சாந்தியும் 75வயதில் விஜயரத சாந்தியும் 80வயதில்சதாபிசேகமும்நடை பெறுகின்றன இவை எல்லாம் அந்தனப் பெருமக்களு டைய வாழ்வில் ஏற்படும் துன்பங்களை போக்க வல்லவை முக்கியமாக 60 வயது பூர்த்தி சாந்தி அவருக்கு இடர்களை நீக்கி நல்வாழ்வுக்கு வழிகோலு பவை களாக அமைகின்றன இதில் புனர்மாங்கல்யதாரணம் நடை பெறு வதோடு பலவித தானங்களும் செய்ய வழிகோலுகின்றது இப்பெருமை மிக்க சாந்தி நடைபெறும் சிவஸ்ரீ.நடராஜக்குருக்கள் யோகானந்தக்குருக்கள் தம்பதியினர் சகல சௌபாக் யங்களோடு மேலும் வாழ்ந்து பீமரதசாந்தி சதபிசேகம்காண எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய பிரார்த்திக்கிறேன்

சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"சிவாகம கலாநிதி" "கிரியாக்கிரமஜோதி"
"வாகீசவாரிதி" "சகலாகமசங்கிரகர்"
"முத்தமிழ்க்குருமணி"
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்.

"Sivagama kalanithi" "Kriyakkramajothy"
"Vekeesavaathri", "Sakalakama Sanggrakar"
"Muthamil Kurumani"
SIVASIRI N. SARVESVARAKURUKKAL
Sri Kathiramalai Sivan Thevasthanam
Chunnakam.

சஷ்டியப்த பூர்த்தி தம்பதிகள் நீடூழிவாழ்க. ................200....

இலங்கையில்
சுழிபுரம் பதியைப் பூர்வீகமாகவும், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில், சம்பணை அம்பாள் கோவில், பருளாய் முருகன் கோவில், சுரிவில் ஐயனார் கோவில், ஆகியவற்றின் ஸ்தானிக சிவாச்சாரியார்களாக விளங்கும் பாரம்பரியத்தில் சோமாஸ்கந்தக் குருக்கள் . நடராஜக்குருக்கள் தம்பதிகளின் கனிஷ்ட குமாரராகிய சிவஸ்ரீ. யோகானந்தக் -குருக்கள் அவர்கள் சஷ்டியப்தபூர்த்தி பெற்று சாந்திகள் செய்ய இருப்பது மிக சந்தோஷமாகும். அவரும் அவரது துணைவியார் மாலதி [மாது] ஆகியோரது இல்லத்தின் பயனாகப் பெற்ற பிள்ளைகளின் சிறப்பும் இவரது அன்பு நிறைந்த கனிவான பேச்சு புன்முறுவல் எல்லோரையும் கவர்ந்து கொள்வதாகும் இவர்களது இவ் விழா மூலம் பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் சிறப்புப் பெறவும் சித்ர, நக்ஷத்திர,, ஆயுஷ் தேவ . அபிஷேக தேவ ஆசிகளாலும் பெரியோரது வாழ்த்துக்களை கோரும் நீடூழி வாழ்ந்து சதாபிஷேக சிறப்புகளைப் பெற்று வாழ வாழ்த்தி
ஆசீர்வதிக்கிறோம்.

சிவஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவமயம்

**வேதாகம வித்யா பூஷணம், சிவாகம ரத்னா**

**பிரம்மஸ்ரீ. விஸ்வநாராயண சர்மா (வி. சோமசுந்தர ஐயர்)**

(சர்வ சாதகர் - ஆகம ஆலோசகர்)

**SRI. VISHVANARAYANA SHARMA (V. Somasunthara Iyer)**

(Aagamic Executive)

123/2 1/1, Hampden Lane,
Colombo-06, Sri Lanka.
Telephone: +94 112058322
Mobile: +94 722849104
E-mail: ushanarayanasharma@gmail.com


Date: 20/11/2016.

உ

## ஆசியுரை

அன்பு - எவரிடத்தும்,
ஆர்வம் - எதையும் தெரிந்து கொள்ளல்
இயல்பு - சாத்வீக குணம்
ஈதல் - இல்லை என்பார்க்கு
உறுதி - செய் காரியங்கள் யாவற்றிலும்
ஊக்கம் - வித்தைகள் தெரிந்து கொள்வதில்.

எனும் நற்குணங்களுடைய நல்லவராகவே நான் இவரை ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன் தெரிந்து கொண்டேன். யாழ் சுருவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேகப் பெருவிழாவில் பிரம்மஸ்ரீ யோகநாத குருக்கள் (மோகன் குருக்கள்) அவர்களை கண்டேன். புகழ் பூத்த பரம்பரை, சுழிபுரம் சிவஸ்ரீ. சோ. நடராஜக்குருக்கள் தம்பதியினரின் புதல்வராக உரிய கல்வி கற்றுத்தேறி, ஆகமக் கல்வியிலும் சிறந்து விளங்கிய மோகன் குருக்கள் உரிய காலத்தில் மாலினியம்மாவை திருமணம் புரிந்து நல்லறம் நடாத்தியவர்.

இன்று உலகின் சிறந்த பட்டணங்களில் ஒன்றாகிய இலண்டன் மாநகரில் சிறப்பாக சிவப்பணி செய்து வரும் குருக்கள் ஐயா தனது, இல்லத்தரசியுடனும், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் மணிவிழா (ஷஷ்டியப்த பூர்த்தி) காண இருப்பது மிகுந்த மன நிறைவைத் தருகின்றது. இவரின் தந்தை, சகோதரர்கள், மைத்துனர்கள் என்மீது பாசமும் ~~...~~ நேசமும் வைத்து என்னை உயர்த்தியவர்கள் என்பது நிச்சயமான உண்மை என்றால் மிகையல்ல.

மணிவிழா தம்பதியர் விழாவின் பெருமையாய், 70, 75, 80, 81 வயதுகளில் உரிய சாந்தி விழாக்கள் செய்து மகிழ எல்லாம் வல்ல ஸ்ரீ அபிராமி உடனுறை அமிர்தகடேஸ்வர பெருமான் அருள்வார் என்பது நிச்சயம்.

ஸ்ரீ மோகன், மாலினி தம்பதியினருக்கு ஸ்ரீ துர்க்கா பாதம் பணிந்து ஆசி கூறி மகிழும்

வேதாகம வித்யா பூஷணம்,
பிரம்மஸ்ரீ. விஸ்வநாராயணசர்மா.

சுபமஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Swami Muruganunda Saraswathi*
Managing Trustee

**The Arunachala Unique Mountain Trust**
**"ANANDA KUTIR"**
108, Manakula Vinayagar Kovil Street,
Ramanashramam Post
Thiruvannamalai - 606 603.
Tamil Nadu - Bharat
E-mail : dharmapracharak@yahoo.com

14/01/2017

It gives me immense pleasure to express my good wishes on the happy occasion of the observance of Sashtyabhdhapurthi Celebration of Mohan Kurukkal (Yohanandan Kurukkal) by his children, family members and friends in keeping with the glorious Sanathana Dharma tradition. Literally translated this means the observance is to the the person who has completed 60 years of earthly life the children get together with family and friends and reenact the wedding of the person again with the sacred Vaidika Samprathayam.
Upanishads and other Dharma Shastras mention that an ideal life span of a human individual is 120 years.But it is very rare in normal life people celebrate the cross over of 60 years as an important event in ones life. Also of the 60 year life cycle gets completed when the person is completing the 60 years of his Birth Year according to the Hindu almanac and can revisit the almost same planetary positions that was there during the birth of the person.When this 60 years cycle is completed the children get the parents married again according to the the same religious rights done at the time of their marriage and seek the blessings of the parents again. From this moment onwards the Grihasthashrama observances takes a back seat and the individual dis- engages oneself from responsibilities of the house and other worldly entanglements. He earnestly seeks Divinity and enters into a withdrawn attitude which is the ideal entry point to Vanaprastha Ashrama, the third stage of a house holder's life. Here the individual completely offers to dedicate his rest of life in the observance of religious duties and intense spiritual practices. This does not mean that the individual does not care for the world. It means that he is intensely involved in the welfare of one and all through complete entry into the Divine by thought, word and expression. This service done by the individual impacts the entire creation because he activates the latent Divine potentiality in him. That is the truest service to the creation to God.

Mohan Mama whom I have come to know through the wedding of his son in Chennai, last year is a very good human being and a very blessed religious enthusiast. It brings me joy to wish him and his ideal family all the very best by the Infinite Grace of the Lord Arunachaleshwara and Gurus of of the Santhana Sampradaya. May he enter into this intense activity from now on to embark on a great journey inwardly to lift humanity to lofty heights of spiritual blessedness.

Your's in Bharat Mata

Swami Muruganamda Saraswathi
Managing Trustee

"God First, World Next, Yourself Last" - Gurudev Swami Sivananda
"Worship is not ritual, it is an attitude, An experience" - Pujya Sri Sri Ma Anandamayee
"Everything is in every form, in every condition, At every moment, Every where" - Revered Sri Swami Krishnanandaji Maharai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ பா. ஷண்முகேஸ்வர குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி

ஸ்ரீலங்காவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இலண்டன் மாநகரில் சிவாச்சாரியாராகக் கடமையாற்றிக்கொண்டிருப்பவருமாகிய ஸ்ரீ சிவஸ்ரீ ந. போகானந்த சிவாச்சாரியார் அவர்கள் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியை கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

மனித வாழ்விலே பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை பல மாற்றங்கள் ஏற்படுவது இயற்கை. அந்த வகையில் (12x5) வாழ்க்கையில் ஐந்து முறை மாற்றங்கள் ஏற்பட்டு 60வது வயதில் ஏற்படும் மாற்றம். மிக முக்கியமானதாகும். இத்தனை காலமும் குடும்பத்துக்காக உழைத்து, ஓய்வு பெறும் வேளை மனமாற்றங்கள் உடல் மாற்றங்கள் ஏற்படுமாதலாலும் பலவிதமான உடல் உபாதைகள் மன உறுத்தல் ஏற்படாமல் இருப்பதற்காக முன்னோர்களும் முனிசிரேஷ்டர் காலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி" யை செய்வது முறையாகும்.

சிறப்பான சிவாச்சாரிய வழிவந்த மேற்படி குருக்கள் அவர்கள் சிறுவயதிலிருந்தே தகப்பனாரிடம் படித்தும், அவருடன் சேவையாற்றியும், பல ஆலயங்களின் நித்திய - நைமித்திய காரியங்களை நடாத்தியும் அனுபவம் பெற்றதுடன், மற்றவர்களுடன் அன்புடனும், பணிவுடனும் சிரித்தமுகத்துடன் பேசிப்பழகியும் ஒரு நல்ல சிவாச்சாரியாராக திகழ்பவருக்கு மேற்படி சாந்தி நடைபெறுவது மிகவும் சிறப்பாகும்.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி சிறப்பாக நடைபெற்று அதன் பயனாக குருக்கள் அவர்கள் மேலும் பலகாலம் சுகத்துடன் வாழ்ந்து சேவையாற்றி, பீமரதசாந்தி, சதாபிஷேகம் முதலியவற்றையும் காண வேண்டுமென்று ஆசி கூறி அமைகிறேன்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்புது அல்லால், வேறென்று அறியேன் பராபரமே"

சுபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

எமது அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவரும் லண்டன் ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான குரு, சிவஸ்ரீ.ந.யோகானந்தக்குருக்கள் (மோகன்) தர்மபத்தினி ஸ்ரீமதி. மாலினி (மாது) தம்பதிகளின் "ஷஷ்டியப்த பூர்த்தி என்னும் மங்கள விழாவை அவர்களின் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஒன்று சேர்ந்து நடாத்துவதையும் மணிவிழா மலர் வெளியிடுவதையும் இட்டு பெரும கிழ்ச்சியடைகிறோம்.

மனித வாழ்க்கையில் 60வருடங்கள் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். வருடச்சக்கரம் என்பது அறுபது வருடங்கள் கொண்டது. எனவே, ஒருவர் பிறந்த நேரத்தில் கிரகநிலை எந்த இடத்தில் நின்றதோ திரும்பவும் அதே நிலைக்கு 60 வயது பூர்த்தியன்று நிகழ்கின்றது. இன்று மங்களகரமான மணிவிழாவைக் கொண்டாடும் தம்பதிகளுக்கு இன்னுமொரு சிறப்பும் கிடைக்கின்றது. மோகன் குருக்களின் பிறந்த நஷ்த்திரம் தைமாத மூல நஷ்த்திரம் திருமண மங்கல நாண்பூட்டு விழா ஜனவரி 25ம் திகதி, 60 வயது "ஷஷ்டியப்த பூர்த்தி என்ற மணிவிழா இவை மூன்றும் ஒரே நாளில் கொண்டாடும் சிறப்பைப்பெற்ற தம்பதிகளாவர்.

இவ்வித சிறப்புக்கள் பெற்ற மோகன் குருக்கள் அவர்கள் சுழிபுரம், குடியிருப்பு, குரு பரம்பரையில் வந்த ஸ்ரீ பாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம், சுழிபுரம் பொன்னாலை ஸ்ரீ வரதராஜேஸ்வரப் பெருமாள் தேவஸ்தானம், சுருவில் ஸ்ரீ பூரண, புஸ்கலா தேவி சமேத ஹரி ஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதமகுருவும், பரம்பரைப் பூசை உரித்துமுடைய சிவஸ்ரீ. நடராஜக்குருக்கள், யோகாம்பாள் தம்பதிகளின் புத்திரர் ஆவார்.

"'ஷஷ்டியப்த பூர்த்தி என்ற இந்த மங்கல விழாவில் தம்பதிகள் பல்வேறு தானதர்மங்கள் சாந்திகள், மாங்கல்ய தாரணம், தம்பதி பூஜை செய்து உற்றார், உறவினர்களின் நல்லாசிகளும் பெறுகிறார்கள். பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மணிவிழா காணும் பெற்றோர்களின் திருமணக் கோலத்தைக் கண்டு அவர்களின் ஆசீர்வாதங்களையும் பெற்று மகிழ்ச்சியடைகிறார்கள் என்றால் மிகையாகாது.

இத்துணை சிறப்பு வாய்ந்த "ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாக் காணும் சிவஸ்ரீ. யோகானந்தக்குருக்கள், மாலினி தம்பதிகள் மேன்மேலும் சிறப்புடன் வழமான வாழ்வு வாழவும், 70 வயதில் பீமரத சாந்தியும், 80 வயதில் சதாபிஷேகமும் நிகழ எங்கள் குலதெய்வம், இஷ்ட தெய்வங்களின் ஆசிகளையும் வேண்டி எமது நல்லாசிகளையும் கூறி வாழ்த்துகின்றோம்.

'லோகா சமஸ்தா சுகினோபவந்து'

நன்றியுடன்,

**சிவஸ்ரீ.சி.தியாகராஜக்குருக்கள்**
**ஜெயவதனி தம்பதிகளும்**
பிள்ளைகளும்.
மயிலணி,
சுன்னாகம்.
இலங்கை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# SRI RAJARAJESWARY AMMAN TEMPLE
## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்
Parasakthi Hindu Temple Trust
No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE Tel: 020 8393 8147


ஓம்
சிவமயம்

### வாழ்த்துச் செய்தி

### அறுபது அகவையை அடையும் மோகன் ஐயா என அடியவர்களால் அன்பாக அழைக்கும் அருள் மிகு யோகானந்த சிவாச்சாரியார்

உயர் திரு யோகானந்த சிவாச்சாரியார் ஈழவள நாட்டில் யாழ்பாணத்தில் சுழிபுர நல்நகரிலே அந்தணர் மரபில் உதித்தவர். உலகின் பல்வேறு பாகங்களிலும் எம்பெருமானுக்கு சேவை செய்யும் பாக்கியம் பெற்றவர். தென் மேற்கு சைவமக்கள் பெற்ற பெரும் பேற்றினால் அவர் அருள்மிகு இராஜராஜேஸ்வரி ஆலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சேவை செய்து வருகிறார். தினமும் இவரின் அருள் ஆசியைப் பெற ஆலயத்துக்கு பக்தர் கூட்டம் படையெடுக்கும். நாம் ஒருவருக்கு கெடுதலை செய்தால், அதற்கான பலனை அனுபவித்தே தீர்வோம் என ஐந்தாம் வேதமான மஹாபாரதம் வலியுறுத்துகிறது. இதை நன்கு உணர்ந்தவர் மோகன் ஐயா.

மோகன் ஐயா அதிமிகுந்த கடவுள் பக்தியுள்ளவர். அதற்கு அடுத்தாக அவர் அதிகம் நம்புவது உழைப்பை. உழைக்காமல் முன்னேற்றம் இல்லை – உயர்வு இல்லை. அதிருஷ்டம், யோகம் என்பதெல்லாம் கூட வெற்றிக்கு உதவும் படிகளே தவிர வெற்றி தரும் பாதைகள் அல்ல என்பது அவரின் அபிப்பிராயம். அதையே சொல்லித் சொல்லி தன் பிள்ளைகளை வளர்த்து பெரிய கல்விமான்களாக ஆக்கியுள்ளார். மனிதன் சிரத்தை மயமானவன். அவன், எந்தப் பொருளில் உடல், உள்ளம், ஆன்மா மூன்றையும் சேர்த்து தியானிக்கிறானோ அவன் அதே போல் ஆகிறான். இது இந்து மதக் கோட்பாடு. இதை நன்கு உணர்ந்தவர் அருள்மிகு மோகன் ஐயா அவர்கள்.

"பணிவுடையன் இன்சொல்லன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு அணிகலனாகப் திகழ்பவர் உயர்.திரு யோகானந்தசிவாச்சாரியார். இந்தப் பணிவினால்தான் மோகன் ஐயா வாழ்க்கையில் உயர்ந்துள்ளார். ஆலயத்தில் தனக்குரிய பணிகளை மிகச் சிறப்பாக செய்பவர் யோகானந்தசிவாச்சாரியார். அந்தப் பணிகளை சிறப்பாக ஆற்றி வாழ்வில் உயர்ந்து இன்று அறுபது அகவையை அடைந்துள்ளார். எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தணன் இம்சை செய்யக்கூடாது. அந்தணனுக்கு பொறுமை தான் ஆபரணம். கொல்லாமை, பொய் கூறாமை, பொறுமை, வேதங்களை மறவாமை இவைகளே அந்தணனுக்கு முக்கியமான இலட்சணம். இதை நியதி தவறாமல் கடைப்பிடிப்பவர் யோகானந்தசிவாச்சாரியார்.

சமயங்கள் யாவும் ஒருவனாய் இருக்கும் இறைவனையே தேடுகின்கிறன. அவனின் பாதமலரை அடைவதே வாழ்க்கையின் இறுதி இலக்கு. இவ் இலக்கை அடைவதற்கே ஞானஒளியினை ஒருவனின் அகத்தில் பிரகாசிக்க செய்வதையே இலக்காகப் கொண்டவர் யோகானந்த சிவாச்சாரியார். சமயநம்பிக்கை, சமயபக்தி, சமயசேவை ஆகிய மூன்றும் இணைவதால் பிறக்கும் சமயநெறியை, வாழ்க்கையில் அறநெறியில் இட்டுச்சென்று சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாக, ஒளிவிளக்காக விளங்குபவர் அருள்மிகு யோகானந்த சிவாச்சாரியார்.

அன்னார் இவ்வாலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சேவைசெய்து மக்களுக்கு வழிகாட்டியாக விளங்குகிறார். இதை எமக்கு கிடைத்த பெரும் பேறாக எண்ணுகிறோம். அவர் இன்று அறுபது அகைவையை அடைவதை இட்டு பெருமையடைகிறோம். அவர் ஆயிரம் பிறைகண்டு மேலும் பல்லாண்டு வாழ அன்னை அருள்பாலிப்பாள்.

அன்புடன்
இ.குணசிங்கம் - தலைவர், ஸ்ரோலி அம்மன் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வாகர்த்தா விவசம்ப்ருந்தன்
வாகர்த்த மலதி பத்தயெ
ஜகதள விதலள வந்தே
பார்வதி பரமேஸ்வராக

# மணிவிழா காணும் சுழிபுரம் சிவஸ்ரீ

# நடராஜயோகானந்த சிவாச்சாரியர்

நாள்: 25-01-2017

இடம்: ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

நமது வாழ்வில் ஒவ்வொரு காலகட்டத்திலும்
சிவவழிபாடு தொடர்பு செய்யப்படுகிறது.
குழந்தை பிறந்ததிலிருந்து ஜலககர்மாக்கள் செய்யப்பட்டு
விராயும், ஆச்சார்யஅபிஷேகம் செய்து
பின்சிவ ஆலயத்தில் உத்ஸவாதிகள் செய்ய அருகதை
உடையவராக ஆகின்றார். பின் 60வயதில்
ஷஷ்டியப்த பூர்த்தி நடைபெறும். விழாநாயகன்
பழகுவதற்கு இனிமையானவர் எப்போதும் சிரித்த முகத்துடன்
அன்போடு எல்லோரிடமும் பழகுபவர் பண்புள்ளவர்
பீமா சாந்தி, விஜயரதசாந்தி, சதாபிஷேகம், கனகாபிஷேகம், பூர்ணா அபிஷேகம் கண்டு வாழ்வில் வலம் பெற நான் அனுதினமும் பூரிக்கும் ஸ்ரீ சுளிகாம்பிகா சமோத சரண்புரீஸ்வரரின் அநுக்பிஷேகம் அன்னை ராஜராஜேஸ்வரிவின் திருவருள் பரிபூரணமாக கிடைக்க வேண்டுமாக பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
**சிவாகமவித்வான் ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி வேதசிவாகம்**
**பாடசாலை ஆசிரியர் (கோடம்பாக்கம்) சத்யோகாத விஸ்வநாத சிவாச்சாரியார்**
**சென்னை 110**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெனநீகெம ஸெனக்யானம் வர்த்தினி குலஸம் பநாம்

# பதிவ பூர்வ புண்யா நாம் லிக்ய தே நன்ம பத்திரிகை

பதவி புண்ணினம் பூர்வ ஜென்மத்தில் செய்த
புண்ணியம் தான் இப்போது நாம் அனுபவிப்பது
அதிலும் 60வயது சுக்கிரனின் பலம்
மறுபடியும் குழந்தை போல் வளர்ச்சியுண்டாகும்
சாபாதோஷலிமோகனம் அடைந்து சிறப்பாக
வாழ வேண்டி 60வது சுக்கிரனின் பலம்
மறுபடியும் குழந்தை பொல் வளர்சியுண்டாகும்
சாபாதோஷ லிமோகனம் அடைந்து சிறப்பாக
வாழவேண்டி 60வது ஆண்டு நிறைவு குத்தினத்தை
கொண்டாடும் சிவ ஸ்ரீ யோகானந்த சிவாசாரியார்
அவர்களுக்கும் சககவி கெனபாக்கியமெற்று
சதாபிஷேகமும் நடைபெறவேண்டி வாழ்ந்து
அன்புடன் தெரியபடுத்துகிறேன்.

சகல காரியம் சித்தி
***சிவஸ்ரீ K. P. இராமநாத சிவாச்சாரியார் குடும்பம்***
வெம்பிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாரதாபீட மங்களா மங்கள சேவை**

சிவப்பிரம்மஸ்ரீ: ராம். கெங்காதரக்குருக்கள் (மயிலையா)
*Sivabrammasri Ram: Gangadarakurukkal U.K 02086422204*
*59.Turn Pike Lane, Sutton. Surrey. SM1 4JJ. England. UK*



# ஷஷ்டியப்த பூர்த்தி விழா வாழ்த்துமடல்

**யாழ் தீவகம் சுருவிலை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீ வத்ஸ கோத்திரம் சிவாகம பானு சிவஸ்ரீ திரு திருமதி. நடராஜகுருக்கள் யோகனந்த குருக்கள், மாலினி தம்பதிகளின் (அறுபது அகவை காணும்) ஷஷ்டியப்த பூர்த்தி வாழ்த்து மடல்**

அறுபது அகவைகாணும் அன்புமிகு தம்பதிகள் சகலசீரும் பெருமதிப்புகொண்ட யோகனந்தகுரு மாலினி இருவரும் நாதமெனுமோசை நற்பேரிரண்டிலும் ஒலிப்பது போல் நல்லதொரு சொல்லும் பொருளுமாய் என்றும் இணைந:து அன்போடு வாழ்க.

ஆலமதை அமுதாக்கிய அம்மையும் ஆலகண்டனும் போல் அனைவரையும் அன்போடு அரவணைத்து அகமகிழும் தம்பதிகள். அந்தண சிரேஸ்டர்கள் அனைவரும் வேதமொடு பல்லாசிகள் கூற அன்னை ஸ்ரோன்லியதியாள் அருளோடு ஆயிரம் பிறைகண்டு ஆனந்தமாக வாழ்க.

சுகவாழ்வு கண்டு எழில்மேவி என்றும் வளமான இன்ப புதுராகம் பாடி உடலாலும் மனதாலும் ஒரு சேர உயிராகி பெருவாழ்வு கண்டு உறவாடி உயிரினும் மேலான பிள்ளைகள் மருமக்கள் பேரனோடு குலம் சிறக்க என்று வாழ்த்தி பசுபதி ஈஸ்வரனும் அவன் கருணையில் வந்த ஐயனார் திருவருளும் பெற்று நீடுழி வாழ்க

பண்பில் பணிவில் ஒப்பிலா யோக குருவாய் தத்துவங்கள் தெரிந்தும் வித்தக செருக்கிலா உணர்வாய் கண இமை காப்பது போல் மணாளனுக்கேற்ற இல்லத்தரசியாய் நட்பண்பு கொண்ட மாலினியாய் இருவரும் என்றும் வாழ்வின் முதன்மை பெற்ற வள்ளுவர் வாசுகி போல் நீண்ட புகழ் கொண்டு குலம் சிறக்க குவலயம் போற்ற குறைவில்லா ஆயுளோடு பல்லாண்டு சிறப்போடு வாழ்க வாழ்க

இவ்வண்ணம்

**சிவஸ்ரீ ராம்கெங்காதரக் குருக்கள்**

மயிலையா குடும்பத்தினர்

சாரதாபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா வாழ்த்து

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு”

என்னும் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவரின் பொன்மொழிக்கிணங்க அன்பும் பண்பும் நிறைந்த நற்குலப் பாரம்பரியம் நிறைந்த நிறைமொழி மாந்தர் மரபில் வந்த சிவஸ்ரீ யோகானந்தக்குருக்கள் - மாலினி தம்பதிகள் தமது 60வது வயதுப் பூர்த்தி மணிவிழாவைக் கொண்டாடுவதை அறிந்து மனம்மிக மகிழ்ந்தோம்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்றார் ஔவை. ஒரு மனிதன் தன் வாழ்விலே மனிதப் பிறவி யெடுத்ததன் நோக்கை அறிந்து அதன்வழி நன்நெறியில் ஒழுகி இல்லறத்தில் திளைத்து நன்மக்கட் பேறுடனும் நற் பண்புடனும் ஊரும் பாரும் போற்ற வாழும் போது தான் மற்றவர்களால் மதிக்கப்படுகிறான். தாமும் வாழ்ந்து மற்றவர்களுக்கும் அனுசரணை செய்து வாழ்தலே மானுட வாழ்க்கை. இத்தகைய சிறப்புக்கள் யாவும் கை கூடிய சிவஸ்ரீ யோகானந்தக்குருக்கள் - மாலினி தம்பதிகள் இன்று, சற் புத்திர சந்தான சகிதம் சீரும் சிறப்போடும் வாழ்ந்து இந்த மணிவிழாக் காண்பது அவர் தம் குலத்திற்குப் பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

இந்தப் பொன்னான பெருநாளில் நாமும் மணிவிழாத் தம்பதிகளை வாழ்த்துவதுடன் அவர்கள் வைரவிழா, பவளவிழா, சதாபிஷேகம், கனகாபிஷேகம் போன்ற விழாக்கள் யாவும் கண்டு நீண்ட ஆயுளோடு நோய் நொடியின்றிய நல்வாழ்வு பெற எல்லாம் வல்ல எம்பெருமான் எங்கள் குலதெய்வம் கும்பழாவளை விநாயகரைப் பணிகின்றோம்.

அன்புடன்,
**சிவஸ்ரீ. இராம. சூரியப்பிரபாகரக்குருக்கள்**
**ஸ்ரீமதி. பாலகௌரி குடும்பம்**
கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் யோகானந்தக் குருக்களின் ஷஷ்டியப்த பூர்ததி விழா

இலங்கை வளநாட்டின் சிரம் எனத்திகழும் யாழ் குடாநாட்டின் கண்ணே, சைவமும், பண்பாடும் செல்வமும் நிறைந்து விழுங்கும் "சுருவில்" எனும் பெருமை மிகுந்த ஊரில், பண்பிலும், படிப்பிலும், குருத்துவத்திலும், வசீகரம் மிகுந்த தோற்றத்தாலும், அன்பிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கிய சிவஸ்ரீ. நடராஜக் குருக்களினதும், பொறுமையும் பொலிவும், சீலமும் சிறப்பும் மிகுந்து விளங்கிய அன்பிற் சிறந்த குவைதி திருமதி. யோகாம்பாளுக்கும் செல்ல மகனாகப் பிறந்தவர் "மோகன்" அவர்கள் ஊரவர்களாலும் ஏனையோராலும் "மோகன் குருக்கள்" என அழைக்கப்படும் இவர், எல்லோருக்கும்" இனியவராகவும், குருத்துவத் தகுதி நிறைந்தவராகவும் விளங்குகின்றார்.

இவரது சிறந்த வைதீக ஆகம குருப்பணித் தொண்டினை அறிந்த லண்டன் ஸ்ரோன்லி அம்மன் ஆலய நிர்வாகிகள் தங்களது கோவிலில் குருவாக்கி பெருமையும், புகழையும் சேர்த்துக் கொண்டனர். இறைவன் திருமேனியைத் முப்பொழுதும் தீண்டும் பாக்கியம் பெற்ற அந்தணப் பெருமக்களில் ஒருவராக விளங்கும் சிவஸ்ரீ. யோகானந்தக் குருக்கள் லண்டன் வாழ் தமிழ் மக்களின் அன்புக்கு பாத்திரமானார் இவரது குணநலன் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அடியவர்களைக் கவரும் தன்மையானதாகும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கம்
செந்தண்மை பூண்டொழுகலான்"

செந்தண்மை பூண்டொழுகலான்" எனும் பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கு அமைய ஆலயங்களில் பூஜை, மஹோற்சவங்களுடன் தொடர் புன்னதனதனாலி பெருமனவான் சைவ மக்களுடன் பழகும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இவர் சிறந்த சிவாச்சாரியராக, குடும்பத்தலைவராக, பொதுமக்களின் அன்பைப் பெற்றவராக பிரகாசிப்பதற்கு மூலகாரணமாக இவரது துணைவியாரே இருந்து வருகின்றார். மனையறம் காத்த மங்கையர் என பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவது இந்த அம்மையாருக்கு பொருந்தும்.

அன்பும், பண்பும் மற்றவர்களின் மனமறிந்து நடக்கும் இயல்பான குணமும், பொறுமையும் ஒருங்கே அமைந்த சிவஸ்ரீ யோகானந்தக் குரு அவர்களது ஷஷ்டியப்த பூர்த்தி இனிதே நடைபெற ஸ்ரோன்லி அம்மன் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

வாழ்க வளமுடன்!

**பகவதீஸ்வரன் – புஷ்பராணி**
பாரிஸ் - பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளினாலும் நாம் முற்பிறவியிலே செய்த பெரும் புண்ணியத்தினாலும் எமது மூதாதையர் செய்த தவத்தினாலும், புண்ணியத்தினாலும் பிறவியிலேயே அரியதாகிய மானிடப் பிறவியினை எடுத்துள்ளோம். அதனினும் அரிதாகிய முப்பொழுதும் இறைவனின் திருமேனி தீண்டி அபிஷேகம், அலங்காரம் செய்தும், வேத மந்திரங்களை ஓதும் சிவாச்சார்ய வம்சத்தில் பிறந்தது பெரும் பாக்கியமாகும்.

இத்தகைய சிவாச்சார்ய சிறப்புகள் நிறைந்த சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுருவிலை வதிவிடமாகவும் வாழ்ந்த இலங்கையின் புகழ் பூத்த சிவாச்சார்யார் சுருவில். நடராஜக்குருக்கள்-யோகாம்பாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், எங்கள் எல்லோரினதும் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய மோகன் குருக்கள் என எல்லோரும் அன்புடன் அழைக்கும் சிவஸ்ரீ. யோகானந்தக்குருக்கள்- மாலினி (மாது அக்கா) தம்பதிகளுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி மணிவிழா 25.01.2017 அன்று நடைபெறுவதை அறிந்து அகமகிழ்ந்து பெருமகிழ்வு அடைகின்றோம்.

சிவஸ்ரீ. மோகன் குருக்கள் அவர்கள் தாயகத்தில் வாழும் காலத்தில் தன் சிறுவயது முதல் தந்தையாருடன் உடனிருந்து சுருவில் ஐயனார் ஆலய வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றியதுடன் தந்தையாரின் மறைவின் பின்னர் முழுமையான ஆலயப்பணியுடன் சுருவில் மக்களின் வாழ்வுடனும் அவர்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களையும் சிறப்புடன் செய்து சுருவில் மக்கள் அனைவரது உள்ளங்களிலும் இடம்பிடித்து ஊர்மக்களின் பாராட்டுக்குரிய பெருமைமிகு குருக்களாக விளங்கினார் என்பதை கனடா வாழ் சுருவில் மக்கள் மூலம் அறிந்து பெருமையடைந்தேன். பின்னர் நாட்டுச்சூழல் காரணமாக புலம் பெயர்ந்து லண்டன் ஸ்ரோன்லி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய சிவாச்சார்யாராக சிறப்புடன் குருத்துவப் பணியினைச் செய்து வருவதுடன் குலதெய்வமாகிய சுருவில் ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பணியினையும் செய்து வரும் பெருமைக்குரியவர்.

இவருடைய குருத்துவ, ஆன்மீக சேவைக்கு மிகவும் பக்கபலமாக விளங்குபவர் இவரது துணைவியார் மாது அக்கா அவர்கள். அவரது திறமைமிக்க குடும்ப நிர்வாகச் செயல்திறனும், உறவினர், சுற்றத்தவர் அனைவரையும் தன் அன்பினால் அரவணைத்து "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பார்கள், அந்த வகையில் நான்கு ஆண்பிள்ளைகளையும், ஒரு பெண் பிள்ளையினையும் நல்லமுறையில் வளர்த்து கல்வியறிவூட்டி நல் இல்லற வாழ்வு அமைத்துக் கொடுத்து பேரப்பிள்ளையும் கண்குளிரக் கண்டு அகமகிழ்ந்து வாழும் தம்பதிகள் இன்று போல் என்றும் மகிழ்வுடனும் நல்ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு வாழ தங்கள் பாதம் பணிந்து வணங்கி வாழ்த்துகின்றோம்.

என்றும் அன்புடன்

சிவஸ்ரீ.பஞ்சாட்சரவிஜயகுமாரக்குருக்கள்–ஜெயந்தி குடும்பத்தினர்
ரொறன்ரோ– கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VEDAGAMA SABHA

வேதாகம சபா ஐ.ரா

602a Romford Road, London E12 5AF
Tel: +44-20 3441 1148 Email: sharma@vedagamasabha.org.uk
Registration Number: 1072936


வேதாகம சபா வழங்கும் வாழ்த்து

ஸ்ரீ வஸ்த கோத்திரத்தில் லண்டன் ஸ்ரோன்லி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய குருக்கள் சிவஸ்ரீ ந. யோகானந்தக் குருக்கள் ஸ்ரீமதி மாலினி தம்பதிகள் தமது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை கொண்டாடுவதை அறிந்து வேதாகம சபா மகிழ்ச்சி அடைகின்றது. ஆரம்ப காலத்தில் லண்டன் உயர்வாசல் குன்று முருகன் கோவிலில் பணிபுரிந்து பின்னர் தற்போது ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலில் குருவாக பணிபுரியும் இவர் அன்பர்களின் அன்பையும் அபிமானத்தையம் பெற்று சிறந்த குருவாக உள்ளார். புன்முறுவல் தவழும் வதனம், அன்பான பேச்சு, தயாள குணம் போன்ற சிறந்த குணங்களை கொண்ட இவருக்கு இவரது துணைவி ஸ்ரீமதி. மாலினி அவர்கள் சிறந்த துணையாக இருந்து இவரது இல்லற கடமைகளை செய்ய உறுதுணையாக உள்ளார். இப்படி பல சிறந்த குணங்களை உடைய இவர்கள் இன்னும் பல நூற்று ஆண்டு காலம் சிறப்புடன் வாழ வேதாகம சபா வாழ்த்துகின்றது.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், பறாளை, சுழிபுரம்
# Sri Siva Subramaniya Swamy Kovil, Paralai, Chulipuram



வாழ்த்துரை

சுழிபுரம் குடியிருப்பு அந்தண பரம்பரையில் சிவஸ்ரீ நடராஜகுருக்கள் ஸ்ரீமதி யோகாம்பாள் தம்பதிகளின் கனிஷ்டா புதல்வனும் சுருவில் ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் கோவில், பொன்னாலை ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் போன்ற ஆலயங்களின் பரம்பரை குருக்கள் மோகன் ஐயா என எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள் ஸ்ரீமதி மாலினி தம்பதிகள் தமது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை கொண்டாடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். அந்தணர்களுக்கு உரிய பல நற்பண்புகளை தன்னத்தே கொண்ட இவர் யாழ்பாணத்து பல ஆலயங்களில் தமது குருத்துவ பணிகளை செய்து அப்பகுதி மக்களின் அன்புக்கு பாத்திரமாகியுள்ளார். நாட்டில் ஏற்பட்ட இன்னல் காலத்தில் இவர் சுருவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை. கொழும்பு போன்ற இடங்களில் உள்ள கோவில்களில் பணிபுரிந்து தற்போது லண்டன் நகரில் ஆலயகுருவாக பணிபுரிந்து வருகின்றார். இவருக்கு ஸ்ரீமதி. மாது அவர்கள் தகுந்த ஒத்துழைப்பு வழங்கி இவரது பணிகளை சிறப்படைய செய்கின்றார். உரிய காலத்தில் தனது பிள்ளைகளுக்கு கல்வி செல்வத்தை வழங்கி தகுந்த துணைகளை தேடி திருமணம் செய்துவைத்து அவைதனில் முந்தி இருக்க செய்து தற்போது ஷஷ்டியப்த பூர்த்தி விழாவினை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்றனர். இவர்கள் இன்னும் பீமரத ஷாந்தி, சதாபிஷேகம் போன்றவற்றை கொண்டாட வாழ்த்தி எம்பெருமான் பறாளை முருகளை திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

**மு. பாலகுருசாமி சர்மா**
பறாளை
சுழிபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை

## J/Ariyalai Pirappankulam Mahamari Amman Kovil Managing Society

85,ElanthiKulam Road,
Ariyalai – Jaffna,
Srilanka.

பதிவு இல : Regd . No : HA / 5 / JA / 629

85, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை – யாழ்ப்பாணம்.
சிறீ லங்கா.

இணையத்தளம் : www.arimahaamman.com

மின் அஞ்சல் : ari.maha.amman@gmail.com

திரு. சு. கமலநாதன்
தலைவர்
President

திரு. இ. ஜயூரன்
கௌரவ செயலாளர்
Hon. Secretary

திரு. ஆ. நா. செல்வராசா
கௌரவ பொருளாளர்
Hon. Treasurer


16-12-2016

## மணிவிழா வாழ்த்து

***அம்பலத்து ஓசைபோல் காலமெல்லாம் வாழியவே!***

……………………………………………………………………………………

வானுயர்ந் தோங்கிநிற்கும் வளமுடைக் காவினாலே
தேனுடைக் கனிகளோடு தென்றலும் தேடிவந்து
பூவிறைத்தாடுகின்ற புவிமிசை எழில் ஆலயங்கள்
தானிறைந்தருளுகின்ற திருமிகு அரியாலையூரில்

நீர்நிறைந்தாடுகின்ற பிரப்பங்குளம் மகாமாரியவள்
முப்போது திருமேனி தீண்டி அபிஷேக ஆராதனை செய்ய
மூவரில் ஒருவரே இவரென, யாவரும் மனதால் மகிமைகொள
மலையென மாண்பு கொண்ட யோகானந்தக் குருக்கள் கண்டோம்

பக்குவமாய் பதம்பணிந்து, அன்னையவள் அன்புபெற
முன்னின்று தனைஉருக்கி அன்னையுடன் சேர்த்து கைதொழ
ஏற்றமாய் நல்கும் எழிலான உச்சாடனம்
நீக்கமற எம்மில் இப்போதும் கேட்குது காண்

தாயாய், தந்தையாய், மஷோற்சவ குருவாய்
இராஜகோபுர கலசநீராட்டின் பிரதமகுருவாகி
ஐயா, நீர் ஆற்றிய பணிகளை எந்நாடு சென்றாலும்
எம்மக்கள் மறப்பாரோ, ஏட்டிலும் எழுத முடியாபெருந்தகையே

தெள்ளிய மேகமாகத் திரண்டிடும் இனிய உள்ளம்
துள்ளிய கங்கையோடு துடியமான் கொண்ட எம்மான்
அள்ளிய பாதியாக அமைந்தநல்லுமையுமாகி
வெள்ளியாய் மாதர்குல மாலினியுடன்,

அம்பலத்து ஓசைபோல் காலமெல்லாம் வாழியவே!

கவிஆக்கம் - திரு.வை.க.ரவீகரன்
சுண்டுக்குழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாச் சிறக்க மனமார வாழ்த்துகிறோம்

எங்கள் அன்பிற்குரிய இளைய சகோதரன் சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள் (மோகன்) அறுபதாம் அகவையில் "ஷஷ்டியப்த பூர்த்தி விழா கொண்டாட இருப்பதையிட்டுப் பேருவுகை அடைகின்றோம். எம் தந்தையின் குருத்துவப் பணியைத் சிறப்புடனே அவர் தொடர்ந்து மேற்கொண்டு தன்நாட்டில் மட்டுமன்றி லண்டன மாநகரிலும் தனக்கென ஓர் தனித்துவத்தைப் பதித்துக்கொண்டவர். அவரது அடக்கமும் பணிவும் மூத்தோரை மதிக்கும் பாங்கும் எளிமையான தோற்றமும் எல்லோராலும் விரும்பப்படும் சுபாவங்களாகும். அவருக்கெற்றாற்போல் நல்ல மனையாளும் வாய்க்கப்பெற்றமை அவருக்குக் கிடைத்த பாக்கியமாகவே கருதவேண்டும்.

"ஷஷ்டியப்த பூர்த்தி வேளையிலே ஒரு விடயத்தினை நினைவு கூற விரும்புகிறேன். அவரது ஆச்சார்ய அபி'கம் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் சுருவிவில் கொட்டும் மழையின் மத்தியில் நிகழ்ந்த நேரத்தில் உற்றார், உறவினருடன் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி விழாவைச் சிறப்பித்தனர். இவ்வைபவத்தினை ஈழத்தின் புகழ்பெற்ற மூத்த குருமார்களான சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள், Dr. நா. சோமாஸ்கந்தக் குருக்கள், நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் என்போர் முன்னின்று நடாத்தியமை மிகவும் பெருமைக்குரிய விடயமாகும்.

அவரதும் பாரியாரதும் நற்பண்புகள் காரணமாக பிள்ளைகளுக்கச் சிறப்பான மணவாழ்க்கை அமையப் பெற்றுள்ளன. அவர் மென்மேலும் பல மகோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள், ஆன்மிகப் பணிகளை ஆற்றி மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் நிறைவான வாழ்வு வாழ எல்லாம் வல்ல சுழிபுரம் ஓடையம்பதி பாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டுவதுடன், அவரது விழா முத்தாக, பவளமாகப் பரிணமித்து நீடுழி வாழ வாழ்த்துகிறோம்.

**பிரம்ம ஸ்ரீ ந. பத்மநாப சர்மா**
**விமலா தம்பதிகள்**
52, கடையிற்சுவாமி ஒழுங்கை
நீராவியடி, யாழ்ப்பாணம்

# வாழ்த்துகிறோம்

சஷ்டியப்த பூர்த்தி விழா காணும் எமது அன்பு கடைசி தம்பி மோகன் (சிவஸ்ரீ. யோகானந்த குருக்கள்) ஸ்ரீமதி மாலினி அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் தெரிவித்து கொள்ளுகின்றோம். எமது தந்தையார் சுவர்க்க ஸ்ரீ நடராஜ குருக்கள் அவர்களின் வழியில் குருத்துவ பணியை எல்லாம் வல்ல சுருவில் ஐயனாரின் ஆசியுடன் எமது தம்பி மிகவும் சிறப்பாக செய்து வருகிறார். நீவீர் இருவரும் நோய் நொடியின்றி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம்.

இங்கனம்

**சிவஸ்ரீ. ந, ராமகிருஷ்ணா சர்மா (ராசு அண்ணா )**
**ஸ்ரீமதி. ரா.ஜெகதீஸ்வரி தம்பதிகளும் பிள்ளைகளும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழா







சிவஸ்ரீ.ந.யோகானந்தக்குருக்கள் ஸ்ரீமதி.யோ.மாலினி அம்மா

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸர்வ மங்களகரமான துர்முகி வருஷம் தை மாதம் 12ஆம் நாள் (2017.01.25) புதன்கிழமை மூல நட்சத்திரமும் திரயோகதசி திதியும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில் "லண்டன் மாநகர் இராஜேஸ்வரி அம்மன் ஆலய மண்டபத்தில்" நடைபெறும் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழாக் காணும் நாயகர்களுக்கு வழங்கிய

## மனமார்ந்த வாழ்த்துப்பா

எழில் நிறைந்த இனிய நன்நாடாம் நம் இலங்கைத்திவின்
திகழ்ஒளி பரப்பும் வடதேசத்தின் மணிமகுடமான சீரமேவும் யாழ்ப்பாணத்தில்
அலைகடல் தரைதடவும் அழகுறு பருத்தித்துறை நன்நகரினில்
சிவஸ்ரீ இராமநாதகுருக்கள் அமிர்தேஸ்வரியம்மாவின் மகளாகவும்
என்னருமை தங்கையாகவும் இப் பூமியில் அவதரித்த ஸ்ரீமதி மாலினி அம்மா அவர்களுக்கு

நிறைஎழில் திளைத்திடும் கலைமகள் தனிலே நினைவது நிலைத்திடும்
புவிதனில் சிறந்து கலைபல காத்திடும் மண்ணினில் சிறந்த
சிலைபல கொண்ட யாழ்ப்பாணமதின் அந்தப்புரங்களின் அரசனான சுழிபுரத்தின்
நடராசாக்குருக்கள் யோகாம்பாள் அம்மாவின் புதல்வனாய் அவதரித்து
சுருவில் ஐயனார் கோவிலை அரவணைத்த என்னருமை மைத்துனரே
யோகம் பல நிறைந்த சிவஸ்ரீ யோகானந்த குருக்கள் அவர்களே!

நீவீர் இருவரும் இல்லறத்தில் நல்லறம் காத்து முப்பது வருடங்களில் கால்பதிக்கும்
இவ் இனிய நன்நாளில்........
இனிமைகள் பலவும் என்றும் நிலைத்திட
நினைவுகளின் நிழலாக நீவீர் இருவரும்
செய்த நற்தொண்டுகள் சிறப்புடன் பலன்தர
புதியவை என்றுமே புதுயுகம் படைத்திட
இறைதொழில் நிறைவுடன் இல்லற பயனாய்
பெற்ற பிள்ளைகளின் மகிழ்வுடன் வாழ்ந்திட
நற்பல நினைவுகள் நாளும் நிலைத்தே
நற்குடியாக வாழ்வீர்! வாழ்வீர்!

நானிலம் போற்றிடும் விநாயகர் அருளினால்
நலன் பல பெற்று நிறைவது கண்டு
புதுமண தம்பதிகள் போல் என்றும் புலப்பட
புஜம் பலம் பெற்று புகழ் தனில் ஓங்கி
நிஜம் இது என்று நிறைகழல் நாடி
புலம்பெயர் நாட்டில் புதுமைகள் பல கண்டு
நிறைவது வாழ்வினில் நிலையாய் நிலைத்திட
உறவது கொண்டு இனிதே வாழ்த்துகின்றோம்
வாழிய! வாழிய!! வாழிய!!!

சுபம்

109, தும்பளை வீதி,
பருத்தித்துறை.



என்றும் மனமார வாழ்த்திடும்
திரு.திருமதி.வை.ஆனந்தசுப்பிரமணிய சர்மா
(ஓய்வுபெற்ற அரச ஊழியரும், சோதிட ஆய்வாளரும்)

தீபன் பதிப்பகம், பருத்தித்துறை. T.P No: 0776520515

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*Siva Shri*

***V. Ramanatha Vakeeswara Kurukkal***

*Hindu Priest*

*9 Warlingham Road, Thornton Heath, Surrey, CR7 7DF, 0208 6898679*

# ஷஷ்டியப்தத பூர்த்திவிழா
# காணும் தம்பதிகளுக்கு எங்கள் ஆசிகள்
# விப்ர சிரேஷ்டர்...

சிவஸ்ரீ நா. யோகநாதக்குருக்கள் அவர்கட்கு

விப்ர என்ற சொல் அந்தணரைக் குறிக்கும் சிரேஷ்ட எனும் சொல் உயர்வைத் தகும் விப்ர சிரேஷ்டர் என்ற சொல் அந்தணப்பெருமக்களுள் உயர்வாக விளங்குபவர் என்ற பொருள்படும். முயற்சி கெடபுத்தனம் தைரியம் புத்தி சந்திவீரம் இந்த ஆறும்யாரிடம் இருக்கிறதோ அவரிடம் தேவத்தன்மை பிரகாசிக்கும் இப்பெருமகன் இவரோடு சகதர்மினியாக பர்ததாவிற்கு ஏற்றவாறு ஒன்றிணைந்து வாழ்ந்துவருபவர் இவர் தர்ம பத்தினி மாலினி அவர்கள், கணவனுக்கு நான் கூறியவரைவிலக்கணங்கள் பொருந்தும் இவர்களுடை குலதெய்வம் கருணை கடலாகிய சுருவில் ஐயனாருடை திருவருளும் லண்டன் ஸ்ரோலி ராஜராஜேஸ்வரியின் அருள் கடாக்ஷம் கிடைத்து இத்தம்பதிகள் பிள்ளைகள் ஐவருடனும் மரமக்கள் நால்வருடனும் இன்னும் பல பேரப்பிள்ளைகளுடனும் பல காலம் வாழ எல்லாம் வல்ல எமது குலதெய்வமாகிய பருத்திந்துறை பசுபதீஸ்வருடன் உடனுறை பர்வபத்தினியிணின் பிராத்தனை செய்து வழிபடுகிறேன்.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து

**சிவஸ்ரீ இராமநாத வாகீஸ்வர குருக்கள்**
**ஸ்ரீமதி வத்சலாதேவி தம்பதிகள் மற்றும் பிள்ளைகள்**

# பல்லாண்டு காலம் வாழ்க...

சஷ்டியப்த பூர்த்தி விழா காணும் அன்பு மோகன் அத்தான், மாது அக்கா அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு உங்கள் ஆசிர்வாதத்தையும் வேண்டி நிற்கின்றோம். அன்பால் அனைவர் மனம் வென்ற எங்கள் அன்பு அத்தான், அக்கா நீங்கள் இருவரும் சந்தோசமாக பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கின்றோம்.

**தம்பி ரமேஷ், கண்ணு மற்றும் பிள்ளைகள்**
அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

அகவை 60 காணும் மைத்துனர் மோகன் மாது தம்பதிகளை ஆசீர்வதிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேம். சுருவில் ஐயனார் தேவஸ்தானத்தில் சிறுவயது முதல் தந்தையாருடன் குருத்துவத்தினை அனுபவரீதியாகவும் தமயனார் சுழிபுரம் சோமாஸ்கந்தக்குருகளின் வழித்துணையுடன் வளர்ந்தவர் மோகன் குருக்களாவர்.எமது விவாகஷோபனத்தில் தோழனாக கைபிடித்த பசுமையான நினைவுகள் இன்றும் மனதில் உள்ளது.

எமது சிவாலயத்தில் பலமுறை மகோற்சவங்களை நடாத்தியுள்ளார். அமைதியின் உறைவிடம். அன்பின்பிறப்பிடம். பாசத்தின் பாத்திரம் என எல்லாம் மோகனுக்கே பொருந்தும். மோகன் என செல்லமாக அழைக்கும் யோகானந்தக் குருக்கள் அவர் மனைவி மாலினி தம்பதிகள் இன்னும் பல்லாண்டு காலம் நீடுழி வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரப் பெருமானை பிரார்த்தித்து எமது ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீ.ஸ்ரீமதி. சபாரத்தினசர்மா வடிவாம்பிகை தம்பதிகள்**
சிவன் கோவில்
சித்தன்கேணி

---

# மாமா மற்றும் மாமியை வணங்குகின்றோம்

மோகன் மாமா மாது மாமி தம்பதிகள் இன்று ஷஷ்டியப்த பூர்த்தியினை கொண்டாடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். மாமா என்று அன்பாக அழைத்தால் மாமாவின் முகத்தில் தோன்றும் மலர்ச்சியே கோபமாக கூப்பிட்டாலும் காணப்படும். அந்தளவிற்கு பாசமுள்ளவர். அதே போல அமைதியானவர். எமது சிறுவயதில் விடுமுறை நாட்களில் சுருவிலில் தங்கிநின்ற நாட்களில் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு தான் பூஜை ஆற்றும் ஆலயங்களுக்கு எம்மையும் அழைத்துச்செல்வதும் ஈச்சம்பழம் பிடுங்க செல்வதும் இன்றும் ஞாபகம் இருக்கின்றது.மாமியின் விருந்தோம்பல் பண்பு சிறப்பானதாகும். சுருவிலைவிட்டு வெளியேறினாலும் அவர்கள் பிறருக்கு உதவும் பண்பாடு மாறவில்லை.

இன்று லண்டனில் இருந்தாலும் அனைவரினது அன்புக்கும் உட்பட்டவர்கள். மோகன் மாமா மாது மாமி பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுன் பல்லாண்டுகள் வாழ சிரம்பான் ஸ்ரீ மகாமாரியம்பாளை பிரார்த்தித்து அவர்களது ஆசீர்வாதம் என்றும் எமக்கு கிடைக்க வேண்டிநிற்கின்றோம்.

**ஸ்ரீ.ஸ்ரீமதி. கோபாலக் குருக்கள் வைதேகி தம்பதிகள்**
**ஸ்ரீ. ஸ்ரீமதி. வாசுதேவக்குருக்கள் சாரு தம்பதிகள்**
**ஸ்ரீ. ஸ்ரீமதி. உமாபதி சர்மா வாசுகி தம்பதிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறத்தின் இனிய நல்மாதிரி

எங்கள் தந்தையின் இளைய சகோதரர், எமது அன்புக்கும் மதிப்பிற்குரிய சித்தப்பா அவர்களுக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடைபெற இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. அகவை அறுபதை எய்திய சித்தப்பா அவர்கள் இனியசுபாவம், இன்சொல், பிறரை மதிக்கும் தன்மை, அடக்கம், கடவுள் பக்தி போன்ற நற்பண்புகளால் எல்லோர் மனதையும் கவர்ந்தவர். இல்லறம் எனும் நல்லறவழியில் உயர்வாகவும் நிறைவாகவும் வாழ்ந்து இன்று தன் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், புதிய வரவான பேரன் வித்யுத் உடன் ஷஷ்டியப்பபூர்த்தி விழாவினைக் கொண்டாடும் தருணத்தில் வெளியிடப்படும் மணிவிழா மலர் மூலம் எமது அன்பினைத் தெரிவிப்பதில் அகமகிழ்வடைகிறோம்.

சித்தப்பா என்று சொல்லும்போதே அவரின் நிழலென, வாழ்வின் வெற்றிக்கு வித்தாய், சுமைதாங்கியாய், பாசமிகு தாயாய் விளங்கும் சித்தியும் எமது மனக்கண்ணில் தெரிகிறார். சொந்தம், பந்தம், உறவு என்று சொல்லப்பவர் இருக்கையிலே எங்களுக்கு சித்தப்பா, சித்தி உறவானது மிகவும் தனித்துவமானது ஏனெனில் குழந்தைகள் பெற்று குடும்பமாக நாம் வாழும் இந்நிலையிலும் எமது பள்ளிப்பருவ நாட்களை நினைக்கும்போது எப்போது விடுமுறை வரும் எனக் காத்திருந்த தருணங்களை நினைத்துப்பார்க்கிறோம். பாடசாலை லீவு நாட்களில் சுருவிலுக்குச் செல்லும்போது அங்கே தாத்தா, பாட்டி வீட்டிற்கும் பேரப்பிள்ளைகள் எல்லோரும் வந்துவிடுவார்கள். எப்படி ஒரு மாத லீவு கழிந்தது எனத்தெரியாமல் கவலையுடன் அங்கிருந்து திரும்பும் வகையில் சித்தியின் அன்பான உபசரிப்பும் அறுசுவையுடனான அவரது சமையல் கைவண்ணமும் எம்மை ஈர்த்துவிடும். எவ்வித சலிப்பும் இன்றித் தனது சின்னக் குழந்தைகளுடன் எங்கள் எல்லோரையும் கவனித்து தாத்தா பாட்டிக்குரிய கடமைகளையும் செவ்வனே செய்து வீட்டு வேலைகளை பம்பரம் போல் செய்து முடிப்பார். அவர் ஓய்வெடுத்த நேரம் எப்போது என்று இன்றுவரை எனக்குத் தெரியவில்லை. உண்மையிலேயே மருமகள் என்றால் Model அவராகத் தான் இருப்பார்.

சித்தப்பா, சித்தி இருவருமே தங்கள் குடும்பங்களில் கடைசிப்பிள்ளைகளானபடியால் தமது மூத்த சகோதர சகோதரிகளின் பாசத்திற்கும் அன்பிற்கும் கட்டுப்பட்டவர்களாக எங்களுக்கு வழிகாட்டிகளாக வாழ்கிறார்கள்.

அவர்கள் நாட்டின் அரசியல் சூழலினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் காரணமாக பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தபோதும், சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுத்தன் மூலம் இன்று தமது பிள்ளைகளை வாழ்வில் தன்னிலைக்கு உயர்த்தி தமது கடமைகளைச் செவ்வனே செய்து வெற்றிகரமான உதாரண தம்பதியினராய் விளங்குகின்றனர். அவர்கள் எல்லா நலன்களும் பெற்று நோயற்ற நீண்ட வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

***பிரம்மா ஸ்ரீ ப. விமலநாத சர்மா ஸ்ரீமதி உமாமகேஸ்வரி குடும்பம்***

***பிரம்மா ஸ்ரீ ப. பாஸ்கரசர்மா ஸ்ரீமதி கோமதி குடும்பம்***

***சிவஸ்ரீ ச. மு. பாஸ்கரக்குருக்கள் பத்மஜா குடும்பம்***

***பிரம்மஸ்ரீ யோ. யோகரஞ்சசர்மா சைலஜா குடும்பம்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழா







சிவஸ்ரீ.ந.யோகானந்தக்குருக்கள் ஸ்ரீமதி.யோ.மாலினி அம்மா

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸர்வ மங்களகரமான துர்முகி வருஷம் தை மாதம் 12ஆம் நாள் (2017.01.25) புதன்கிழமை மூல நட்சத்திரமும் திரயோதசி திதியும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில் "லண்டன் மாநகர் இராஜேஸ்வரி அம்மன் ஆலய மண்டபத்தில்" நடைபெறும் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழாக் காணும் நாயகர்களுக்கு வழங்கிய

## மனமார்ந்த வாழ்த்துப்பா

அழகுறு எழில் சோலை கொள் இலங்கை தீவின்
யாழிசை மேவும் யாழ்ப்பாணமதின் தலையாம்
பருத்திமா நகரினில் சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள்
அமுதேஸ்வரியம்மாவின் புதல்விகளில் ஒருத்தியாகவும்
எனதருமை தங்கையாகவும் இப் பூமியில் வந்துதித்த
ஸ்ரீமதி மாலினி அம்மாவிற்கும்........

இனிமையுடன் இசைந்தே கலைபல கொண்ட
களிமுக வேலின் கருணை கண் படும்
யாழ்ப்பாணத்தின் எட்டய புரங்களில் ஒன்றான
சுழிபுரத்தின் நடராசக்குருக்கள் யோகம்பாளம்மா
தம்பதியருக்கு புத்திரராய் அவதரித்த எமதருமை
மைத்துனரே யோகம் பல கொண்ட
யோகானந்தக் குருக்கள் அவர்களிற்கும்........

இருவரும் என்றும் இல்லறத்தில் இணைந்து இனிய
முப்பத்துமூன்று வருடங்கள் கடந்த இவ் வேளை தனில் .........

தேனினை சொரியும் இழகிய பூக்களை
வண்டுகள் என்றுமே வட்டமிடும் அதுபோல்
நீவீர் இருவரும் இல்லறத்தில் நல்லறம் காத்து
நானிலமும் போற்றிடும் நாயகர்களாக
புதுமைகள் கண்டிடும் புரவர்களாக
நிறைவுகள் கொண்ட நிபுனர்களாக
வித்தைகள் காட்டிடும் வித்தகர்களாக
கலைமகள் அருளினில் நலம் பல பெற்று
தளிர்ந்திடும் ஆல் போல் என்றுமே
நிலை பல பெற்று நித்தமும் விளங்கிடும்
கலைமகள் துணை கொண்டு வாழ்த்துகின்றோம்
வாழிய ! வாழிய !! வாழியவே !!!

சுபம்

என்றும் மனமார வாழ்த்திடும்
திருமதி.சசிதேவி குமாரக்குருக்கள்,
மதன் குடும்பமும்

தீபன் பதிப்பகம், பருத்தித்துறை. T.P No: 0776520315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷ்டியப்த பூர்த்தி காணும்
# எனது சிறிய தந்தையார்
# சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் யோகானந்தக்குருக்கள்

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்!
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே,
சூழ்க வையகமும் துயர் தீர்கவே."

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கம் செந்தண்மை பூண்டொழுகலான்" என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கமையச் செந்தண்மையும் இன்சொல்லும் நிரம்பப்பெற்றவர் மோகன்" சித்தப்பா அவர்கள்.

எங்கள் அருமைத் தாத்தாவின் உத்தம வாரிசாகத் திகழ்வதோடு, அவரின் சிறந்த குண இயல்புகளையும் செயற்றிறனையும், கல்வி கேள்வி ஞானத்தையும் பெற்றவராக விளங்குபவர் என்று அனைவராலும் விதந்துரைக்கப்படுபவர் மோகன் சித்தப்பா அவர்கள்.

" மூர்த்தி சிறிது என்றாலும்
கீர்த்தி பெரிது!" என்பது போல்

உருவத்தில் சிறியராயினும், பேரும், புகழும் மிகுந்த அளவில் சிறியராயினும், பேரும், புகழும் மிகுந்த அளவில் பெற்று, நன்மதிப்புடன் வாழ்பவர். இறைவன் திருவருளால் மோகன் சித்தப்பா சகல நலமும் பெற்று, நீடுழி வாழப் பிரார்த்திக்கின்றேன்.

" உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்!

சுபம்

இவ்வண்ணம்
**பிரம்ம ஸ்ரீ சோ. ஜெயக்குமார் குடும்பத்தினர்**
பாரிஸ்
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றோம்

எமது அன்புக்குரிய தம்பி மோகன் (சிவஸ்ரீ. யோகானந்த குருக்கள்) ஸ்ரீமதி. மாலினி அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி நடைபெறுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அன்பாலும் பாசத்தாலும் எங்களை கவர்ந்த அன்பு தம்பி மோகனும் மாதுவும் இறைவன் அருளால் நீண்ட காலம் நோய் நொடியின்றி பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை பிராத்தித்துஎங்கள் ஆசிகளையும் தெரிவித்து கொள்ளுகின்றோம்.

வாழ்த்தி ஆசிர்வதிக்கும்

**சத்யோயாத அத்தான், வித்தியா அக்கா**
**பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரும்**

---

உ
சிவமயம்

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா

ஷஷ்டியப்த பூர்த்தி விழாக்காணும்
எமது அன்புத் தம்பி
சிவஸ்ரீ யோகானந்த சிவாச்சாரியார்
ஸ்ரீமதி மாலினிக்கு எமது நல்
வாழ்த்துக்கள். நல்லாசிகள் பற்பல
உங்கள் புத்திரர்கள், புத்திரி தங்கள்
துணையோடு சகல சௌபாக்கியமும்
பெற்று பேரப் பிள்ளைகளோடு நீங்கள்
அகம் மகிழ்ந்து வாழ ஐயன் நல்வருள் புரியட்டும்
கிரஹங்கள் சேர்க்கையால் ஏற்படும் சிற்சில
தோசங்களைப் போக்கவும் நமது ேமத்திற்கு மாத்திரமல்ல நமது
ஸந்ததியின் ேமத்திற்காகவும் செய்யும்
இந்த சாந்தி விழா பல்வேறு தான்
தருமங்களையும் நீங்கள் செய்து
பெரியோர்களின் ஆசீர்வாதங்களையும் பெற்று
எல்லோருடைய நல்வாழ்த்துக்களையும்
நல்லாசிகளையும் பெற்று
பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி நீவிர் இருவரும்
சகலபேறும் பெற்று வாழ்க
வாழ்க என வாழ்த்தி
விடைபெறும்

**அன்பு ஸ்ரீ அத்தான்**
**பாலா அக்கா**
**பிள்ளைகள்**
**மட்டக்களப்பு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழா







**சிவஸ்ரீ.ந.யோகானந்தக்குருக்கள்** **ஸ்ரீமதி.யோ.மாலினி அம்மா**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸர்வ மங்களகரமான துர்முகி வருஷம் தை மாதம் 12ஆம் நாள் (2017.01.25) புதன்கிழமை மூல நட்சத்திரமும் திரயோதசி திதியும் கூடிய சுபமுகூர்த்த நல்வேளையில் “லண்டன் மாநகர் இராஜேஸ்வரி அம்மன் ஆலய மண்டபத்தில்” நடைபெறும் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி வைபவ விழாக் காணும் நாயகர்களுக்கு வழங்கிய

## மனமார்ந்த வாழ்த்துப்பா

அழகுறு இலங்கைத்தீவின் அழகிய முத்தான
யாழ்ப்பாணத்தில் கரை தொடும் அலை கடலின்
அரவணைப்பின் வழிதொடும் பருத்திமாநகரின்
சிவஸ்ரீ இராமநாதக்குருக்கள் அமிர்தேஸ்வரியம்மாவின்
மகளாகவும் என்னருமை தங்கையாகவும்
இப் புவிதனில் வந்துதித்த ஸ்ரீமதி மாலினி அம்மா அவர்களிற்கும்

திகழ் ஒளி பரப்பிடும் நிகழ் தரையதனில்
கலை ஒளி வீசிடும் அழகுறு நகராம்
யாழ்ப்பாணமதில் கற்றோரும் சான்றோரும்
மிளிர்ந்திடும் சுழிபுரம் உளர் தனில்
உயர் குல புரோகிதர் குல மதில் மிளிர்ந்த
நடராசக்குருக்கள் யோகாம்மாளம்மாவின்
செல்ல புதல்வனாய் வந்துதித்த சிவஸ்ரீ யோகானந்தக்குருக்கள் அவர்களிற்கும்

முற்பல பிறவியின் முழுப்பயனாக நிறைவுறு பலன்களின்
நிறைகுடமாக நீவீர் இருவரும் இல்லறமதனில்
நல்லறம் காத்து முப்பத்துமூன்று வருடங்கள் நிறைவுறும் வேளைதனில்......

நீவீர் இருவரும் நன்நலம் கொண்டு
நற்பல தொண்டுகள் இன்னும் பல செய்து
பிறவிப்பலன்களின் நிறைவுகள் பல பெற்று
கலைமகள் நாவினில் இனிமைகள் பல போல்
நினைவுகள் ஏற்றுமே இளமையை தந்திடும்
புயம் பல பெற்று நலன் பல கொண்டு
நாளும் பொழுதும் நன்னெறி காத்து
குழந்தைச் செல்வங்களின் மகிழ்வுகளை கண்டு
இன்னும் பற்பல ஆண்டுகள் நிறைவுறு
வாழ்வினை நிறையவே பெற்று
வாழிய ! வாழிய !! வாழியவே !!!

சுபம்

என்றும் மனமார வாழ்த்திடும்
திருமதி.வாமதேவி சுந்தரராஜ ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து மடல்

உள்ளவர் சூழ்ந்து
உறவுகள் வாழ்த்த
சஷ்டியப்த பூர்த்தி
பெருவிழாக் காணும்
தம்பி மோகன்-மாது
இருவருமே நீடுவாழ்க!!

புதிதாக மீண்டும்
புத்துணர்வுடன் நீவீர்
புத்திரச் செல்வங்களுடன்
புதுமணம் பரப்பி வாசமாய்
பல்லாண்டு பல்லாண்டு வாழ
பாசமாய் அண்ணி வாழ்த்துகின்றேன்.

உயர்ந்த மலைகளினின்றும்
பாய்ந்து வரும் அருவிபோல
அன்பு அறம் ஆன்ந்தம்
அகம்புறமெங்கும் பெருக்கெடுத்து
ஓட வேண்டுமென்ற பிராத்தனையுடன்
அண்ணாவும் அண்ணியுமாய் வாழ்த்துகின்றோம்

என் உணர்வுகளுடனே
என்னிருதயம் தனிலே
ஒன்றாய்க் கலந்துவிட்ட
உங்கள் அன்பு அண்ணனின்
நேசவார்த்தைகளாய் இந்த அண்ணி
பாசத்துடன் வாயார வாழ்த்துகின்றேன்

வாழ்க! வளமுடன் !!!

**கண்ணன் அண்ணா**
**மாலா அண்ணி**
**மகள் சுகன்யா**
Switzerland

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்திருநாடாம் வடதுருவம் சுழிபுரம் எனும் பிறப்பிடத்தையும் இலண்டன் ஸ்ரோன்லி பதியில் வதிவிடமாகவும் கொண்டிருக்கும் சிவஸ்ரீ நடராஜ குருக்கள் யோகானந்த குருக்கள், துணைவியார் மாலினி யோகானந்த குருக்கள் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா**

இடம் - ஸ்ரோன்லி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய மண்டபம்

திகதி - 25.01.2017 புதன்கிழமை

சிந்தனையில் மனமிருந்து, சிந்தித்தே முடிவெடுத்து அலைஅலையாய், அனுபவங்கள் அத்தனையும் உள்ளத்துள்ளே அமைதியான நடை போட பாசத்திற்கும் நேசத்திற்கும் வயதோர் தடையில்லை. இன்னிசையாய் திகழட்டும் உம் வாழ்க்கை இல்லாளின் துணையுடனே.

மக்கள், மருமக்கள், பேரக்குழந்தை என குடும்ப உறவுகளின் எண்ணங்கள் உமைத் தாலாட்ட, நித்தமும் இறைவனின் அருளோ பெற்றுயர, அகவை அறுபது என்ன, அகவை நூறை கடந்து ஆனந்தம் என்றும் நிலைத்திருக்க சிவஸ்ரீ ந. யோகானந்த குருக்களுடன் ஸ்ரீமதி மாலினியும் லஷ்மி கரமாய் உடனிருக்க இறைகுடும்பத்தை வணங்கி நலனும் வளமும் பெருகிட இதயங்களுக்கு இதயங்களால் வாழ்த்துக்கள் சமர்ப்பிக்கின்றோம்.

சுபம்.

உங்கள் ஆசிகளை வேண்டும்
சம்பந்தி
**கிருபாகர சர்மா (கண்ணன்)**
**வாகீஸ்வரி தம்பதிகள்**
**விதுஷன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் காணும் மதிப்பார்ந்த சிவஸ்ரீ ந.மோகன் குருக்கள் ஐயா அவர்கள் கனகாபிஷேகம் கண்டு வாழ அன்புடன் வணங்குகிறோம்

யாழ் மண்ணின் சுருவில் பகுதியில் ஐயனார் கோவில் பெரிய குருக்கள் சிவஸ்ரீ நடராஜக் குருக்களின் புதல்வர்களுள் ஒருவரான மோகன் அண்ணா அவர்கள் பழகுவதற்கு இனிமையும் எளிமையும் உடையவர். பல்வேறு ஆலயங்களில் பணியாற்றி அனுபவமும் அமைதியும் இயல்பாகவே உள்ளவர். லண்டனில் ஆர்ச்வே உயர்வாசற் குன்று முருகன் கோவிலிலும் பணியாற்றி ஸ்ரோன்லி ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் எம்மோடு பணியாற்றி வருகிறார். கோவப்படாமல் சிரித்து செயலாற்றும் சீர்க்குருவாக நம்முடன் இணைந்துள்ளார்.

ஒருவருக்கு அறுபது வயதாகும்போது அவரது ஆசி வேண்டியும் அவருக்கு நீண்ட ஆயுள் வேண்டியும் செய்யப்படும் விசேட சாந்தி சஷ்டியப்த பூர்த்தி சாந்தியாக பின்பற்றப்படுகிறது. நாளும் கோளும் நன்மை அளித்திட ஒவ்வொரு வருடமும் பிறந்த மாதம் பிறந்த நட்சத்திரம் வரும்போது இறை அருள் பெரியோரது ஆசி வேண்டுவது நலம். பொதுவாகவே ஆங்கிலத் திகதியை முன்னிறுத்தி வழிபாடுகளை அல்லது பிறந்த தின கொண்டாட்டங்களை பலர் செய்கின்றனர். அவை ஒருவித உடலியல் மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் ஆன்மீகம் கலந்த ஆனந்தத்தோடு தொடர்புடையது ஜென்ம நட்சத்திர வழிபாடுகள். சஷ்டியப்த பூர்த்தி என்பது ஒருவர் பிறந்த வருடம் பிறந்த மாதம் பிறந்த நட்சத்திரம் என்பன கூடிவரும் நாளாகும். அந்நாட்களில் உடலும் உள்ளமும் பலம் பெற நடைபெறும் வாழ்த்துக்கள் அவர்களையும் அங்கு கலந்து கொள்ளும் ஏனையவர்களையும் வளம்படுத்தும்.

திருக்குறளின் அறுபதாவது பாடல் மங்கலம் என்பது மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு என்பதற்கிணங்க தமது மங்கலம் நிறைந்த மனைவி குழந்தைகள் பேரப்பிள்ளை என்பவர்கள் புடைசூழ இவ்விழாவை இனிமையாக கொண்டாடும் குருக்கள் ஐயா அவர்கள் இன்னும் பல ஆண்டு நோய் நொடி இன்றி பணியாற்றி வாழவேண்டும் என உளமார வாழ்த்தி அவரது ஆசியையும் வேண்டுகிறோம்.

**சிவஸ்ரீ செ. ரவிச்சந்திரக்குருக்கள்**

**ஸ்ரீமதி ஜெயகௌரி தம்பதியினர்.**

**மற்றும் ஸ்ரீ மேருஜ சர்மா**

லண்டன் ஸ்ரோன்லி அம்மன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

லண்டன்

# சிவஸ்ரீ நடராஜ யோகானந்தக் குருக்கள் ஸ்ரீமதி மாலினி தம்பதிகளின் சஷ்ஷ்ய்பதபூர்த்தி விழா வாழ்த்துரை

எமது சம்பந்தியார் மோகனின் தந்தையார் சுருவில் நடராஜாக் குருக்களுடன் எனது தந்தையார் பஞ்சனய்யர் மற்றும் எனது கணவர் பொன் பஞ்சாட்சரக் குருக்கள் ஆகியோர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே தொடர்பும் நட்பும் கொண்டிருந்தவர்கள். தற்போது அவர்களது ஆசியினால் எனது மகன் ஸ்ரீகரன் அவர்களின் பேத்தி வைஷ்ணவியை மணந்து மோகன் மாது இருவரும் எனது சம்பந்திகளாக மாறிவிட்டிருப்பது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போது அவர்களின் சஷ்ஷயப்பூர்த்தி சாந்தி மணிவிழா நடைபெறவிருப்பதை அறிந்ததும் அளவற்ற ஆனந்தத்துடன் அவர்களுக்கு எனது வாழ்த்தினைத் தெரிவிக்கிறேன். மணிவிழாக் காணும் தம்பதிகள் மேலும் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புமாக வாழ்ந்து பவளவிழா முத்துவிழாக்களையும் கண்டு மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளுடன் நோய்நொடியில்லாது நூற்றாண்டு காலம் வாழ எமது குடும்பத்தினர் சார்பில் நல்லாசிகளைத் தெரிவிக்கிறேன்.

வாழ்க பல்லாண்டு

அன்பே சிவம்

**ஸ்ரீமதி சரோஜாதேவி பஞ்சாட்சரக் குருக்கள்**

**கனடா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு காலம் வாழ்க!

நமஷ்காரம். எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரும் எப்பொழுதும் இனிய புன்முறுவலும். அமைதியான உபசரிப்பும் சுறுசுறுப்பும் கொண்ட அன்பு மைத்துனர் யோகானந்த குருக்கள் அவர் தம் துணைவி மாலினி தம்பதியினர் தமது (60)ஸஷ்டியப்த பூர்த்தி வைபவத்தை அவர் தம் பிள்ளைகள் மருமக்கள் பேரபிள்ளைகள் உற்றார் உறவினர்களின் வாழ்த்துகளும் ஆசிகளோடும் மேலும் சகல சௌபாக்யமும் பெற்று பல்லாண்டு வாழ்க என. எல்லாம் வல்ல சுருவில். ஐயனாரை வேண்டி ஆசி வழங்குகின்றோம்.

ஸ்மரம் யோனிம் லக்ஷ்மீம் த்ரிதய மித மாதௌ தவ மனோ:
நிதாயைகே நித்யே நிரவதி மஹாபோக ரஸிகா:|
பஜந்தி த்வாம் சிந்தாமணி குணநிபத்தாக்ஷ வலயா:
சிவாக்நௌ ஜுஹ்வந்த: ஸுரபிக்ருத தாராஹுதி

சதை: " 33

(இது ஸௌபாக்ய மந்திரம் சகல ஸௌபாக்யங்களையும் அளிக்கும்)

**அன்பு. மகேஷ் அண்ணா ராதா குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மாமா அத்தை !!!

எங்களால் முடிந்த சிறிய வாழ்த்துக் கவிதை உங்களுக்காக !!!
வாழ்த்த வயதில்லை வணங்கி மகிழ்கின்றோம்!!!

தோளுக்கு மேல் வளர்ந்த பின்னும்
கை பிடித்து பாதை காட்டிடும் - பாசம்
மாறா விழிகளால் அன்பின் வழியில்
வாழ்க்கை உணர்த்திய - இனிய
நெஞ்சம் கொண்ட மாமா!!!

அழுகின்ற குழந்தைக்கான தேவையையும்
அழகாய் புரிந்துகொண்டே
நீசமாய் ஏசினாலும் பாசமாய் தடவிடும்
பெற்றெடுத்த தாயை போல் - கண்களிலே
கருணைதான், வே'மும் தெரியாத
பேரன்பிற்கு இலக்கணமான அன்பு அத்தை!!!

கருத்தொருமித்த தம்பதியினராய்
சுற்றம் வியக்கம் வாழ்க்கை கண்டு
உதாரணத்தம்பதியினராய்
ஊர் போற்ற உறவம் போற்ற
இணை பிரியாத வாழ்வினிலே
வாழ்ந்து காட்டி பாடமளித்த
இனிய அருமைத் தம்பதி!!!

நெஞ்சம் நிறைய பொங்கம் கருணையோடு
வாசம் குறையா வனப்பு குறையா
அன்பு மலர்ந்திட வீசும் தென்றலாய்
விடியல் வெளிச்சமாய் ஒவ்வொர் உயர்விலும்
உங்களோடு ஒத்து உறவாடி
உறுதுணையாய் மனதோடு நின்று
நிறை குடமாய் ஊற்றெடுத்து
என்றும் உங்களின் அன்பின் பாத்திரமாய்
அன்புடன் வாழ்த்தும்
**கிரிஜா அண்ணியும்**
ஆசிர்வாதத்தை வேண்டி நிற்கும்
அன்பு மருமக்கள்!!!
**பிரணவதர்ஷன் குடும்பம்**
**தர்ஷினி குடும்பம்**
**பிரசாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துச்செய்தி

**– தமிழ்மாமணி, தமிழருவி த. சிவகுமாரன்** (B.A(Hons)

(அமைப்பாளர், வவுனியாத் தமிழ்ச் சங்கம், அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்)

என் மதிப்பிற்கும் நட்பிற்குரிய சிவஸ்ரீ நடராஜாக் குருக்கள் யோகானந்தக்குருக்கள், மாலினி தம்பதிக்கு ஷஷ்டியப்த பூர்த்தி விழா 25ம் திகதி லண்டன், சறே, ஸ்ரோன்லி அம்மன் கோவிலில் இனிதே நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

என் நண்பன் ஒன்றாக படித்த வகுப்புத்தோழன் மோகன் ஐயா என்றும் மோகன் என்றும் அன்போடு அழைப்பேன. இன்றும் எனக்கு நல்ல நினைவிலிருக்கிறது. 1972ல் 8ம் வகுப்பில் விக்கிரோறியாக் கல்லூரியில் கற்ற காலத்தில், என் வகுப்பின் (8D) மொனிற்றர் மோகன் தான். அமைதி, அடக்கம் அதேநேரம் கடமைதவறாமை இவரது குணாம்சங்கள் பறாளாய் முருகன், பிள்ளையார் ஆலயங்களிலும் எங்களது நட்புத் தொடர்ந்தது.

நான் யாழ் இந்துக்கல்லூரிக்கு வந்த பிறகும், வளர்ந்து பெரியவர்களான பிறகும் கூட அந்நட்பு மாறாது நல்லூர், முடமாவடியில் நாமிருந்தபோதும் மாலினி சமேதராக மோகன் எங்கள் வீட்டிற்கு வந்து அளவளாவும் வகையில் உயர்ந்திருந்தது. " Made for each other" என்பார்களே அப்படி ஒருவருக்கொருவர் பொருத்தமான சோடி நல்ல பிள்ளைகளைப் பெற்று நிறைவான வாழ்க்கை 2004லும் நான் London உலக சைவமாநாட்டிற்கு வந்த போது Archway (High gate) முருகன் கோவிலில் மோகனைக் கண்டு மிக மகிழ்ந்தேன். அவ்வாலய அறங்காவலர் செல்லத்துரை ஐயாவிற்கு எங்கள் நட்பைப் பற்றிச் சொன்னேன், மகிழ்ந்தார் அவரது இனிய குணம் துணைவியின் நல்ல உதவி இவற்றால் இன்று londonல் சிறப்பாக வாழும் ஐயாவையும் குடும்பத்தாரையும் மனமகிழ்வுடன் வாழ்த்துகிறேன். எனது நண்பனின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா மிகச்சிறக்கவும், தம்பதி சமேதராக, குடும்ப நலத்துடன் நூற்றாண்டு வாழவும் மனமார வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவகை உள்ளூர வாழ்த்துகிறேன்.

அறுபதாம் அகவை தன்னில்,
ஆனந்தம் காணும் எங்கள்
சுருவிலூர் ஐயன் பாதம்
போற்றியே பூசை செய்த
குருக்களே! குருவே! நீங்கள்
குறையிலா வாழ்க! வென்போம்.
திருநிகர் செல்வம் பேறு
தீர்க்கஆ யுசுநூ றாக்

மனையொடு மக்கள் சேர்
மாண்புறு குணக்குன் றாக்
பனைதென்னை உயர்ந்த ஊரில்
பண்பினால் உயர்ந்தே நின்றீர் !
தனைநிகர் தங்கம் போன்றோர்
தரணியில் நாங்கள் காணோம்.
மனைவியோ மாதம் மாவும்,
மாதம்மும் மாரி போல்வார்.

வள்ளுவன் தனக்கு வாய்த்த
வாசுகி போல்வார் அம்மை
தெள்ளிய வாழ்வே வாழ்ந்து
தேனமு தாகப் பேசி
பிள்ளைகள் ஐந்தும் பெற்று
பெருமையாய் உயர வைத்தீர்.
உள்ளூர உவகை கொண்டோம்
உய்யவே வாழ்த்தி நின்றோம் !

அன்புடன்

**விமலன் முத்தையா**
(விஜயரட்ணம்)
(உபசெயலாளர்,
சுருவில் ஐயனார் கோவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**யாழ் தீவகம் பூர்ண புஷ்க்கலா சமேத ஹரிஷர புத்திர ஐயனார்**
**ஆலய எங்கள் பரம்பரை குருக்கள் மதிப்பிற்குரிய**
**சித்தானந்த பானு சிவஸ்ரீ நடராஜக்குருக்கள் ஐயாவின் கனிஷ்ட குமாரன்**
**சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள் மாலினி அம்மா தம்பதிகளின்**

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா வாழ்த்துமடல்

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் உயிர்க்கும்
செந்தன்மை பூண்டு ஒழுகலன்

அந்தணர்களில் உயர்ந்தவராய் ஆகமத்தின் பொருள் அறிவாய்
உந்துபுகழ் நடராஜக்குருக்கள் உவந்தளித்த உத்தமகுருவான
முந்துசீர் யோகானந்தகுரு நாமங்கொண்ட எங்கள் குருவே
சந்ததமும் செழித்து விந்தை நிறைகொண்டு வாழ வணங்குகிறோம்.

மேதினியில் அன்பு நிலைமதித்து நல்மனையறத்தை
தீதறவே ஏற்றுக்களித்து இருக்கும் நல் மாதவனாய்
மண்ணுபுகழ் ஸ்ரீமதி மாலினி அம்மாவோடு - இல்லறத்தே இணைந்து
இனிதே அறுபது அகவைகாணும் இன்னாளில் வாழ்த்தி வணங்குகிறோம்

சுருவில் பதியில் உதித்து உரியமுறையில் அனுஷ்டானம் பெற்று
பருத்திநகரில் பாவை அவளை கரம்பற்றி ஐம்முத்துக்கள் போன்ற
பிள்ளைகள் மருமக்கள் பேரனோடு பிரித்தானியாவில் இன்று
மணிவிழாகாணும் ஐயா அம்மாவை வாழ்த்தி வணங்குகிறோம்.

பல்லாண்டுகள் சிறப்போடு வாழ்க
ஐயனார் பாதம் பணிகிறோம் வாழ்க குருவே
சரணம்

இங்ஙனம்

**திரு. மா. தவயோகராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# ஷஷ்டியப்த பூர்த்தி விழா

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று மொழிந்திருக்கிறார் நம் ஞானி ஒளவைப்பிராட்டியார். நாம் இந்த அரிய பிறப்பை பயன்படுத்தி ஆன்மலாபம் அடைவதற்காக நம் முன்னோர் பல பல வேதங்கள் ஆகமங்கள், புராணங்கள், சாஸ்த்திரங்கள், ஸ்தோத்திரங்கள் மற்றும் கலைகளையும் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இவை யாவற்றையும் கற்றுணர்ந்து நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு எமகுக்காலமில்லை. எனினும் இறைவனை அடைய இரண்டுவழிபாட்டு முறைகளை இருக்க நாம் காண்கின்றோம். இவை அக வழிபாடு, புறவழிபாடு என நாம் அறிவோம். சரியை கிரியை எனும் மார்க்கங்கள் புறவழிப்பாட்டிலும், யோகம் ஞானம் அகவழிபாட்டிலும் அடங்கும். 2000 வருஷங்கள் நமது தமிழ் மக்கள் வியாச முனிவர் காட்டிய புற வழிபாட்டில் மட்டுமே மிக ஆவலாய் வாழ்க்கை நடத்திக்கொண்டிருப்பதை நாம் உணர்கிறோம். இதில் திருக்கோயில்களை அமர்த்துவித்து வழிபாடு செய்வதைக் காண்கிறோம். அவ்வகையில் அமர்ந்த திருக்கோயில்களில் ஒன்றானது ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில். இத்திருத்தலத்தில் சிவாச்சாரியார்களில் ஒருவராகத் திகழ்கின்றார் நமது மோகன ஐயா அவர்கள்.

இவர் தாயகத்தில் சுழிபுரத்தில் அமரர்கள் நடராஜக்குருக்கள் யோகாம்பாள் தம்பதிகளின் கனிஸ்ட புதல்வராகப் பிறந்து, யோகானந்த சர்மா எனும் நாமத்தைத் தரித்து, சைவ வேதாகமங்களில் புலமைபெற்று சுருவில் ஐயனார் கோவில், மற்றும் கொழும்பில் முகத்துவாரம் பகுதியில் கணபதி கோவிலில் பணிபுரிந்து திகழ்ந்தார். பின் 1983 ஆண்டில் இராமன் சீதையைத் தேடியதுபோல் அமரர்கள் சிவ ஸ்ரீ இராமநாதக்குருக்கள், அமிர்தேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி மாலினியைத் திருமணம் செய்துகொண்டார். அத்திருமணத்தின்போது மோகன் ஐயா மாலினி அம்மாவுக்கு ஒரு கட்டளை பிறப்பித்தார். இந்த இரகசியம் யாருக்கும் தெரியாது. அந்தக் கட்டளை நான் மோகன் சொல்லுகின்றேன். நீ என்றென்றும் மோகனப் புன்னகையோடு இருப்பாயாக.

இந்தக் கட்டளைளை மீறாது இன்றும் மோகனப் புன்னகையுடன்திகழ்கிறார் மாலினி அம்மா. மானிடராய்ப் பிறந்த எமக்கு இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயற்கையே. ஆனால் இன்பத்திலும் துன்பத்திலும் நீ சிரித்திடு மகனே என்ற வாக்குக்கு வடிவம் கொடுத்துத் திகழ்கின்றார் நமது மோகன் ஐயா.

இவர் 2003ம் ஆண்டு இங்கிலாந்துக்கு வந்து உயர்வாசல் முருகன் குன்று ஆலயத்தில் பணிபுரிந்து அதன் பின் ஸ்ரீராஜராஜேஸ்வரி ஆலயத்தில் 2005ம் ஆண்டு பணி ஏற்றுக்கொண்டார். ஆலயத்துக்கு வரும் பக்தர்களை சிரித்த முகத்தோடு வரவேற்று அவர்களுக்கு வேண்டிய ஆறுதல்கூறி மேலும் குடும்ப உறவில் மனைவிக்கு ஏற்ற அன்பான கணவனாகவும், பிள்ளைகள் சிவராம் சர்மா, ரகுராம் சர்மா, ஜெயராம் சர்மா, ஸ்ரீஹரிராம் சர்மா, வைஷ்ணவி ஆகிய மக்களுடைய பாசம்மிக்க தந்தையுமாய் அண்மையில் வித்யுத் சர்மா என்ற பேரனும் இறைவன் கொடுத்த பேறாக ஏற்றுக்கொண்டு பணிபுரிகின்றார். மேலும் நண்பர்களுக்கு நட்பின் சிகரமாகவும் விளங்கக் காண்கின்றோம்.

சமயம், கலாச்சாரம், பண்பாடு என்பதற்குக் காவலாகவும் பிறரிடம் இனிமையான சொற்களைப் பேசுவதில் நற்கருமம் என்ற கொள்கையை கடைப்பிடித்து வருகிறாரென்றால் அது மிகையாகாது. அன்பு, அறிவு, இரக்கம், ஒழுக்கம் முதலிய நற்குணங்களிற் சிறந்து நமது நேய உறவாய் விளங்குகின்ற யோகானந்த சர்மா அவர்களே, அன்புள்ள தங்களுக்கு சிவபெருமான் திருவருளால் சிவஞானமும் தீர்க்காயுளும், சிந்தித மனோரத சித்தியும் மேன்மேலும் உண்டாவதாக.

**வைத்திய கலாநிதி திரு சபாபதி சிவயோகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி வடக்கு தவளக்கிரி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் (பரிபாலனசபை அளவெட்டி)
ALAVEDDY NORTH THAVALAKIRI MUTHUMARI AMMAN TEMPLE (LONDON)
76 GRAND DRIVE, LONDON S.W.20 9DY
Chairman - Dr.T.Rasamuthiah, Secretary - Mr.P.Kaneswaran, Treasurer - Mr.A.Vairavamoorthy

ஓம்

சிவமயம்

## அறுபதாவது அகவையில் காலடி வைக்கும்
## திரு. யோகானந்தன் சிவாச்சாரியார்
## பாரினில் பலதும் பெற மங்கையொரு பாகன் திருவருள் செய்யவான்

உள்ளத்தில் அன்பு பொங்க மோகன் ஐயா என அழைப்பர் ஆலயத்துக்கு அடியார் கூட்டம் அவர்கட்கெல்லாம் இதலில் புன்முறுவலுடன் இதயத்தில் அன்புபொங்க அவர்கள் விரும்பிய அடைய ஆசிவழங்கும் மோகன் ஐயாவுக்கு இன்றோ அறுபது அகவைகள். அறுபதிலும் தன்னை இருபதாக காட்டி அன்னைக்கு ஓடி ஓடி ஆலயத்துக்கு வரும் அடியார் உள்ளம் மலர தொண்டு செய்பவர் மோகன் ஐயா. அன்பு, அடக்கம், எளிமை, நேர்மை ஆகியவற்றின் மறுஉருவம் தான் மோகன் ஐயா. "விழி, எழு, உழை" என்பதை உள்ளபடி உணர்ந்து, உணர்த்தி, வாழ்பவர் தவம்மிக்க பழமையை மறவாத பண்பினர் யோகானந்த சிவாச்சாரியார். அன்பு குழையக் குழையக் பேசக்கூடியவர். ஆதரவு தேவைப்படும் பொழுது தருமத்தின் வழி நடப்பவர் அறுபது அகவை காணும் ஐயர் ஆயிரம் பிறை காண என் வாழ்த்துக்கள்.

வேரோடு வினையகற்றும் விநாயகன் தாள் தினம் பணியும் யோகநாதன்
பேரோடு புகழும் செல்வம் பலவும் பெற அன்னை திருவருள் செய்வாள்
சீரோடு தமிழர் சமுதாயத்திற்கு சேவைகள் செய்ய வேலவன் துணைநிற்பான்
பரோர் பணியும் பரமேஸ்வரன் திருவருளால் பல்லாண்டு வாழ்கவே.

சீர் தவழ் சுழிபுரம் நகரில் பிராமணகுலத் தோன்றல்
பேர் தவழ் யோகநாதன் சிவாச்சாரியார் என எவரும் பேச நின்றோன்
ஏர்பிடிக்கம் நம் சமுதாயம் உய்ய வியப்புறு பூசைகள் நித்தம் செய்வான்
பார் புகழ இல்லற தருமத்தில் நின்று நித்தம் தவம் செய்வான்

அருள் துலங்க நெற்றியில் திருநீறு அடக்கம் இன்சொல்
தெருள் தவழ தினமும் தெய்வீக கூட்டுப் பிராத்தனை
பொருள் நிறைவுடன் புண்ணியம் பொருந்தும் சீலன்
இருள் நீங்கி ஒளிகூட்ட தினமும் அன்னையை துதிப்பான்.

அறிவும் அன்பும் அறமுமே என வாழ்பவர்
அறிவும் அன்பும் அறமுமே உலகம் என உணர்ந்தவர்
அறிவும் அன்பும் அறமும் தருமமென அடியவர்க்கு ஓதுபவர்
ஆற்றல் மிக்க யோகநாத சிவாச்சாரியர் பல்லாண்டு வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறத்தின் பாதையிலே நடந்து சென்று நலம் பெருக
தொல்லுலகின் இருள்நீங்கச் தூய திருப்பணிகள் செய்வார்
உலகை உயர்த்தி தாமும் உயர்ந்த யோகநாதன்
வல்லவராய் வையகம் பெரும் பயன் அடைய வாழ்கிறார்..

அறுபது அகவைகள் ஆனதெனச் சொன்னாலும்
மறுப்பை தருவோர் மதித்து மறந்திடச் செய்யும்
சுறு சுறுப்பும் பம்பரமாக சுழன்றபடி ஆராதனை செய்யும் அழகும்
விறு விறுப்பும் பார்க்குங்கால் யோகானந்தன் வாலிபன்தான்

தேவர்களும் விரும்பி அன்னையை ஏத்த வரும் ஸ்ரோலி திருப்பதியில்
யாவருக்கும் சொந்தமென அன்பிருக்கும் பெட்டகமா இலங்குகின்றார்
காவலுக்கு அன்னையை கருத்தில் கொண்டார் மணிவிழா காணுகின்றார்
கவலைகள் மறந்து தேவி திருவருளால் பல்லாண்டு வாழ்கவே

அன்புடன்

**பொன் கணேஸ்வரன்**

சமூகசீலர்

செயலாளர்

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் ஆலய அறக்கட்டளை (இலண்டன்)

**ALAVEDDY NORTH THAVALAKIRI MUTHUMARIMAN TEMPLE TRUST (LONDON)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அரிகர புத்திர சுவாமியே சரணம் ஐயப்பா!

இற்றைக்கு அறுபத்து ஐந்து வருடங்களுக்கு முன்னர் சுளிபுரத்தில் இருந்து தீவகத்தின் சுருவில் பதியில் எழுந்தரளியிருந்து அருள்பாரித்து வரும் ஐயப்பன் கோவிலில் பிரதம குருவாக பணிபுரியும் பொறுப்பினை ஏற்று அழகிய எங்கள் கிராமத்தில் குடியேறி அரை நூற்றாண்டு காலம் ஐயனானர் கோவிலுடனும் கிராமத்து மக்களுடனும் தன்னையும் தனது குடும்பத்தினரையும் முழுமையாக இணைத்து வாழ்ந்தவர் காலம்சென்ற சோமாஸ் கந்த நடராஜ குருக்கள். குருக்கள் ஐயா குடும்பம் அனைத்து மக்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்று வாழ்ந்தவர்கள் ஐயா குடும்பத்தின் இளைய புத்திரன் திரு. யோகானந்த குருக்கள் தற்சமயம், இலண்டன் ஆச்சுவே முருகன் கோவிலில் பணிபுரிந்த பின்னர் ஸ்ரோன்லி பதியுரை ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய குருக்கள் என்ற சீரிய பணியனை புரிந்து வருகின்றார். திரு யோகானந்த குருக்களும் அவர் தம் துணைவியாரும் 2017 தை திங்களில் அவர்களது ஷஸ்டியப்பத்த பூர்த்தி விழாவிற்கான கொண்டாடுகின்ற இன்றைய தினத்தில் சுருவில் ஐயப்பன் கோவிலை பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஸ்தாமித்த சுருவில் தம்பியரின் வழி தோன்றர்கள் சார்பாகவும் தொடர்ந்து ஆலய பரிபாலத்தில் முன்னின்று உழைத்தவர்கள் தம்பியப்பா குடும்பம், மாணிக்கம் குடும்பம் மற்றும் சகல சுருவில் மக்கள் அமிர்தம் வழிவந்து உலகெங்கும்பரந்து விரிந்து வாழும் சகல சுருவில் மக்கள் சார்பாகவும். யோகானந்தக் குருக்களும் அவர்தம் மனைவி மக்கள் பேரக்குழந்தைகள் அனைவரும் இறையருள் பெற்று இன்புற்று வாழ மிகவும் நன்றி கலந்த அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அன்பே சிவம்


அன்புடன்

***சிவசம்பு பரிமேலழகன்***

25-01-2017



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷஷ்டியப்த பூர்த்தி கல்யாண சோபனத்தை குறித்து வழங்கிய சிறப்புரை

வேதங்களை மனதினாலும் தியானத்தாலும் தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் விசேஷத்தால் பிராமணர்கள் ஒருவருக்கொருவர் பூஜிக்கப்படுவர்களாகவும், குருக்களாகவும், அதிதிகளாகவும், தெய்வீகச்சூழலுள் உபசரிக்கப்படுவதால், தமக்கும், பிறருக்கும் நற்கதியைச் செய்து தத்தமிஷ்ட தேவதைகள் மூலம் பூமியையும் யௌவனமாக வளர்க்கும் சித்திகளையும் கொண்டுள்ளனர். சகல தேவர்களையும் தமக்குள் ஆகர்ஷணம் செய்வதால் பிராமணர்களது சரீரம் கூட தேவசரீரங்களாக அமைந்து அவர்களே தேவ சன்னிதானமாகவும் விளங்குகிறார்கள்.

கர்ப்பதானம் ஆதியாம் ஸம்ஸகாரங்களைச் செய்து வேதத்தையும் கற்பித்தவன் "குரு" எனப்படுவர். வேதத்தின் சில பாகத்தை கற்பித்தவன் "ஆசார்யா" எனப்படுவர். வேதத்தின் ஒரு சில பாகத்தை கற்பித்தவன் "உபாத்தியாயன்" எனப்படுவர். யாகங்கள் செய்பவர் "ருத்விக்" எனப்படுவர். இவையனைத்தையும் பல்வேறு தீட்சையின் மூலம் பக்குவப்படுத்துபவனே "குருக்கள்" ஆவர். இத்தகை குருவம்ஸம் இக் கலிகாலத்திலே மிகமிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. அந்த மிகமிகச் சிலருள் எமது ஆப்த நண்பரும், உலக மக்களால் "உயர்ந்தோன்" எனப்பாரட்டு பெறுபவரும் நாளும் பொழுதும் சிவசிந்தனையோடு இப்பூமியும், பூமியின் மேல் வாழும் ஜீவராசிகளும் இன்புற்று வாழ வேண்டுமென்று சிந்தனைகளோடு, சிவன் ஐயனார் அருட்பார்வைக்கு ஆளாகியிருக்கும் எங்கள் மதிப்புயர் சார் சுருவில் நடராஜாக்குக்கள், யோகானந்தக்குருக்கள், மாலினி (மாது) தம்பதிகளின் ஷஷ்டியப்தபூர்த்தி வைபவவேளையில் சிறப்புரை தருவதில் பெருமகிழ்வடைகிறோம். தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி கல்யாண சோபனம் மேலும் சிறக்க வேண்டுமென அபிராமி சமேத அமிர்கடேஸ்வர சுவாமியை வேண்டி சிரஞ்சீவியாக வாழவேண்டுமென இறைவனை வேண்டுகிறோம்.

மனிதனது ஆயுட்காலத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இயற்கையாகவும் கிரஹங்களின் சேர்க்கையாலும் ஏற்படும் மாற்றங்கள் மனித வாழ்விலும் சிற்சில தோஷங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றை அகற்றிக் கொள்வதற்கும் ஸந்ததியின் ஷேமத்திற்கும் நீண்ட ஆயுள் விருத்திக்கும் வேண்டி சில சாந்தி கர்மாக்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டும் மென்று சாஸ்திரங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

அவற்றுள் அறுபதாம் ஆண்டு ஜன்ம நட்சத்திரத்தில் செய்யப்படும் "ஷஷ்டியப்தபூர்த்தி" சாந்தியும், எண்பதில் இருந்து எண்பத்தி நான்கு வயதிற்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படும் "சகாபிஷேகமும்" அவசியமான சாந்தி கர்மாக்கள் என சாஸ்திரங்கள் வலியுத்தப்பட்டிருக்கின்றன.

சாந்தி கர்மாக்கள் நித்தியம், நைமித்தியம், காம்யம், சாந்திகம், பௌஷ்டிகம் எனப் பல வகைப்படும். அறுபதாம் ஆண்டு ஜன்ம நஷத்திர நிமித்தம் செய்வதால் "ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி" நைமித்தியம் என்றும் சிலர் கூறுவர். அவ்வாறயினும் இது ஷஷ்டியப்பூர்த்தி என வழங்கப்படுவதால் செய்பவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஸந்ததியினருக்கும் உண்டான எல்லாத் தோஷங்களையும் போக்கிக் கொள்ளச் செய்யப்பட வேண்டிய அவசியமான கர்மா என ஏற்படுகின்றது.

வழக்கத்திலே ஷஷ்டியப்தபூர்த்தீ சாந்தி எனக் கூறினாலும். இதனை ரிஷிகள் "உக்கிரரத சாந்தி" என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ஓன்றுக்கொன்று சிறிது வேறுபாடுகள் இருந்தாலும் பொதுவாக முக்கியகர்மாக்களில் மாற்றமில்லை என்பதை சௌனகர், போதாயனர் சைவாகமம் என்பதை இதை உக்கிரரதசாந்தி என்றே கூறுவதிலிருந்து அறியலாம்.

சாந்தி என்ற பெயரால் உதகசாந்தி, ருதுசாந்தி, ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி என்ற கர்மாக்கள் அழைக்கப்படுகின்றன. ஏற்பட்ட ஸர்வ தோஷங்களையும் வேதமந்திரங்களால் ஜபிக்கப்பட்ட தீர்த்தத்தைக் கொண்டு போக்கிக் கொள்ளலாம். இது உதகசாந்தியாகும். பெண் ருதுவான காலத்தில் திதிவார, நட்சத்திரங்களால் ஏற்படும் தோஷங்களை அகற்றிக் கொள்வதற்கும், கன்னித் தோஷங்களை நீக்கியும், பெண்ணின் சௌபாக்கியங்களுக்கும், செய்யப்படுவது ருதுசாந்தியாகும்.

ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தியிலும் அறுபதாம் ஆண்டு ஜன்ம நஷத்திரத்தில் கிரஹங்களாலும் மற்றும் பல வகையாலும் ஏற்பட்ட தோஷங்களை அகற்ற பல தேவதைகளுக்கு பிரத்தியோகமாக கும்பங்கள் வைத்தும் குறிபிட்ட தேவதைகளை அதில் ஆவாஹனம் செய்து, மந்திரங்களை ஜபித்தும், ஹோமங்களைச் செய்தும் தீர்த்த ஸ்நானம் செய்வதும், தானதிகளைச் செய்வதும் மிகவும் முக்கியமானவைகளாள அமைகின்றன.

இக் காலத்தில் இச் சாந்தியை செய்யாதுவிடின் மரணத்துச் சமமான கஷ்டங்களும் நஷ்டங்களும் தன அழிவு மனைவி மக்கள் சுற்றத்தவர்கள், உறவினர்கள் ஆகியோர்களை இழக்கவும் நேரிடுதல் போன்ற துர்பாக்கியங்கள் ஏற்படும் எனச் "சௌனகர்" தெளிவாகக் கூறியுள்ளர்.

77 வயது 6 மாதம் முடிந்து 80 வயதிற்குள் விஜயரத சாந்தி செய்ய வேண்டும். 81 வயது முடிந்து 6 மாதம் கழித்து சதாபிஷேகம், 90 வயது முடிந்து பூர்ணாபிஷேகம் 100 வயது முடிந்து கனகாபிஷேகம் இதற்கு மத்ய காலத்தில் வயது 70 இல் பேரனுக்கு மகன் பிறந்தால் சதாபிஷேகம் செய்யலாம் என்றும், 88 ஆம் வயதில் புஷ்பவர்ஷினி என்ற பெயரில் ஒரு சிலர் பரிவார சாந்தியாக செய்கிறார்கள்.7 59 வயது முடிந்து 60 வயது ஆரம்பத்தில் உக்ரரதசாந்தி, 60 வயது முடிந்ததும். 61 வயது ஆரம்பத்தில் ஷஷ்டிதமாப்த பூர்த்தி. 70 வயது முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74 வயதிற்துள் பீமரத் சாந்தி, 77 வயது 6 மாதம் முடிந்து 80 வயதிற்குள் விஜயரத சாந்தி என்றும், உக்ரரத சாந்தியில் எப்படி பூஜாவிதிகள் சொல்லப்படுகின்றன அதையே விஜயரத சாந்தியாக செய்ய வேண்டும் என்று கல்பத்தில் கூறப்படுகின்றது.

வேதங்களையும் ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டு தார்மீகமான வாழ்வைச் செப்பனிட்டு மனித சமூகத்தினை ஓர் கட்டுப்பாட்டினுள் வைத்து அவர்களை நல்வழியில் ஒழுக ஆஸ்வாயனர், போதாய சூத்திரங்களும் க்ருஹ்ய, ச்ரோத சூத்திரங்களும் பிரமாண நூல்களாக வளர்த்தன. இந் நூல்களின் வழியிலேயே பிராமண சமூகம் இன்றும் செயலாற்றி வருவதும் ஓர் தனிச் சிறப்பாகும். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனும் ஆறு கர்மாக்களை பிராமணன் செய்ய வேண்டுமென வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பிராமணர்கள் செய்வதால் தனித்து நின்று தத்தம் கடமைகளை ஆற்றிவர இறைவனது அனுக்கிரகமும் இவர்கட்கு அனுசரணையாக அமைந்திருந்க்கின்றது.

பிரமம்ச்சரிய வாழ்வோடு பிராமணர்களது ஆச்சிரமசேவை ஆரம்பமாகிறது. அந்தந்த நிலையில் அவர்கள் ஆற்றும் ஜபம், தவம், அக்னிகார்யம், அனுஷ்டானம் அனைத்தும் உலக மக்களது ஷேமங்களுக்காகவே அர்ப்பணமாகின்றது சமுதாய நலனுக்ககவே வாழும் பிராமண சமுதாயம் வர்ணாச்சிரம ஒழுங்குகளது செயற்பாட்டுக்கே தம்மை அர்ப்பணிப்பதால் அவர்கள் அந்தணர்களாக போற்றப்பட்டு ஈற்றில் ஆச்சாரியர்களாக மதிக்கப்படுகின்றார்கள்.

இன்றைய நன்னாளில் மகிமை பொருந்திய ஷஷ்டியப்தபூர்த்தி விழாக்காணும் மேற்படி குருக்கள் தம்பதிகள் நீண்டகாலம் வாழ்ந்து சைவத்தமிழ் உலகிற்கு அரும்பணியாற்றி, மகுடாபிஷேகம், பூர்ணாபிஷேகம், கனகாபிஷேகம், காணவேண்டுமென அன்னை ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை வந்தனம் செய்கின்றோம்.

கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா

சிரேஷ்ட விரிவுரையாளர்

சம்ஸ்கிருத்துறை

யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உ

**சிவஸ்ரீ. இரகு கமலநாதக் குருக்கள் BA Hons**

பிரதமகுரு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

**புங்குடுதீவு – 6** **இலண்டன்**

18 Hydeside Gardens, Edmonton N9 9RR

07985 527429, ragu_kamal67@yahoo.co.uk




## சிவாகமங்கள் கூறும் ஸ்பரிசாகுதி கிரியையில் காணப்படும் சமய தத்துவ சிந்தனைகள்

யாழ்ப்பாணம் சுருவில் சிவஸ்ரீ. நடராஜ யோகானந்தக் குருக்கள் (மோகன் குருக்கள்), ஸ்ரீமதி மாலிணி அம்மா தம்பதிகளின் சஷ்டியப்த பூர்த்தி விழா 25.01.2017 இலண்டனில் நடைபெறுகிறது. சிறந்த குருபாரம்பரியத்தை கொண்ட தம்பதிகளின் மணி விழா சிறக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் திருவருளை வேண்டி தம்பதிகளின் மணிவிழாவில் இக்கட்டுரையை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்து பண்பாட்டில் நிலைக்கலணாய் விளங்குபவை ஆலயங்கள் ஆகும். எங்கும் பரந்தும் வியாபித்தும் உள்ள இறைவன் சானித்தியமாக உறையும் இடம் ஆலயங்களே என்ற நம்பிக்கை இந்துக்களிடயே தொன்று தொட்டு நிலவி வருகின்றது. இவ்வாலயங்களில் நிகழும் கிரியை ஒழுங்கு, வழிபாட்டு மரபு, நிர்மாணிக்கும் நெறிமுறைகள், குற்றம் குறை ஏற்படும் இடத்து மீண்டும் நிறைவுறச் செய்யும் வழிமுறைகள் ஆகிய இன்னோரன்ன விடயங்களை கூறுதற்கு சில ஒழுங்கு முறைகள் பேணப்பட்டு வந்துள்ளன. தொன்மைக் காலம் முதல் பேணப்படும் வழக்க முறைகளை மரபு என்றழைப்பர்.

இந்துக்கள் தமது வாழ்வை சமயம் மற்றும் கலைத்துறை சார்ந்த வாழ்க்கையோடு வாழ்க்கை அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. சமய வாழ்வு வாழ்கின்ற ஒருவன் சாதனையியலில் ஈடுபட துணைநிற்பவை கிரியைகள் ஆகும். நம்பிக்கை என்பது இந்து சமயத்தின் அடிப்படை. மனித அறிவின் வளர்ச்சியுடன் அதாவது கோட்பாட்டு ரீதியான சிந்தனைகள் ஆற்றலின் ஆரம்ப நிலையுடன் சமயத்தின் தோற்றம் கருக்கட்டுகிறது எனலாம். "சமயம் மனிதனது வாழ்வு அதனின் ஆன்மாவிற்கு ஒளி" என ஓர் அறிஞர் சுட்டுகின்றார். சமயம் வழியாக அவன் அடைய முயலும் உட்பொருள் ஆனது சத்தியத்தின் உயிர் நாடி வாழ்வின் பேரின்பம் மனத்தில் ஆனந்தம் அமைதியில் நித்தியத்தின் பூரணம் என தைத்திரிய உபநிடதம் கூறுகிறது.

மனிதனுக்கு உள்ள இந்த உள்பொருள் பற்றிய அறிவை ஏற்படுத்துவது அவனை ஆன்மீக வாழ்வில் முழுமை பெறச் செய்வதும் சமயத்தின் தலையாய பணியாகும். இவ்வகையிலே தான் இந்து சமயத்தின் சிறப்பு நூல்களான ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நாட்பாதங்களை வகுத்து தந்துள்ளன. இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டே ஆகும் என்பது நாவலர் வாக்கு.

முத்தியாகிய பேரின்பச் சுவையை அனுபவிப்பதற்று அரும்பு, மலர், காய், கனி என விளங்குவன சரியை கிரியை யோகம் ஞானம். " விரும்பும் சரியை முதல் மெய்ஞான நான்கு, அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே" எனத் தாயுமானவர் பாடுகின்றார். இவ்வகையிலே தான் சைவ சமய மரபில் கிரியைகள் முக்கிய இடம் வகிப்பன.

இவ்வகையிலே பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் கூறும் கருத்து கவனிக்கத்தக்கது. "இந்தியாவில் இதுகாறும் எழுந்த ஆஸ்திக மதங்கள் எல்லாம் செயல் வழி, அறிவு வழி என இரு வழிகளை வகுத்துக் கொண்டன. அறிவு குறைந்தவர்களுக்கு இறை வழிபாடு எனும் எளிதான உபாயத்தை எடுத்துக் கூறி அவர்களை உய்ய வைப்பது செயல் வழி. அறிவு வழியோ எனின் சைவ சித்தாந்தம் எனும் மெய்யறிவை உணரத் தருகின்றது. இவ்விரண்டினுள் செயல் வழி பரம்பரையாக பேணப்பட்டு வரும் மரபினை அடிப்படையாகக் கொண்டது. இவ்வாறு பரம்பரையாக வரும் மரபினை ஆகமம் எனக் குறிப்பர். இது பற்றியே இச்செயல் வழியினையும் இது சேர்ப்பிக்கும் அறிவு வழியினையும் எடுத்துக் கூறும் நூல்கள் ஆகமங்கள் எனப் பெயர்பெற்றன. ஆகமம் எனினும் மரபு எனினும் ஒன்றே. இம்மரபு மனிதன் வகுத்துக்கொண்ட ஒன்றன்று. ஆகமங்கள் தெய்வத்திருவளால் உருவானவை சைவத்துடன் தொடர்புடையமையால் சிவாகமங்கள் எனப்பட்டன. இவ்வாகமங்கள் ஒரு சில மட்டுமே எமக்குக் கிடைக்கத்தக்கன. இவை தென்னாட்டிற்கே சிறப்பாக உள்ளன. தென்நாட்டினை தாயகமாக கொண்ட இலங்கையில் விளங்கும் சைவமும், ஆகமங்களும் இதே தொடர்பு கொண்டுள்ளன என்பது தேற்றம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு உருவான திருக்கோயில்கள் எல்லாம் ஆகம விதிகளுக்கு அமைய எழுந்தனவையே. இக்கோயில்களில் கடைபிடிக்கப்பட்டு வரும் வழிபாட்டு முறைகளும் ஆகமம் கூறும் முறைகளே. 1. என்று குறிப்பிடுவது ஆகமக்கிரியைகளுக்கான விரிவான விளக்கமாக அமைகிறது.

இவ்வகையில் தெய்வ சானித்தியமாகும் பொருட்டு ஆலயங்களில் நிகழும் பல்வேறு கும்பாபிசேக கிரியைகளில் ஸ்பரிசாகுதி கிரியை முக்கியத்துவம் பெறுகின்றது. சமய தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஸ்பரிசாகுதி கிரியை பல்வேறு அம்சங்களை தன்னுள் கொண்டுள்ளது அவையாவன சமூகம் (Social), வரலாற்றுப் பின்னணி (Historical Basic), குறியீட்டு தன்மை (Symbolism), உளவியல் (Psychological), அழகியல் (Aesthetic), மருத்துவம் (Medical), ஒழுக்கம் (Moral), மறைஞான அனுபவம்( Mystical), போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கிரியை உள்ளடக்கிய சமயம் ஒரு மொழியைப்போல தொன்மையான காலத்தில் இருந்து ஒரு சமூக விடயமாக எம்மை வந்தடைந்துள்ளது. மொழியானது பல பொருட்களை கொண்டு எம்மிடத்தே வந்தது போல கிரியைகளும் பல பொருளைத் தாங்கிக்கொண்டு மக்களிடையே பரவி உள்ளன. கிரியை என்பது நம்பிக்கையின் இறை வடிவமாகும். நம்பிக்கை கொண்டுள்ள பல எண்ணிக்கையான குழுக்களை ஒன்றினைக்கின்ற சக்தி கிரியைகளுக்கு உள்ளன. இதற்குச் சான்றாக கும்பாபிசேக கிரியைகளின் போது சிவாச்சாரியர்கள், சர்வ போதகர், சர்வ சாதகர் மூர்த்திபர்கள், பரிசாரகர்கள், ஆலய எஜமான் மேற்படிக்காலத்தில் ஆலயங்களைப் பரிபாலனம் செய்யும் அடியார்கள் வழிபடும் அடியார்கள் ஸ்தபதி, சிற்பாசாரி, சூத்திரகாரி, இசைக்கலைஞர்கள், பூமாலை தொடுப்போர் என பல்வேறு குழுமங்கள் ஒன்றாக இணைந்து சமூகமாக நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படுவது சமூக இணைப்பிற்கு மூல காரணமாக அமைந்துள்ளது.

நவகண்ட ஸ்பரிசாகுதி கிரியை பொறுத்தவரை ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது. இக்கிரியை வேத மரபு சார்ந்த கிரியையாக இடம் பெறுவது நன்கு கூர்ந்து கவனித்தால் புலனாகின்றது. வேதங்கள் கூறும் வழிபாட்டு மரபில் யாகத்திலே உரிய தெய்வங்களைக் கூவி அழைத்து அவிர்பாகங்களை வழங்குவர். இங்கு அக்னி, தெய்வத்தையும் வழிபடுவோனையும் இணைக்கும் நிலையில் சிறப்புறுகின்றான். ஆகமங்கள் தெய்வங்களுக்கு கை, கால் முதலிய சரீர அமைப்புக்களைத் தந்து அவற்றுள் தெய்வத்தன்மையை உருவாக்கி கோயில் என்ற நிறுவனத்தை பொதுவாக்கியும் அத்துடன் நிரந்தரமாக்கியும் அங்கே இறைவன் எழுந்தருளும் வண்ணம் நிகழ்த்தப்படுவது கும்பாபிசேகம் எனப்படும்.

இங்கு விக்கிரக வழிபாடு வேதவழிபாட்டில் இருந்து வேறுபட்டது எனினும் அதற்கு முன்னோடியாக உள்ள யாகம் அமைத்து அவற்றில் அக்னியை வழிபட்டு அக்னி மத்தியில் இறைவனை ஆவாகித்து இறைவனது வடிவங்களாக அஷ்டமூர்த்திகளாகப் பாவித்து வழிபாடு நிகழ்கிறது. இவ்வாறு வேத காலங்களில் இயற்கை சக்திகளையே வழிபாடு ஆற்றப்படுவதையும் சிவாகமங்களில் இறைவனின் அஷ்ட வடிவங்களாக கூறப்படுபவை விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகியவற்றோடு சூரியன் சந்திரன் ஆகிய இயற்கையையோடு ஆன்மாவையும் சேர்த்து எட்டு வடிவங்களாக அவாவி நிகழ்த்தும் ஸ்பரிசாகுதி கிரியை அக்னியில் இருந்தும் நீரில் இருந்தும் இறைவனை விக்கிரகத்தில் சானித்யம் பெறும் வண்ணம் நிகழ்த்துவது வேதகால மரபின் தொடர்ச்சியாக ஓர் வரலாற்றுப் பின்னனியை உணர்த்தி நிற்கின்றது.

வேதங்களின் மரபை விரித்துக் கூறும் நூல்கள் பிரமானங்கள். சதபத பிராமணம் நீரை பெண்ணாகவும் தீயை ஆணாகவும் குறிப்பிட்டு இவற்றின் சேர்க்கையால் உயிரினம் தோன்றுகின்றது (1 – 3). உயிரூட்டமான சக்திகளை வழங்குவதில் நீர் பெருமை பெறுகின்றது. நீரில் இருந்தே என்னெற்ற உயிர்கள் தோன்றுகின்றன. பிரம்மகைவர்த்த புராணம் 34:13, லிங்கபுராணம் 82:88 என்பன நீரின் முக்கியத்துவத்தை எடுத்து இயம்புகின்றன. இந்நீரின் சிறப்பைப் பற்றி " கும்பத்தின் உள்ளே நீரும், நீருள்ளே தாமரையும், தாமரையில் பார்வதியும் பரமேஸ்வரனும் சானித்தியமாக இருப்பர்" என நீரின் சிறப்பைப் பற்றி கூறுகிறது. எனவே தான் கும்பாபிசேக காலங்களில் நீரும் நெருப்பும் முக்கிய இடம் வகிக்கின்றன. கும்பாபிசேக கிரியைகளில் கலாகர்சனம் செய்யும் காலத்தில் அக்னி காரியம் செய்து விட்டு அதில் அதிகாரங்க ஆவாகனம் செய்வர். பின் கும்பத்தில் லயாங்க போகாங்க அதிகாரமாக ஆவாகனம் செய்வர். பின் பிம்ப சம்யோஜன காலத்தில் அக்னியில் பூர்ணாகுதி செய்து பிம்ப சமீபம் அடைந்து மூர்த்திஸ்வரி தத்துவேசர் தத்துவேசி ஆகியோரை கும்பத்தில் இருந்து பிம்பத்திற்கு சானித்யம் பெறச்செய்வதே ஸ்பரிசாகுதி.

சதபதப்பிராமணம் கூறும் நீரைப் பெண்ணாகவும் தீயை ஆணாகவும் கூறி இவற்றின் சேர்க்கையால் உலக உயிரினம் தோன்றுவதாக கூறுகின்றது. இதே கருத்தை " சக்தி சிமமாம் இலிங்கமே" (1725) எனத் திருமந்திரமும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. எனவே இவ்வகையில் ஸ்பரிசாகுதி கிரியை மூலம் லிங்கத்தில் நீரும் நெருப்பும் எனப்படும் ஆண் பெண் என்ற இரண்டும் ஒன்றாக இணையும் இடத்தினை நோக்குமிடத்து சதபதப்பிரமாணம் கூறும் வாக்கிற்கு அமைவாக பிரதிஷ்டை அமைகின்றது.

இவ்வாறாக கும்பாபிசேகம் என வழங்கும் பெயர் நீரின் சிறப்பினையை குறித்து நிக்கிறது. இதனை குடமுழுக்கு திருமஞ்சன பெருவிழா எனவும் அழைப்பர். பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய பூமியில் இருந்து பெறப்பட்ட கல் அல்லது உலோகம் ஆகியவற்றினால் சில்ப மரபிற்கேற்ப உருவாக்கப்பட்ட திருவுருவத்தில் இறை சானித்தியத்தை ஏற்படுத்தும் பெருஞ்சாந்தியே கும்பாபிசேகம் எனப்படும். திருவுருவத்தில் என்றென்றும் இறைசானித்யம் வேண்டி, யாகசாலையில் அக்னியின் மூலம் ஆகுதிகள் வழங்கி பூஜிக்கப்பட்ட தெய்வாம்சம் கொண்ட புனித நீரால் திருவுருவத்தில் நீராட்டுதல் ஸ்பரிசாகுதியின் முக்கிய நோக்கமாகும். இவ்வாறு வேத இலக்கியங்களிலும் இதிகாச புராணங்களிலும் புனிதமாக போற்றப்பட்ட நீரும் நெருப்பும் இணையும் ஸ்பரிசாகுதி கிரியை ஆரம்ப நிலையின் தொடர்ச்சியாக ஆகமக் கிரியைகளும் இணைந்து கடந்த காலத்தோடு நிகழ் காலத்தை இணைக்கும் ஓர் வரலாற்றுப் பின்னணியாக விளங்குகின்றது.

இக்கிரியைகளில் காணப்படும் குறியீட்டுத் தன்மை பற்றி சிந்திக்கும் இடத்து கிரியைகள் ஈடுபடுவோர் இறைவன் மீது காட்டும் பக்தி அன்பு போன்ற விழுமியங்கள் இறைவனுக்காக வழங்கும் மலர் மற்றும் நிவேதன பொருட்கள் வழங்கும் தன்மை நம்பிக்கையின் குறியீடாகும். ஸ்பரிசாகுதி காலத்தில் அக்னியிலும் கும்பத்திலும் இருக்கும் இறைவனை பிம்பத்தில் ஸ்தாபிக்கும் பொருட்டு யாகத்தில் இருந்து விம்பத்திற்கு இடப்படும் நாடியானது பிங்களை இடை சுசும்னை நாடிகளாகப் பாவித்து அவற்றின் ஊடாக யாகத்திலே பூஜிக்கப்பட்ட இறை சக்தியை விம்பத்தில் சானித்யம் பெறச் செய்வது குறியீட்டுத் தன்மை ஆகும். ஒரு சிலந்தி தனது உமிழில் இருந்து உருவாக்கும் வலைப்பின்னலில் ஓர் மூலையில் மறைந்திருந்து தருனம் பார்த்து தனக்கான உணவை தேடிக்கொள்வது போல அக்னியிலும் கும்பத்திலும் இருக்கும் இறைசக்தியை பிம்பத்தில் இறைசக்தியை சானித்யம் செய்வதே ஸ்பரிசாகுதி என்பதினை சிவாகம்ங்கள் சிறப்பாக எடுத்து இயம்புகின்றன.

உளவியல் தன்மையில் நோக்குமிடத்து ஸ்பரிசாகுதி காலங்களில் யாகசாலைகள் குண்டங்கள், உபயோகப்படுத்தப்படும் சாதனங்களான சிருக்கு சிறுவம், நெய், பாத்ய அர்க்ய ஆசமனிய பாத்திரங்கள், தொப்பைகள் அனைத்தும் புனித மந்திரங்களாலும் நீரினாலும் பரிசுத்தம் செய்த பின்பு அங்கு ஓர் தூய்மையான நிலை ஏற்படுகிறது. அதுபோல் பிம்பத்தில் அஷ்டபந்தனம் செய்த பின்பு பிம்ப சுத்தி சகள சடத்துவ நியாசம் செய்த உடன் கிரியையில் ஈடுபடுவோர்க்கு தூய சக்தி ஏற்படுகிறது. அழகியல் தன்மை பற்றி இக்கிரியைகள் செய்யப்படும் ஒழுங்கு கும்ப அலங்காரம், விஷ்டரம் (தர்ப்பையினால் செய்யப்படும் வடிவம்), சிருக்கு சிறுவம் என்பனவும் அங்கு நிகழ்த்தப்படும் முத்திரைகளும் அழகியல் தன்மை வாய்ந்தவை.

மரபு ஒழுக்கம் சார்ந்த விடயத்திலே ஆசாரியர் முதலான சிவாச்சாரியர்களும், எஜமான் போன்றோர் இரட்சாபந்தனம் செய்து தம்மை ஓர் வரையரைக்குள் கட்டுப்படுத்தி கிரியைகளை ஆற்றும் போது அங்கு ஓர் மரபு சார்ந்த ஒழுக்கம் பேனப்படுகிறது. அடுத்து மறைபொருள் தன்மை உள்ள ஒரு கிரியையாக விளங்குகின்றது. கிரியை நடாத்துகின்ற ஆசாரியன் சாதாரண நிலையில் இருந்து கிரியை செய்யும் பொழுது மந்திர பூர்வமாக தன் உள்ளத்திலே மறைஞான அனுபவத்தை ஏத்துவர். மக்களுக்காக கிரியைகளில் ஈடுபடும் பொழுது சகளீகரனம், பூதசுத்தி போன்ற கிரியைகள் வாயிலாக உரிய மந்திரங்களைக் கூறி தன்னை பக்குவப்படுத்தி மறைஞான அனுபவத்தைப் பெறுகின்றார்.

சமயம் என்பது நம்பிக்கையையும் தத்துவம் என்பது அறிவாராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. சிவாகமங்களின் வழிவந்த சித்தாந்த சாஸ்திரங்கள் இறைவனுக்கு இருவேறு பேதங்களைக் கூறுகின்றன. ஒன்று உருவ வழிபாட்டை அடித்தளமாகக் கொண்ட தடத்த நிலை எனப்படும் பதிக்கோட்பாடாகும். இது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு கிரியைகள் ஆற்றப்படுகின்றன. சொருப நிலை என்பது தன் இயல்பான நிலையாக சொரூப லட்சனமாக சித்தாந்தம் கூறுகின்றது.

ஆகமம் கூறும் கிரியைகளில் பிரதிஷ்டை என்னும் கிரியை இறைவனின் சர்வ வியாபகத் தன்மையை சுட்டி நிக்கின்றது. இக்கிரியா காலங்களில் இறைவனை அஷ்ட மூர்த்தங்களாக வழிபட்டு அவற்றின் அதிபதிகளாக எட்டு மூர்த்திகள் பூஜிக்கப்படுகின்றார்கள். அதாவது பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்கிரன், பீமன் , மகாதேவன் என போற்றப்படுகின்றார்.

இவ்எட்டுப்பேர்களின் தொடக்க நிலை யஜூர் வேதத்தின் சதருத்திரியம் எனும் பகுதியில் காணலாம். இவற்றுல் சில சிறப்புப் பெயர்கள் சில காரணப்பெயர்கள் சில பொதுப்பெயர்கள் சில பண்பினைச் சுட்டும் பெயர்களாக விளங்குகின்றன. இப்பெயர்களின் வளர்ச்சியே இன்றைய அர்ச்சனை வழிபாட்டின் தொடக்க நிலையாகும். யஜூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் தோற்றுவாயாக அமைந்தவை பிராமணங்கள். இந்து சமய மரபில் நிகழும் கிரியைகளின் வரலாற்றை நோக்குமிடத்து பிராமணங்களுக்கு முக்கிய இடம் உண்டு. கிரியைகளின் முழு இயல்புகளை அறிந்து கொள்ள பிராமணங்களின் பயிற்சி அவசியம்.

சைவ வழிபாட்டை பொறுத்த வரையில் பிராமணங்கள் சிவனின் பெருமைகளைக் கூறி வழிபாட்டின் அமைப்பையும் சிறப்பாகக் கூறுகின்றன. பிராமணங்கள் ருத்ரனை பெருந்தேவன், ஈசானன், தேவதேவன் என்றும் கூறுகின்றன. கௌஷதகி பிராம்மணம் சிவனுக்கு பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்கிரன், அரன் எனக் கூறுகின்றது. சாங்காயனம் எனும் பிராம்மணம் இவ்வெட்டு பேர்களுடன் நீர், நெருப்பு, காற்று, கோள், மரம், ஆதித்தன், தன்மதி, அன்னம், இந்திரன் ஆகிய பொருள்களையும் ருத்திரனோடு தொடர்பு படுத்திக் கூறுகின்றது. இதுதான் இறைவனுக்கு அட்ட மூர்த்திகளைக் கற்பிப்பதற்கு மிகவும் தொடக்க நிலை எனலாம். கும்பாபிசேக காலங்களில் நிகழும் நவகுண்டங்களில் பூஜிக்கப்படுவதும் ஸ்பரிசாகுதியில் நவபேதங்குளும் உணர்த்தும் பெயர் உண்மையும் ஒத்துப் போவதைக் காணலாம்.

கிரியைகளை நன்கு விளங்க விரும்புவோர் அவற்றிற்கு இன்றி அமையாத திருவுருவங்களைப் பற்றிக் கற்றல் வேண்டும். இறைவனின் திருவுருவம் பற்றி காமிகாகமத்தில் (3ஹ327 – 335) சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்து திருக்கரங்களும் உடையவர். ஒவ்வொரு முகத்திலும் மூன்று திருக்கண்கள். ஐந்து முகங்களுள் மேல் நோக்கிய முகம் ஈசானம், கிழக்கு நோக்கிய முகம் தத்புருஷம், தெற்கு நோக்கிய முகம் அகோரம், வடக்கு நோக்கிய முகம் வாமம், மேற்கு நோக்கி இருப்பது சத்யோயாதம் எனக் கூறுகின்றது. இதையே திருமந்திரமும்

நடுவு, கிழக்கு, தெற்கு தர மேற்கு,

நடுவு பழ கநற்குங்கும வண்ணம்

அடைவுள அம்சனம் செவ்வரத்தம் போல்

அடியேற்கு அருளிய முகம் இவை ஐந்தே எனக் கூறுவதைக் காணலாம்.

சிவபெருமானின் திருவுருவத்தை புராணங்கள் பலவாகக் கூறுகின்றன. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களோடு சூரியன், சந்திரன் ஆகிய இரு கோள்களோடு ஆன்மாவாகிய எட்டுடன் சேர்த்து இறைவனுக்கு அஷ்டமூர்த்தி என உண்டாகிற்று.

இதனாலேயே ஆகமங்கள் பிரதிட்டைகளில் ஒன்பது குண்டங்களில் அஷ்ட மூர்த்திகளாக பூஜித்து ஸ்பரிசாகுதி கிரியையின் மூலம் சானித்தியம் பெறச்செய்தல் ஆகும்.

சிவாகமங்களும் இறைவனுக்கு சொரூப நிலையை இரண்டாக வகுத்துள்ளன. இதனையே சைவ சித்தாந்தம் கூறி நிற்கும். சொரூபம் என்பது யாவற்றையும் கடந்த நிலை, என்றும் உள்ள இயல்பான நிலை என சிவப்பிரகாசம் கூறும். இறைவனின் தடத்த நிலைக் கொள்கையை அற்புதமாக விளக்கி நிற்கும் பகுதியே நவகண்ட ஸ்பர்சாகுதியாகும். இறைவனாகிய சிவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருவம், உருவம், அருவுருவம் என்ற தடத்தநிலை பெறுகின்றார். இறைவன் கை கால் முதலிய உறுப்புக்களோடு உருவடிவு கொள்வது உயிர்களை ஆட்கொள்ளுதல் பொருட்டு என்பதனை

"உருவருள் குணங்களோடு மூனர்வருதுளி தோன்றல்

கருமருள என்றன் அரசரனாகதி நூல்கள்

தருமரு உபாங்கம் எல்லாம் தான் அருள் தனக்கொண்றின்றி

கரு நுரு உயிர்க் என்றே யாக்கினை நசிந்தனன்றே" 8

முதல் மனது திருவுரு அருள் வடிவானது அவ்வுருவில் தோன்றும் சிரசு, முகம் என்பன அங்கம் கண் மூக்கு செவி கழுத்து மார்பு தோல் நாடி கை கால் விரல் முதலியன பிரத்தியங்கங்கள். சூலம் மழு வாள் வஜ்ரம் அபயம் வரதம் பாசம் அங்குசம் கண்டாமணி அக்னி எனும் ஆயுதங்கள் சாங்கம். வஸ்த்ரம் பூணூல் சந்தனம் ஆபரணம் ஆசனம் என்பன உபாங்கம் என்பனவாகும். இவற்றை அங்கம் – திருமேனி பிரத்தியங்கம் அத்திருமேனியில் உள்ள உருப்புக்கள் சாங்கம் அங்கத்தோடு கூடியது. உபாங்கம் அங்கத்தை விட்டு நீங்காது சமீபத்தோடு இருப்பது இவற்றையே சாங்க உபாங்க பிரத்தியங்கங்கள் என கிரியாகாலங்களில் செய்யப்படுவன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையாக இறைவனின் வடிவம் கூறப்பட்டாலும் அவை நம்முடைய தேகம் போல்லல்ல அசுத்த மாயையின் தொடர்பில்லாமல் மந்திரங்களல் உருவான தூயதிருமேனியாக இருக்கும். இதையே வித்தியா தேகம் என்றும் காமிகாமம் (3ஹ426) சப்த பிரம்ம ரூபம் என்று அஜிதாகமம் (1ஹ13 – 26) கூறுகின்றன. கலாகர்சனம் முதல் ஸ்பர்சாகுதியீறாக செய்யப்படுவன "லயபோக அதிகாரங்க ஆவாஹனம்" என்ற பெயர் பெறுகின்றன. அடையும் வழிகள், மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்வம், கலை எனும் அத்வாக்கள் ஆறும் முதல்வனுக்கு வடிவங்கள். அத்துவாக்களுக்குள்ளே மந்திரம் இரத்தமாகவும், பதங்கள் முடியாகவும், வர்ணம் தோலாகவும், புவனம் உரோமமாகவும், தத்துவங்கள் எழுவகை தாதுக்களாகவும், கலை அவயமாகவும் கூறப்படும்.

"அத்துவா மூர்த்தியாக வறைகுவ தென்ன யென்னின்

நித்தனாய் நிறைந்த வற்றி லில்சீடா நிலைமையானுந்

சித்தடன்னசித்திற் கெல்லாஞ் சேட்டிடனாத லானும்

வைத்தவா மத்து வாவும் வடிவென மறைகளெல்லம்"

எனவே தத்துவ நிலையில் இவ்வாறு கூறப்பட்ட அதாவது இறைவனுக்கு அத்வாக்கள் ஆறும் வடிவம், அத்தோடு எங்கும் வியாபகனுமாய் அவற்றை விட்டு நீங்காது சித்துப் பொருள் சடப்பொருள் எல்லாவற்றையும் உடனாய் நின்று செலுத்துவனாதலும் அத்வாக்கள் எனும் இவற்றை மந்தரங்கள் ஈசானம் முதல் அஸ்திரமந்திரம் வரையுள்ள 11 மந்திரங்களையும் ஓம் முதல் மகேஸ்வர உள்ள 54 பதங்களையும், 51 வர்ணங்களையும், 224 புவனங்களையும், 36 கலைகளையும், 5 கலைகளை கும்பத்திலும் பிம்பத்திலும் பின்பு பிம்பசுத்திக்குப்பின் செய்யப்படுகின்றன.

போஉறாங்க ஆவாஉறனத்திற்கு கலாகர்சணமும் அதிகாராங்கத்திற்கு அக்னிகார்யமும் லயாங்கத்திற்கு ஆவாஉறனமும் செய்யவேண்டும் என அகோர சிவாச்சார்யார் கூறுகின்றார். அதிகாரங்க ஆவாஉறனத்திற்காக அக்னிகார்யம் செய்யப்படுகின்றது. இங்கே கிழக்கு முதலான குண்டங்களில் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டு மூர்த்திகளுடன் அந்தந்த பூதங்களுக்கும் சூர்யன், சந்திரன், ஆன்மாக்களுக்குரிய இயல்புகளையும் பூஜித்தும் ஆகுதி வழங்கியும் பின்னர் இறைவனின் பிம்பத்திலிருந்து மூர்திகும்பங்களிலும் ஆவாஉறிப்பார். பின்இதேபோல் பிம்ப சம்யோஜன காலத்திலும் ஒடுக்கப்படும். இவ்வாறான அட்ட மூர்த்திகளிலும் அவற்றின் இயல்புகளால் இறைவன் வியாபித்துள்ள தன்மையை மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் திருவைகளில்

"பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி

நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி

வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

என வரும் அடிகளால் உணரலாம்.

அஷ்டமூர்த்திகளின் அதிபதியாக நிலம் – தத்புருசன், நீர் – அகோரம், நெருப்பு – சிகா, வாயு – கவசம், ஆகாயம் – சத்யோஜாதம், சூரியன் வாமதேவன், சந்திரன் – சிரசு, யஜமானன் – உறிருதயம் என்ற ஒழுங்கில் மூர்த்திகளும் அதன் அதிபர்களும் விளங்குவர். இறைவனுடைய தூயதிருமேனியே "சப்தபிரம்மரூபம்" என அஜிதாகமமும் பௌஷ்கர ஆகமமும் கூறுகின்றன. சிவஞானசித்தியர் சுபக்கத்தில்

"மந்திர மத்து வாலின் மிகுத் தொருவடிவமாகத்

தந்ததெ னரனுக் கென்னிற் சகத்தினுக் குபாதா னங்கள்

விந்துமோ இனிமான் மூன்றா மிரவற்றின்மேலாசி விந்துச்

சந்தையா ரதீத மான சிவசக்தி சேர்ந்து நிற்கும்." 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுத்தமாம் விந்துத் தன்னிற் றோன்றிய வாத லானுஞ்

சத்திதான் பரேரித் துப்பின் றானதிட் டித்துக்கொண்டே

அத்தினாற் புத்தி முத்தி யளித்தலா லரனுக்கென்றே

வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைகளெல்லாம்." 11

முதல்வனுக்கு அத்வா வடிவங்கள் ஆறினுள்ளே மந்திர வடிவமே மிக்கதே என்பது வேதாகமங்களின் முடிவு.

ஈசானம் தத்புருசம், அகோரம், வாமதேவம், சத்தியோயாதம், ஹிருதயம், சிரசு, சிகா, கவசம், நேத்ரம், அஸ்ரம் என்பனவே பிரதான மந்திரங்கள் ஆகும். இவை சதாசிவனின் வடிவம் என்றும் பிரிவு இன்றி இருக்கும் சக்தி என்றும் சிவாகமங்களில் கூறப்படுவன.

சிவஞான சித்தியாரும் பஞ்ச பிரம்ம மந்திரங்களை ஏன் ஆகமங்கள் இறைவனின் வடிவம் என்பதனை

"மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவமாகத்

தந்திரம் சொல்ல வாரிஞ் கன்னனில் சாத்தி கேளி

முந்திய தோற்றத்தாரு மந்திர மூலம் தானும்

அந்தமில் சந்தியாதிக் இசைந்தலும் ஆடும் அன்றே"

பஞ்சப்பிரம்ம மந்திரங்கள் முதல்வனுக்கு வடிவமாக தந்திரங்கள் என்று போற்றப்படுகின்றன ஆகமங்கள் சொல்லும் காரணம் எனின் ஏனைய மந்திரங்களுக்கு எல்லாம் முன்றைய தோன்றின வாலும் அவற்றிக்கு காரணமாய் இருத்தலாலும் அவை முதல்வனுக்கு கூறப்பட்டன.

எனவே தான் கும்பாபிசேகக் காலங்களில் அஷ்ட மூர்த்திகளின் அதிபதியாக இம்மந்திரங்களே பூஜிக்கப்படுகின்றன. தத்துவ ஆய்வில் நன்கு சிந்திக்கப்படுகின்றது. ஐம்பூதங்களும் சூரியன் சந்திரன் ஆன்மா முதலியவற்றை இயக்குபவன் ஒருவன் உளான் என்பதனை அவற்றின் தன்மையைக் கொண்டு இவை அழியும் தன்மை மிக்கன அவை தோன்றி நிலைபெற்று அழிந்து மீண்டும் உற்பத்தியாக்க ஒருவன் வேண்டும் என்பது சைவ சித்தாந்தத்தின் கடவுள் இயல்பின் சிறப்பம்சம் எனவே தான் சிவஞான சித்தியாரும்

"ஒருவனோடு ஒருத்தி யொன்றன்று உரைத்திடும் உலகமெலாம்

வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே

தருபவன் னொருவன் வேண்டும் தான் முதலீறுமாகி

மருவிடு அனாதி முத்த சித்தரு மன்னினின்றே"

இக்காரணத்தினால் தான் இறைவன் அஷ்டமூர்த்தியாகவும் அவற்றின் அதிபதியாகவும் பூஜிக்கப்படுகின்றான். இந்த அஸ்ட மூர்த்திகளும் லிங்கத்தில் பூஜிக்கப்பட்டு சானித்தியம் ஆகும் வண்ணம் ஸ்பரிசாகுதி நடைபெறுகின்றது.

அருவத்திருமேனிகளான சிவம், சக்தி, நாதம், விந்து என்பனவும் உருவத்திருமேனிகளான பிரம்மா, விஸ்ணு, ருத்ரன், மகேஸ்வரன் என்பனவும் அருவுருவத் திருமேனியான சதாசிவமும் சேர்ந்த ஒன்பது பேதங்களும் லிங்கத்தில் பூஜக்கின்றன.

"மலர்ந்த வயன் மால் ருத்ரன் மகேசன்

பலன் தரும் ஐமுகம் பரவிந்து நாதம்

நலன் தரும் சக்தி சிவம் வடிவமாகி

பலன் தரு லிங்கம் பராநந்தியாமே" 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் திருமூலரும் சிவஞான சித்தியாரில் சிவம், சித்தி, நாதம், பிந்து சாதாசின் திகழும் ஈசன் குலந்தரு குருத்திரத்தான் மாலயன் ஒன்றி ஒன்றாய் பலன் தரு மருவ நாளில் குரு நாமு பயம் ஒன்றாம் நலந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர் எனவே

"பரம்பொருளே நவபேதங்களாக விரிகிறான்" என்பது தெளிவு.

ஸ்பரிசாகுதி காலங்களில் பிம்ப சம்யோதங்களின் போது இவ்வொன்பதும் பூஜிக்கப்படுகின்றன. இவ்வாரே மூர்த்தீஸ்வரர் அதன் ஈஸ்வரிகளும் தத்வம் தத்வேசர் தத்வாஈஸ்வரிகளும் பூஜிக்கப்படுகின்றனர்.


இவ்வாறு நிகழும் கும்பாபிசேகக் காலங்களில் முக்கியமான கிரியையாக ஸ்பரிசாகுதி கிரியையானது பல சமய தத்துவ சிந்தனைகளை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உஷாத் துணை நூல்கள்.


1. பேராசிரியர். கா.கைலாசநாதக் குருக்கள் – சைவத்திருக்கோயில் கிரியை நெறி, உம் பதிப்பு கொழும்பு – 1992 பக்கம் 3 – 4
2. பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர் – இந்து பண்பாட்டு மரபுகள் , 1992 – பக்கம் 45
3. சிவஸ்ரீ ச. குமாரசாமி குருக்கள், அச்சுவேலி – சிவலிங்க பிரதிஷ்டா விதி, 1953 – பக்கம் 50
4. பகவத்கீதை – 3:14
5. பேராசிரியர். கா.கைலாசநாதக் குருக்கள் – சைவத்திருக்கோயில் கிரியை நெறி, உம் பதிப்பு கொழும்பு – 1992 பக்கம் 29
6. திருமூலர் திருமந்திரம் – 7ம் தந்திரம் கழக வெளியீடு – 1994 சதாசிவ லிங்கம் 1705
7. பேராசிரியர். கா.கைலாசநாதக் குருக்கள் – சைவத்திருக்கோயில் கிரியை நெறி, உம் பதிப்பு கொழும்பு – 1992 பக்கம் 40
8. சிவஞான சித்தியார் – சுபக்கம் 1971 – 1:2 – 67
9. மேற்படி 1:2, 76
10. மேற்படி 1:2, 77
11. மேற்படி 1:2, 78
12. மேற்படி 1:2, 79
13. மேற்படி 1:21
14. திருமந்திரம் 7ம் தந்திரம் – 1745
15. சிவஞான சித்தியார் – 2:3 – 164
16. மேற்படி 2:3, 165
17. சிவஸ்ரீ. ஐ கைலாசநாதக் குருக்கள் –"கும்பாபிசேக தத்துவம்" புங்குடுதீவு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயக ஆலய கும்பாபிசேக மலர் – 1973 பக்கம் 6
18. அகோர சிவாச்சாரியர் பத்ததி மற்றும் கையெழுத்துப் பத்ததிகள் (பிரதிஷ்டா பூசனம் சிவஸ்ரீ. ஐ கைலாசநாதக் குருக்கள், நயினை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் திருமுறைகளும் வேத சிவாகமங்களும் .

சைவப்புலவர்,சைவசித்தாந்தபண்டிதர் சிவஸ்ரீ பா .வசந்தக்குருக்கள் B.A(hons)

லண்டன் கற்பகபதி கற்பக விநாயகர் ஆலயம்

தமிழ் சைவ மக்களுக்கு கிடைத்த அரும்பெபெரும் அன்பு நூல் சைவத்திருமுறைகளாகும் அருள் நூல் வேத சிவாகமங்களாகும். இவற்றின் அடிப்படை உண்மைகள் சிலவற்றை தெரிந்து கொள்வோம் .இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டதும் உதாரணம் பித்தாப்பிறை, .தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் ,உலகெலாம் அதேபோல் இறைவனே தான் பாட்டுப்பாடியது பதினோராம் திருமுறையில் உள்ள திருமுகப் பாசுரம் . மணிவாசகர் சொல்ல இறைவனே எழுதிய திருவாசகம் இவ்வாறு பல பெருமைகளை உடைய திருமுறைகள் இறைவனை நோக்கி நாம் பாடும் பக்தி பனுவல்களாகும்

இவற்றைஅருளிய நாயன்மார்கள் இறைவனுடன் நேரடித்தொடர்புடையவர்கள்இறைவனைக் கண்டவர்கள். இவ்வாறு இறைவனைக் கண்டவர்கள் சொன்னதை கேட்கவேண்டும்.கண்டவர்கள் சொல்வதைக் கேட்கக் கூடாது.அது மாத்திரமின்றி இறந்தவர்களை எழுப்பிய பெருமை உடையது இத் திருமுறைகள்.. ஊமையை பேச வைத்தது இத் திருமுறைகள். பூட்டிய கதவை திறந்தது .திறந்த கதவை பூட்டியது.வெப்பு நோய் தீர்த்தது.இவ்வாறு பல அற்புத செயல்களை நிகழ்த்திய பெருமை உடையவர்கள் நாயன்மார்கள்.

சுமார் பதினெட்டாயிரம் பாடல்களை உடையது .இருபத்தேழு அருளாளர்களால் அருளப்பட்டது பன்னிரெண்டு திருமுறைகளாக தொகுக்கப்பட்டுள்ளது. இத்தனை பெருமைகளை உடைய திருமுறைகள் வேத சிவாகம வழிபாட்டை உயர்த்தி போற்றி பல இடங்களில் கூறுகின்றன என்னில் நாமும் வேத சிவாகம வழிபாட்டை மதிக்க வேண்டும்.கூறுபோடக்கூடாது என்பது பொது விதியாகும். சமஸ்கிருதம் வடமொழி வேதம் ஆகமம் என்பன சைவ சமயத்திற்கு புறம்பானதல்ல என்பதை பல இடங்களில் சுட்டிக்காட்டயுள்ளனர் அருளாளர்கள். பிற்காலப் பாடல்கள் எனப்போற்றும் சகலகலாவல்லி மாலை அபிராமி அந்தாதி திருப்புகழ் என்ற பல அருட்பாடல்களும் வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் என்பவற்றை சுட்டி நிற்கின்றன.

வடநூல் கடலும் தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் சென்னாவிநின்று காக்கும் கருணைக் கடலே ,விழிக்கே அருளுண்டு வேதம் சொன்ன வழிக்கே வழிபட நெஞ்சுண்டு பரமாகம பத்ததியே ,,நாதவிந்து கலாதி நமோ நமோ வேதமந்திர சொரூபா நமோ இவ்வாறான பல சொற்றொடர்கள் உண்டு இவை வடமொழியாகிய சமஸ்கிருத சிறப்பை ஏற்று ஏத்தும் திருமுறைகள் அருட் பாடல்களின் மதிப்பை நாம் போற்றவேண்டும்.

சைவம் என்றால் வேதம் ஆகமம் உபநிடதம் புராணம் இதிகாசம் திருமுறைகள் சைவ சித்தாந்தம் என்னும் நூல்களை மதிப்பது.உண்மைச் சைவர்கள் இவை எல்லாவற்றையும் போற்றுவார்கள்.இவை எல்லாம் இறைவனது அற்புத பெருமைகளை சொல்பவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அடி எடுத்துக் கொடுத்த திருமுறைகளே அற்புதம் வாய்ந்தவை என்றால் இறைவனால் அருளப்பட்ட வேத சிவாகமங்கள் மிகப் பெரிய மகிமை உடையவை. இவற்றை தமிழர்களாகிய நாம் உயர்வாக போற்றும் திருமுறைகள் மூலம் அறியலாம் சைவமும் தமிழும் எனும்போது சைவத்தில் காணப்படும் வேதங்கள் புராணங்கள் உபநிடதங்கள் பிராமணங்கள் எனப்பலவும் அடங்கும்

அங்கமும் வேதமும் ஓதும நாவர் அந்தணர் நாளும் அடிபரவ ..முதலாம் திருமுறை

புனையழ லோம்புகை அந்தணாளர் பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப முதலாம் திருமுறை

மறையும்பல வேதியரோத ஒலிசென்றுறையும்.புனல் முதலாம் திருமுறை

அங்கமோராறும் அருமறை நான்குமருள் செய்து முதலாம்திருமுறை.

வேதியர்கள் வேள்வி ஒழியாது மறை நாளும் ஓதியரன் நாமமும் உணர்த்திடும் நள்ளாறே

வேதமொலி சொல்லி மறையாளர் இறைவன்றன் பாதமிவை ஏத்த நிகழ்கின்ற பழுவூர்

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி மலரால் வழிபாடுசெய் (திருமறைக் காட்டுப் பதிகம் )

ஓதும் நல்வேதத்தர் கேடிலா வேள்வி செய் அந்தணர் வேள்வியர்(திருவீழிமிழலை)

ஆகமத்தொடு மந்திரங்கள் அமைந்த சங்கத ( மூன்றாம் திருமுறை ) இவ்வாறு பல இடங்களில் வேதம் ஆகமம் அந்தணர் இவைகளோடு தொடர்பு படுத்தி வேள்வியையும் தொடர்பு படுத்தும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை இவ் அருளாளர்களே கூறும் போது நாம் சமஸ்கிருதமும் ஆகமும் அந்தணரும் வேண்டாம் என்று சொல்வது நாயன்மார்கள் சொல்லையும் அலட்சியம் செய்கின்றோம் என்பதை தெளிவுள்ளவர்கள் தெரிவார்கள். வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு என்பது திருவாசகம்

எல்லாவற்றிற்கும் மேலாக திருமுறைகளில் ஒன்றாக விளங்கும் திருமந்திரம் சாத்திர நூலாகவும் விதந்து கூறப்படுகிறது. இத்திருமந்திரம் வேத சிவாகமங்களை பழிக்கவில்லை மாறாக உயர்த்தியே பாடுகிறார்

இருக்கு உருவாம் எழில் வேதத்தின் உள்ளே ( திருமந்திரம் 53)

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம் ( திருமந்திரம் 62)

ஆரியமும் தமிழும் உடனே சொல்லி காரிகையார்க்கு கருணை செய்தானே (திருமந்திரம் 65)

தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும் உணர்த்தும் அவனை உணரலுமாமே (திருமந்திரம் 66)

ஆறிடும் வேள்வி அருமறை நூலவர் ( திருமந்திரம் 1861)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்) இவ்வாறாக பல இடங்களில் வடமொழி ஆரியம் வேதியர் மறையவர் அந்தணர் பார்ப்பான் ஆகமம் வேள்வி என குறிப்பிட்டுள்ள செய்திகள் நாமும் இவற்றை மதித்து போற்றி ஆலயங்களில் வழி பாடாற்ற வேண்டும் என்ற முடிவையே எடுத்துக் காட்டுகிறது .விரிவஞ்சி ஒரு சிலவே காட்டப்பட்டுள்ளது.சைவத்திருமுறைகளைபோற்ற வேண்டுமெனின் வேத சிவாகம அந்தணர் வழிபாட்டையும் ஏற்க்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. வடமொழியையும் தமிழ் மொழியையும் சமகாலத்தில் போற்றுவோம் ஒன்றைத்தூக்கி ஒன்றை தாக்கக் கூடாது

வேதமோடாகமமும் விளங்கிதிகாச புராணமும்

நாதமொடு கீதமும் நலந்தரும் திருமுறைகளும்சிவ

பாதநெறி பணிந்திட பரவி வரு நூல்களும்

பேதமறப் போற்றியே பேணுவோம் சைவ சித்தாந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI GURU KRISHNA

**( V. PALGHATGOVINDAN )**

**Spiritual Head – Sri Siva Aalayam – Hindu Temple – Rylands**

**Executive Member of the Western Cape Religious Leaders Forum**

**Marriage officer - commissioner of oaths**

**Sworn Translator – High court of South Africa**

---

Shashtiabdapoorthi - (60th Marriage Anniversary)

"Shashti Abdha Poorthi" or "Ugraratha Shanti" is a Hindu ceremony celebrating the 60th birthday of Sivasri : Yohanandan( Mohan) Nadaraja Kurukkal and renewal his wedding wows with Srimathi Maalini Maami,

Shashti Abda Poorthi

(Sanskrit meaning: Sashti == 60, Abda == years,

Poorthi == completion) is also known as 'Sashti Poorthi'. It is a Hindu ceremony that is celebrated to commemorate the 60th birthday of a person. From the Western perspective, it is close to the sliver-wedding anniversary. As per the Hindu culture, the age sixty is of great significance because it is considered as a turning point in a man's life for at this age one has usually fulfilled his commitments to family and home and so he can turn his mind to spirituality. We can say that, the period before he reached sixty is defined by materialistic pursuits and thereafter it is to be defined by his strive towards spiritualism.

Meaningful and elaborate rituals have been included to mark this milestone in a person's life. Some of the wedding rituals are performed. Some call this ceremony as Ugra Ratha Shanthi, which literally means appeasement of harsh times.

The couple seek the blessings of elders who have themselves completed their Shashti Abda Poorthi and in turn bless the ones who are younger to them.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Usually, Sashti poorthi is celebrated at the completion of the 60th year and the ushering in of the 61st year.

The Rituals Involved

Even before commencing the ceremony, the morning rituals like bath and sandhya vandhanam are carried out to purify the body. Vedic Pundits will now give permission to start the rituals, this is referred to as 'ANUKJNA'.

- Ganapathi Pooja is done as in all the Hindu rituals.

- Sankalpam: The couple prays to the almighty to grant them a healthy and contented life. They also seek blessings from God to free from the sins committed and bad effects of forthcoming planetary periods.

- Graha Preethi Dhana and Vaishna Sradham are conducted at this stage.

- 'Abyuthaya Sradham' or 'Nandee Sradham' is performed to seek the blessings of the ancestors.

- Punyaham is done so as to sanctify the venue. It is also symbolic of purifying one's body and mind.

- Repetition of Wedding Rituals

In the ceremony, the couple who is celebrating the ritual repeats their marriage vows; they perform the wedding rituals like malai marral (exchange of garlands), Mangalya Dharanam (tying of the mangalyam) and taking Manthra Snanam with the water blessed with the udhaka sayana manthras. The Vedas are recited for about four days and discourses on the epic Ramayana are conducted to remind people of the Vedic way of life.

Kalasha Sthapana and Kalasha Pooja

The Mrityunjayadevata Kalasa Sthapana and Pratima Sthapana form an essential part, while archanas are also performed.

The procedure for Kalasa Sthapanam varies from place to place, the main difference being in the number of kalashas used, it can be 60, 33 or 12. After Kalasa Sthapana, Shodasa Upachara Pooja is performed with the chanting of Vedic mantras in order to invoke the deities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The worship of Gowri or Durgai and Lord Vishnu too form an integral part of the ritual. This is called the Paratpara Puja. Prayers and pujas to Samvathsara devatas- the gods of the sixty Tamil/Sanskrit years, the Nakshathra devatas- the gods for all the stars, Thithi Devatas- the gods for the phases of the moon and Dikpalakas the gods for the eight cardinal directions. The deities are invoked in the Mandalam or Kumbhams.

Chanting of various Vedic mantras including Varuna Sookhtha, Purusha Sooktha, Nakshatra Sookhta and Dik Palaka Mantrasare done and concluding with the performance of Dosha Shaanthi.

Homas :/ Yagnas : Sacred Vedic Fire Ceremany :

The following are the set of Homas that a Sashti poorthi ritual must include.

1. Ayush Homam : During the Homa, Thrayambaka Mantras/ Mahamirthunjeya Mantras will be chanted by 108 Ahuthees. The first of the Homa that are performed during Sashti poorthi is the 'Ayush Homam'. This Homam is done to pay homage to Ayur Devatha who blesses people with a long life. A coconut, betel leaves, fruits, ghee, and milk sweets are required for this Homa and is performed before a Ganesha yantra.

2. Navagraha Homa: A fire ritual for pleasing the nine planets that rule and define the fruits of one's karma, so that they may be favourable to one's spiritual pursuits that one is expected to seek after he turns sixty.

3. Dhanvanthri Homa: to invoke the blessings of Dhanvanthri, the God of medicine. He is depicted as having medicinal herbs in one hand, and a pot containing nectar in the other. When this Homam is performed, it spreads positive energies and good will. It has the powers to clear ill health

4. Maha Mruthyunjaya Homa: Lord Shiva is invoked as Mahakaal the primal force that has conquered the time and hence 'the death'. This particular Homam is done for longevity. 21 mantras are chanted and the special offering here are Durva grass, an herb called Amrita, Banyan twigs, sesame seeds, cow's milk, sweets and twigs from the Chamita tree. The fire in this Homam is not fully put out for at least twenty-four hours, as it is done every six hours or four Prahars. The main mantra chanted in this Homam is:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Om Trayambakam Yajamahe Sugandhim Pushtivardhanam

Urvarukamiva Bandhanam Mrityor Mukshiya Mamritat

This homa is concluded with Jayaathi Homa. Then Puna pooja is performed which is followed by the ritual in which Kalasa Jala is spread on the Kartha and all those present at the occasion. Aajya Nireeshanam or Chaya Dhanam is performed next.

Mangala Snana - Ceremonial bath

After this, Mangala Snana has to be conducted on the couple using eleven dravays, which are Gorochanam, Curd, Ghee, Durva grass, Cow's Milk, Fruits, Flowers, Mirror, Deepam, Mud, Gold.

This ritual is done to get long life, health, courage, wealth, knowledge and beauty.

Mangal Snana is followed by the Kalasha Abhisekha on the couple by the rituals and elderly scholarly people. The cloth used in this ceremony is then given to purohits in charity.

Dhanam in Shashtiabthapoorthi

The ceremony of Shashtiabthapoorthi would be incomplete without the "Dhanam" or charity. Various Dhana are performed by the couple for blessings and prosperity. The Dasa Dhana - the term dasa refers to "ten" and Dasa Dhana is the collective term for ten different types of offerings which are:

1. Cow Dhana or Gho Dhana:

Cow has always been sacred to the Hindus and Gho Dhana or Cow Dhana is sure to bring about good fortune and peaceful life. The Dhana is given to Vedic experts by the couple. As per the rules, substitution of the cow by Go Moolya and Coconut also yields the same results. Go Moolya means price of the cow.

2. Gold Dhana or Hiranya Dhana: believed to bestow superior powers to the giver and also free from all the sins committed by him.

3. Bhoo Dhana or Land in Charity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The concept behind Bhoo Dhana is that giving land to cultivate would bestow the giver with an opportunity to lead a comfortable life. The ritual is assumed to be complete with the offering of a sandal wood piece (substitution to land).

4. Vasthra Dhana or Cloth in Charity: As the name indicates, this ritual includes giving of a cloth, which mostly is veshti or uthareeyam. This ritual is very important as it brings prosperity and harmony in life.

5. Jaggery in charity or Jaggery Dhana: is being conducted to appease Goddess Lakshmi who will bless the giver with opulence.

6. Lavana Dhana or Salt in Charity: is carried out to please Lord Sri Rudra to gain good health.

7. Food Dhana or Food Grains in Charity: Offering food grains such as rice, paddy etc will help the giver to lead a prosperous life.

8. Silver Dhana or Silver in Charity: is performed to appease pithrus (ancestors) or Lord Vishnu.

9. Ghee Dhana: will be carried out by offering ghee in a bronze carrier to please all Devathas. Ghee Dhana redeems the giver from all the bad karmas (sins) and purifies his soul.

10. Sesame Dhana: Like Ghee Dhana, Sesame when offered in an Iron or Copper vessel helps the giver to get rid of all the sins.

Panch Dhana

Besides Dasa dhana, some people do a Panch Dhana as well, which includes offering of a religious book, Vastram, Deepam (Lamp), Udhaka Kumba (water taken in Copper or Brass Vessel), Bell

Performing the Panch Dhana with the Dasa Dhana will appease all purohits and Devathas who will in turn, provide their blessings for a prosperous and happy life.

Phala Dhana

There is a very important Dhana performed in the Shashti Abda Poorthi ceremony, and is usually performed after all the rituals are completed and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the couple gives Phala or fruit to all those who have been part of the rituals.

Bhoori Dakshina

Like Phala Dhana, Bhoori Dhana is also conducted to seek the blessings of elders and scholars present at the occasion.

The last ritual is the Maha Aashirvaadam followed by Brahmana Bhojanam and Swasthi Vachanam.

Shashtiabdapoorthi can be performed in a series of places. It can be done in a holy place, a temple, on the banks of a river or in one's residence.

Our Best wishes to Sivasri : Yohanandan( Mohan) Nadaraja Kurukkal & Srimathi Maalini Maami.

**PG Venkatakrishnan Sarma (Guru Krishna) Gowri, Balaji & Dharani - Cape Town, South Africa.**

---

Serve ॐ Love ॐ Give ॐ Purify ॐ Meditate ॐ Realise ॐBe Good ॐ Do Good

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Tamil Community and its traditional resources

**R.Chandrasegara Sarma M.A,**
Consultant,
Shanthiham, Association for Health and Counselling,
Jaffna,
Sri Lanka.

## Introduction

When we talk about psychosocial problems and mental health, we are talking about people and communities. Communities are made up of people and people behaviours by the rules of the community. People live together in families. Individual people, families and community are related. People manage their problems individually, in their families and in their community. There are many mechanisms in the community for finding solutions to problems.

People live by the culture, rules and beliefs given by their community. On the other hand, it is these same people that make up the community, and they may change the rules. Our lives as individuals is embedded within the community.

Natural disasters (such as floods, droughts), political changes, war and displacement have effects on the community, the family and the individual.

## Changes in the family structure

People living together make a household. The composition of the household is not always the same. Especially in the last decades, mush has changed. For example, in Jaffna during the Indian Army operations in 1987 and the mass exodus in 1995 many changes took place in the family structure.

Many lost their husbands, wives, siblings, parents, or children. Many were separated. Some have 'disappeared', others have sought asylum abroad, some went to the Vanni, while others are living in refugee camps. By all this, the number of orphans, widows, helpless and abandoned people have increased.

Not only the effects of war, modernization has also caused changes in the family structure and functioning but also mainly, it has made a break up of traditional extended and even nuclear family structures.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When one member of a family is affected the other members will be helpful and caring by being supportive. They will help him or her to face the problem by sharing the worries and temporarily bear the burden. Within the family circle, a member affected by an external stress will recover easily and naturally. Thus it is prudent to use the family as a resource and support. However, in some instances the family dynamics and relationships can be the cause of the person's psychological problems. For example, marital disharmony, alcoholism, domestic violence, and poverty can be mentioned. Families without the father or mother (due to death or separation) can affect the other members, particularly the children. A helper should first attempt to repair, heal or restitute such damaged families. When these attempts fail, other avenues like seeking the help of social resources (priests, elderly, leaders) can be tried.

## Family dynamics

Within a household, people live together and support each other. Some are responsible for others, and they take the decisions. Men (the fathers) take some decisions; women (the mothers) take other decisions. Sometimes the elderly also take decisions. Generally these decisions are taken with understanding. But sometimes differences in opinion and family discord can occur.

Hence, if you are trying to support a family, it is important to know who makes the decisions, and how the decisions are made.

Families are made up of different kind of people. All these individual people do the things that fit with their sex, their age, their role in the household. They all have specific things to do, and they may all develop specific problems. Let us look at some of the people in the family.

## Children

Children play, learn, and have responsibilities. They grow and develop when they are young. They need nutrition, support, protection, and a safe environment. There are differences in bringing up children. Girls are brought up in a different way than boys. Older children take care of younger children.

There is much to say about children, and the problems they may have. Here we want to stress that children are full members of the family. They are aware of problems in the family. They know the situation and see what happens. The things they experience are important, as these experiences play a role in the development from child to adult.

## Older People

When their children become adults, get married and start their own families, older people have less responsibilities. This is a change in their lives. They have more time to think about their own lives and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the good and bad things that have happened. They have worked hard all their lives and this work helped them not to think about the terrible things which happened. Now these things come back to their minds, and sometimes they don't know how to stop thinking about these events.

Some older people feel they are not respected in the village as they expected they would be. During the past two decades, they have been through many changing situations. They had to learn new skills in order to survive. The younger generation does not ask their advice as much as the older people would like.

### Younger People

In the present situation, younger people in the family are expected to take up more responsible roles. They have to help with the work. The things children are expected to do depend on their place in the family (are they first-born?) and on their gender. When the parents in a family have problems, these youngsters often carry a large part of the burden.

### The community

The community is a group of people living and working together. The village (uur) is a community. People know each other, and have relationship. There are also relationships outside the village too. When we talk about community, we mean the people living in a village, and the people they have relations with inside and outside the village.

When a family has problems, how can they ask for help? Usually, people in the community know about the families who are having a difficult time. When families are not able to take care of themselves, when they slowly become more marginalized, they may be in need of support.

However, not every family may want support. There may be problems in a family which are embarrassing. Problems between husband and wife or between a mother and her children, are often private. One should be sensitive to this. Community support is something very valuable. Hence, community gossip or jokes being made at the expense of people who are having serious problems, makes things much worse.

### Resources in the community

In finding solutions for psychosocial problems, we should utilize the available resources most effectively. Sometimes people think that new solutions should come from outside the community. Guide them to find the solutions, which are already available in the community.

There are many people who have the skills to solve and to prevent psychosocial problems. Many people have specific roles in the community. As they provide certain services to people, they can be called

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

resources. The resources are health staff, teachers, village leaders and Grama officers (GS). Others have no formal positions within the government structure, but act on their own, as individuals. These may include private practitioners, traditional healers (Siddha, Ayuerveda and native practitioners), mediums, astrologers and others belonging to the religious community (Religious leaders, Hindu priests, Catholic Fathers and Sisters, Protestant priests). There are also groups of people who have organized themselves for a specific purpose, such as committees and associations.

### Religious Leaders

The religious leaders help people through religious and psychosocial methods. They have a reputation for healing psychosocial problems, using past experiences and knowledge gained from their Gurus.

Hindu priests, the *Kurukkal* perform *Abishekam, Pooja, Archanai* and gives *Vipoothy, Theertham* (holy water), *Santhanam, Kunkumum* and flowers as *Prasatham* and bless the people. In addition they do *Vipoothy poduthal, Nool Kadduthal* and giving blessed water. They also chant *manthraas*, make others to sing *thevaram* and *puranam*. They perform rituals like *shanthi* and thereby help the people to go through difficult stages in their lives.

*___________*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கலிதர்மம்

## (சிவஸ்ரீ சோம. ஸ்ரீகரகுருக்கள் ஹரோ)

அது தர்மபுத்திரர் ஆட்சிக்காலம் ஒரு நாள் தர்மபத்திரர் தனது அரண்மனையில் தம்பிகளின் வரவுக்காக காத்திருந்தார். அன்றாடம் தம்பிகளுடன் சேர்ந்து உணவருந்தும் அவர் வெகுநேரமாகியும் தம்பிமார் வராததால் மிகுந்த துயருற்றிருந்தார். ஏவலாளியை அழைத்து அம்பிகளை பார்த்துவர பணித்தார்.

வெளியில் சென்ற காவலன் பதற்றத்துடன் ஓடிவந்தான். அவருடைய நான்கு தம்பிகளும் ஒரு குதிரைக்காரனிடம் அடிமைப்பட்டு அவன் போட்ட வட்டங்களுக்குள் நின்று கொண்டிருக்கிறார்கள் எனறான். தருமர் பதற்றத்துடன் புறப்பட்டார். வெளியே அவர் கண்ட காட்சி அவரை அதிர்ச்சியடைய செய்தது.

அங்கே நான்கு வட்டங்களில் நான்கு சகோதரர்களும் நின்றுகொண்டிருந்தனர். அருகில் அனைத்து லட்சனங்களும் பொருந்திய ஒருவன் பார்த்தவுடன் தருமருக்கு அனைத்தும் புரிந்தது. தம்பிகனை விடுவிப்பதானால் குதிரைக்காரனின் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டும் தருமர் தயாரானார்.

குதிரைக்காரன் சொன்னார் ஐயா தருமபுத்திரரே நான் வரும் வழியில் ஒரு விசித்திரமான காட்சியை கண்டேன். பெரிய பாழுங்கிணறு ஒன்று அதனுள் வெகு ஆழத்தில் தண்ணீர் இருந்தது. கிணற்றுக்கட்டின் விளிம்பில் ஒரு பொற்காசு அந்த காசை பற்றிக் கொண்டு துருப்பிடித்த பெரிய இரும்பு கடப்பாரை கிணற்றின் உட்புறம் தொங்கிக்கொண்டிருந்தது. ஆனால் அந்த கடப்பாரையின் எடையை தாங்கியும் காசு கிணற்றுள் விழவில்லை அது ஏன்? இது முதல் கேள்வி?

தருமபுத்திரருக்கு கலிபிறக்கும் காலம் வந்துவிட்டது என்பது புரிந்தது. தருமர் பதில் கூறினார். இது கலியின் அடையாளம் பொற்காசுபோல் சிறிதளவு தருமம் செய்வார்கள்.பெருமளவு பாவங்களை செய்வார்கள்.பொற்காசு போன்ற சிறிதளவு தர்மம் நசிந்ததும் துருப்பிடித்த இரும்பு போன்ற பாலங்களின் சுமையால் பாழுங்கிணறு போன்ற நரகில் விழுந்து மக்கள் உழல்வார்கள். திருப்தியடைந்த குதிரைக்காரன் முதல் வட்டத்தில் நின்ற பீமனை விடுதலை செய்தான்.

குதிரைக்காரனின் இரண்டாவது கேள்வி நான் வரும் வழியில் நடுவில் ஒரு கிணறு அதை சுற்றி நான்கு கிணறு இந்த நான்கு கிணற்றிலும் நீர் குறைந்தால் நடு கிணறு தனது தண்ணீரை மற்றைய கிணறுகளுக்கு கொடுத்தது. ஆனால் நடு கிணற்றில் தண்ணீர் குறைந்தால் ஏனைய நான்கு கிணறுகளும் தண்ணீர் கொடுப்பதில்லை. அது ஏன்? தருமர் சொன்னார் பிள்ளைகள் கஷ்டப்பட்டால் எப்பாடுபட்டாவது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு உதவுவார்கள்.பெற்றோர்கள் வயோதிகத்திலும் வறுமையிலும் துன்பம் அடையும் போது பிள்ளைகள் நிரந்தரமாக உதவமாட்டார்கள். தருமரின் பதிலால் சந்தோஷமடைந்த குதிரைக்காரன் இரண்டாவது வட்டத்தினுள் நின்றிருந்த அர்ஜுனனை விடுதலை செய்தான்.

அடுத்த கேள்வி கணையை தொடுத்தான் குதிரைக்காரன். பசு ஒன்ற தன் கன்றிடம் பாலருந்தியதை கண்டேன். அது ஏன்? கலியின் கொடுமையை எண்ணி கவலைப்பட்ட தருமர் கூறினார். சில பெற்றோர்கள் குழந்தை பிறந்தவுடன் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரிடமும் கூறி பணம் பறிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழந்தைகளை விற்பார்கள். குழந்தைகளை வளர்ப்பதற்கு பிரதிபலனை எதிர்பார்ப்பார்கள். தருமரின் பதில் சரியாக இருக்க மூன்றாவது வட்டத்தினுள் நின்ற நகுலனை விடுதலை செய்தான் குதிரைக்காரன்.

இன்னொரு கேள்வி? நான் வரும் வழியில் விசித்திரமான ஒரு பிராணி ஒன்றை கண்டேன் அது மலவாய் வழியாக உணவுண்டு வாய் வழியாக மலத்தை வெளிஏற்றிக்கொண்டிருந்தது. ஏன் இவ்வாறு அருவருப்பான இச்செயல் நிகழ்ந்தது குதிரைக்காரனின் கேள்வி தருமரை மிகுந்த வேதனைக்குள்ளாக்கியது. கலியின் சிரமங்களை எண்ணி கவலையுற்றார். குதிரைக்காரனை பார்த்து தருமபுத்திரர் கூறினார். அப்பனே கலிபுருஷன் நீதான் என்பதை நான் அறிவேன். யார் கண்ணிலும் படாத காட்சிகள் எல்லாம் உன்கண்ணில் பட்டிருக்கிறது கலியுகத்தில் மக்கள் வாழ்வு நீ கூறியதுபோல் அமையப்போகின்றது. மக்கள் வாய்வழி தகாத சொற்கள் தீய சொற்கள், இழிவான சொற்கள், அவதூறு, புறம் பேசுவார்கள். நல்ல சாத்வீகமான உணவுகளை தவிர்த்து உணதகாவற்றை உண்பார்கள். பொருந்தாத பண்புகளை நாகரீகமாக கருதுவர். ஆண்கள் தாரத்தை மறந்து பிறர் மனை நோக்குவர். பெண்களும் ஆண்களுக்கு தாமும் சரிநிகர் என இழிசெயல் புரிவர் தீயவை நிறைந்திருக்கும் என கூறினார் தருமர். தருமரின் பதிலால் முழுதிருப்தியடைந்த குதிரைக்காரன் தருமபுத்திரரே நீங்கள் கூறியவை முற்றிலும் சரி நான் கலிபுருஷன் தான் நான்காவது வட்டத்தினுள் நின்ற சகாதேவனையும் விடுவித்தான்.

மக்கள் ஆன்றோர்கள், சான்றோர்கள், மேலோர்கள் அறிவுரைகளை கேட்டு இத்தகைய சூழ்நிலையிலும் முயற்சியினால் உயர்வரையலாம் எனக்கூறி குதிரையுடன் மறைந்தான்.

"நன்றே செய்து நலமுடன் வாழ்வோம்"

தங்கள் ஆசிகளை வேண்டி நிற்கினறோம்.
**பாபு, ஜெயந்தினி**
**மற்றும் பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இந்துசமயமும் சமகால செல்நெறியும்

எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய சிறிய தந்தை "கிரியாபூஷணம்" சிவஸ்ரீ நடராஜ யோகனந்த மோகன் குருக்கள் சிறியதாய் ஸ்ரீமதி மாலினி தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தியை அவர்களது குமாரர்கள் மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் உறவினர்கள் நண்பர்கள் ஸ்ரோன்லி அம்மன் ஆலய சமூகத்தவர்கள் அனைவரும் இணைந்து நடாத்துவது சிறப்பையும் அக மகிழ்வையும் தருகிறது. இந்து பண்பாட்டின் மீதம் விரதாதி அனுஷ்டானங்கள் மீதும் அசைக்க முடியாத பற்றுறுதி கொண்ட கிரியா பூஷணம் அவர்கள் கிரியைகளைச் செய்வதிலும் பக்தியும் அர்ப்பணிப்பம் கொண்டவர் பாரம்பரியம் மிக்க இந்து சமயத்தின் சமகால செல்நெறி பற்றிச் சிந்திப்பது சாலப்பொருந்தும் என்பதால் கீழ்வரும் கட்டுரை அது பற்றி நோக்கம்.

தாயகத்திலும் மேலைத்தேசத்திலும் சமயச் சேவையை செய்துவரும் குருக்கள் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி மலரில் ஆதியும் அந்தமும் இல்லாத இந்து சமயமானது நீண்ட நெடிய பண்பாட்டு நாகரிக வரலாற்றில் பல ஏற்ற இறக்கங்களைக் கண்டும தன்பயணத்தைத் தொடர்ந்து கொண்டுள்ளது. காலம் தோறும் மக்கள் மனங்களிலும் வாழ்வியலிலும் ஏற்படும் மாற்றங்களை கிரஹித்துக் கொண்டு புதிய பரிநாமத் தோற்றத்தை பெற்று இன்று உலகின் மூன்றாவது மிகப்பெரும் சமயமாக வாழ்ந்து கொண்டுள்ளது. இதற்கு இந்துசமயத்தின் அடிப்படைத் தத்துவமும் வாழ்வியல் நெறியுமே காரணம்.

இந்து சமயம் என்றாலே கல்வி, கலை, தொழில், உணவுப் பழக்கவழக்கம், வாழவியல் வழிபாடு போன்றவற்றை இன்னோரன்னவை அடங்கும் இவற்றுள் பலபுதிய சிந்தனைகள் இணையும்போது வழம்படுத்தியம் உள்ளன. சில நேரங்கிளல் அடிப்படைக் கட்டமைப்பை ஆட்டங்காணவும் வைத்துள்ளன. இவ்வாறான சாதக பாதகசூழலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலங்கையைப் பொறுத்தவரை அனைவரும் சமயக் கல்விபெற வேண்டும் என்பது அரசியல் சாசனம். அவரவர் தமது சமய உண்மை தன்மையை அறிய வேண்டும் என்பதே இதன் நோக்கம். ஆனால் இன்று பெறுபேறு பெறுவதற்குரிய ஒரு பாடமாகவே செல்கிறது. வாழ்வியலில் இருந்து பிரிந்த ஒரு சிந்தயையாகவே இருக்கிறது. மேலைத் தேசத்திலோ சமயச் சார்பின்மை என்பது மட்டுமல்லாமல் சீறீஸ் தவச்சிந்தனைகளே விரவிக்காணப்படுகின்றன. ஆனாலுமு் எம்மவர் சமயக்கல்வி பெறவேண்டும் அவாவுகின்றனர். இதற்கான அவகாசமும் வசதி வாய்ப்பும் அமைவதில்லை. நடைமுறை இந்து வாழ்வியலும் தேசவர்தமானங்களுக்கேற்ப நெகிழ்வுத்தன்மையுடனேயே உள்ளது.

ஒரு இந்து என்றால் ஆலயத்திற்க சென்று வந்தாலே அவர் பரிபூரண சமயவாதியாகக் கருதப்படுகிறார். வாழ்வில் கட்டுப்பாட்டை மட்டும் கடனும் எமது சமயம் கட்டளைகளாக கூறாததால் அதை சாதகமாகவே கைக்கொள்கின்றனர். எப்படி வாழ்வது இலகுவானதோ அவ்வாறு வாழவேண்டும் என்று மட்டும் விரும்பிகின்றனர். தமக்கான வாழ்வை இன்னொருவர் கடைப்பிடிக்கவேண்டும் என்று மட்டும் கருதுகின்றனர். இந்து சமயம் கூறும் இந்த சிந்தனைகள் தனிநபர் இடேற்றம் கருதியே என்பதை முதலில் நாம்புரிந்து கொள்ளவேண்டும். உலகில் வாழும் அனைத்து உயிர்களின் நலனைக்கருத்தில் கொண்டு மனிதன் ஆற்றவேண்டி கடமைகள் என்ன என்பதை மிகவிரிவாக விளக்குகின்றது. எனவே இதனைப் போதிக்கம் ஆசிரியர்கள் முதலில் சாதகர்களாக இருக்க வேண்டும். சமயவாழ்வியலில் பங்கேற்றகாதவர்கள் ஒரு இந்து என்ற அடிப்படைக்காரணாத்தால் மட்டும் கற்பித்து விளைவது பொருத்த மற்றதே. இது தொழில் முறைநோக்கம் கருதி செய்யப்படுவத அன்றி வேறென்ன சொல்ல.

ஆதியில் கலைகளின் கூடாரங்களாக கோயில்களே திகழ்ந்தன. பல்துறைகளையும் கோயில்கள் வளர்த்ததனால் பல்கலைக் கழகங்களாயின. கலைகள் தெய்வசம்ப்நதமுடயவை என்ற நோக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீகமாக இறை அர்ப்பணம் செய்யப்பட்டன. கலைஞர்களை ஊரும் அரசும் போஷித்தன இன்றைய நிலையில் கலைஞரை காக்க காவலர்களுமில்லை. கலைஞர்களும் வாழ்வியலைத்தாண்டி பொருளாதார நோக்கில் செல்கின்றனர். கோயில்களோ இன்று பகட்டின் வெளிப்பாட்டுக் களமாய் மாறுகின்றனவே அன்றி பாரம்பரியம் பேணப்படுவதாய் இல்லை. எனினும் இன்றும் கலைகளை அலைக்காற்றும் அரங்காக கோயில்கள் உள்ளமை மட்டும் திருப்தியளிப்பதாக உள்ளது.

பொதுவாக சமயம் சார்ந்த அனைத்தும் சேவைகள் என்றே வழங்கப்பட்டன இன்று இறைவனக்க செய்யும் பூஜை முதலாக அனைத்தும் தொழில் என்ற நிலைக்கு மாற்றம் பெற்றுவிட்டன. "பொருளில்லார்கு இவ்வுலகமில்லை" என்பது போல் திருக்கோவில்களையும் அதன் கட்டமைப்புக் களையும், சேவையாளர்களையும் நாளைய அருளிலும் இன்றையே பொருளை அடிமைப்படுத்தியுள்ளது. இவற்றிற்கு விதிவிலாக்குகள் இல்லாமலும் இல்லை எனினும் பெரும்விகிதம் இறைவனிடம் வேண்டுவதிலும் இறைவன் பெயரால் வேண்டுவோம் என்ற சிந்தனையில் புதிய தலைமுறையினரை சமயங்கள் மீது அதிருப்தி கொள்ளச் செய்கிறது. திருக்கோயில்களைத் தமது பிடியில் வைத்திருப்போரும் தமது அதிக்கம் மேலோங்க வேண்டும் என எண்ணுகின்றனரே ஒளிய தற்கால வாழ்க்கை சூழலை சிந்திக்கின்றனரில்லை. காலமாற்றத்தில் தாம் இணையும் போதும். கோயில்களின் சேவைச்சமூகம் என்றும் புராதனமானவர்களாக வாழவேண்டும் என்றே உள்ளூற விரும்புகின்றனர். இதிலிருந்து வெளிவருவோரை சமயமரபு மீறுவோர் என முத்திரை குத்தி விடுகின்றனர். இதனால் அடிமைப் படமறுப்போர் விடுதலை பெற்று வேறு துறைகளுக்குச் சென்றுவிடுகின்றனர். அங்கு சாதியம், சமயம், இவற்றிலிருந்து முக்தி பெற்றுவிடுகின்றனர்.

சமயப் பிரச்சாரகர்களும் சமய நற்சிந்தனை என்னும் கருப்பொருளில் புராண இதிவராசங்களையும் சமயக் கதைகளையுமே சுவாரஸ்யமாகக் கூறுகின்றார்களே அன்றி சமய நெறிவாழ்வையும் அதன் புரள்வுகளையும் பேசுகின்றனரில்லை. தனிநபர் அன்றி ஒரு குழுமத்துதிபாடுதலை வீரியமாகச் செய்கின்றனர். தங்களின் சமூகப் பொறுப்பை புரிகின்றார்களில்லை. நல்லை நகர் ஆறுமுக நாவலர் அக்காலத்தில் தேவைகருதிச் செய்ததாலேயே "நாவலர்" பட்டம் பெற்றார். அதன்பின் அத்தடம் பற்றுவார் யாருமில்லை. இந்து சமயத்தின் உள்ளும் புறமும் நின்று செப்பனிடவேண்டியது காலத்தின் கட்டாயமே.

இந்து சமயத்தின் பெயரால் எமது வாழ்வில் நாம் செய்யவேண்டிய சம்ஸ்காரக்கிரியைகள் ஐம்பத்தி நான்காகம். இவற்றின் தாற்பரியததையும் ஆறிவியலையும் புரியாது சடங்காக மட்டும் ஆற்றும் நிலை வருந்தத்தக்கது. மேலை நாட்டு வாழ்வியலில் நம்மவர்கள் இவற்றின் உன்தைத் தன்மையை புரியாத தகுதியற்றவர்களின் புரிதல் வழிகாட்டல்களால் லௌகீக வசதிக் வாய்பிற்கேற்ப கிரியை களைச் செய்ய விளைகின்றனர். இதன் பயன்பற்றியோ விளைவு பற்றியோ அவர்களுக்கு துளியும் அக்கறையில்லை சிலநேரங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய நிகழ்வம் மாறிப்போகிறது. உதாரணமாக மணச்சடங்கேல்லாம் இன்று பணச்சடங்காக மாறிப்போயுள்ளது. இதுபோல் உள்ளே உள்ள பலவற்றை மறுசீராயமைப்புச் செய்யவேண்டும்.

புறத்தே இருந்து வரக்கூடிய தீவிர வாதத்தன்மையையும் நாம் எதிர்க்க வேண்டி உள்ளது. மதமாற்றம் உலோகாபத வாதம் புதிய கருதுகோள் கடவுள் மறுப்புக்கொள்கை என பலபக்கத்தாக்குதல்களும் நிகழ்கின்றன. இவற்றை தடுக்க நமக்கு தலைமைப்பீடமும் கிடையாது. இதுவே எமது பலவீனமும் பலமுமாகும் புராணகால முதலே புறச்சமயங்களில் இருந்து எமைக்காக்க அருளாளன் களும் அரசர்களும் வந்து தம்மையம் இழந்தனர். இன்று நாமேநமக்காகப் போராடவேண்டும். போராட்டம் என்றால் வீதிப்போராட்டம்தான் என எண்ணவேண்டாம் சிந்தனைப்போர் செய்தாலே மாற்றம் தானாய்வரும்.

பொதுவாக உணவுப் பழக்கத்தில் பிரதேசத்தின் பெயரால் உணவுண்டு, நாகரியத்தின் பெயரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுண்டு, மொழியின் பெயரால் உணவுண்டு சமயத்தின் பெயரால் உணவு எனில் சைவ உணவு மட்டுமே. உணவின் முக்கியத்துவத்தையம் அதன்குண நலன்களையும் கொண்டே விரதகாலத்தில் உண்ணவேண்டியவை எவை தவிர்க்கப்படவேண்டியவை எவை என்பது முதல் ஆன்றாடம் வரையான உணவுப்பழக்கத்தை இந்து சமயம் போதிக்கின்றது. வள்ளுவம் முதல் புலால் உணவை எதிர்க்கின்றனர். மேலைத்தேசத்தவரின் உணவிற்காக ஒரு பசுவை தானமாக தரமறுத்து நாட்டையே துறந்து பரதேசம் சென்றவர் நம் சுவாமி ஞானப்பிரகாசர் என்பதை பாடத்திற்காக மட்டும் படித்துவிட்டு இறைச்சிக்கடைகளையே தஞ்சம் புகுகின்றோம்.

இந்து வாழ்வியலில் எமக்கான அடையாள உடைகளையும் களைந்துவிட்டோம் சுவாமி காவுபவர்கள் கூட நீள்காற்சட்டையோடு வருவது எமது துரதிஷ்டாம். ஆனாலும் ஏதோ பெண்கள் சேலையை கைவிடாமல் இருக்க கடைக்காரர்கள் உபயகாரார்களாகின்றனர். சேலைகளின் வகைகளும் தரங்களுமே அதை வாழச்செய்கின்றன கிடைக்காதபோது மீழுருவாக்கம் செய்வது நாகரிகம் என்பதால் சில ஆடை ஆவரணங்கள் மேட்டுக்குடிகளின் பண்பாடாகிறது.

மனிதனின் உடல் வளம்பெற உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் அத்தியாவசியமானவை. உடற்பயிற்சி வேண்டி இந்து சமயம் கூறும் விளையாட்டுக்கள் இன்று ஓரங்கட்டப்படுகின்றன. உலகமயமாக்கல் - உலகப்பொருளாதாரம் இவற்றை நசுக்குகின்றன இவ்வகை விளையாட்டுக்கள் அடித்தட்ட மக்களின் விளையாட்டுக்காளக கருதப்படுவது துரதிஷ்டவசமானது உளப்பயிற்சியாய் சொல்லப்பட்ட பிராணாயாமம் தியானம் முதலியன உயர்தர வகுப்புக்காளாக ஆக்கப்பட்ட கட்டணங்கள் அளவிடப்படுகின்றன. சமூகத்தின் மனநிலையிலும் இன்று இலவசமாக எது செய்தாலும் அது தரமற்றது என்ற மனப்பாவாகும் கட்டணம் செலுத்தும் போதுதான் அது பயன்மிக்கது என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது.

மீழுருவாக்கம் செய்வது நாகரிகம் என்பதால் சில ஆடை ஆவரணங்கள் மேட்டுக்குடிகளின் பண்பாடாகிறது. மனிதனின் உடல் வளம்பெற உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் அத்தியாவசியமானவை. உடற்பயிற்சி வேண்டி இந்து சமயம் கூறும் விளையாட்டுக்கள் இன்று ஓரங்கட்டப்படுகின்றன. உலகமயமாக்கல் உலகப் பொருளாதாரம் இவற்றை நசுக்குகின்றன. இவ்வகை விளையாட்டுக்கள் அடித்தட்டு மக்களின் விளையாட்டுக்கள் அடித்தட்டு மக்களின் விளையாட்டுக்களாக கருதப்படுவது துரதிஷ்டவசமானது உளப்பயிற்சியாய் சொல்லப்பட்ட பிராணாயாமம் தியானம் முதலியன உயர்தர வகுப்புக்களாக ஆக்கப்பட்டு கட்டணங்கள் அளவிட்படுகின்றன சமூகத்தின் மனநிலையிலும் இன்று இலவமாக எது செய்தாலும் அது தரமற்றது என்ற மனப்பாங்கும் கட்டணம் செலுத்தும் போதுதான் அது பயன்மிக்கது என்ற எண்ணமும் ஏற்பட்டுள்ளது.

"அன்பே சிவம்" என்பார் திருமூலர் " உயிர்களனைத்திற்கும்சேவை செய்வதே வாழ்வின் இலச்சியம்" என்பார் விவேகானந்தன் இன்று நலிந்தோர்கு சேவை செய்வதை இலக்காகக்கொண்டு பல இந்து அறக்கட்டளைகள் வேலைசெய்வது வரவேற்கத்தக்கது. சங்கம் வழிபாட்டின் நீட்சியே இது. மேலும் பிறசமயத்தவரைப் பார்து அவர்கள் சாதிக்கும் பல சாதனைகளை உள்வாங்குவதும் இடைச் செருகல்களாக வந்த மூடநம்பிக்கைகளை களைவதும் பாராட்டுதற்குரியதாக உள்ளது.

நாளாந்த வாழ்வியலின் உள்ள இந்துப் பழக்கவழக்கங்கள் கைவிடப்படுவதும் அல்லது மரபியலின் அறிவியல் புரியாது நவீனத்துவம் சார்ந்து புரள்வதும் காலக்கொடுமை. ஒரு இந்துவின் வீட்டிற்குரிய அடையாளங்கள் பல இன்று துலைக்கப்பட்டுவிட்டன. கட்டடப்பாணி முதல் குடும்பம் பழக்கவழக்கங்கள் வரை மாற்றம் கண்டுள்ளன. வாசலில் போடும் கோலத்திற்கு பதில் ஸ்ரிக்கர் கோலங்களும், மகரதோரணங்களுக்கு பதில் பிளாஸ்ரிக் அலங்காரங்களும் வந்துவிட்டது போல பல நவீனத்துவம் புகுந்துள்ளது. இவ்வாறான சடங்கு சம்பிரதாயங்கள் எமது அடையாளங்கள். இந்த அடையாளங்களை இழந்தால் எமது பண்பாடு சிதையும் பண்பாடு சிதைந்தால் எமது இனமே மறைக்கப்பட்டு விடும். தனித்துவமின்றி கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் நிலை அன்றினைகளுக்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொருந்தலாம். உயர்திணையின் என்பது உயர்ந்தோர் மாட்டு என இருத்தல் வேண்டும்.

மேலைதேசங்களில் பல்வினாக்கலாச்சாரம் இருந்தாலும் அவரவர் பண்பாடடியல்பு வரவேற்கப் படுகிறது. ஒவ்வொரு இனமக்களும் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள பண்பாட்டு கலாசாரங்களை கையில் ஏந்துகின்றனர். அவர்களைப் போற்றி பேசும் நாம் எம்மை சிறுமையாக எண்ணுவது எமக்கே எம்மீது பற்றுதலில்லாத்தன்மையையே காட்டுகிறது.

தொகுத்து நோக்குமிடத்தில் இந்துசமய சமகாலச் செய்நெறியில் சிலதிருத்தவேண்டிய செயல் முறைகளும் பல புகுத்தவேண்டிய நடைமுறைகளும் மரபுகளைப்பேணும் பண்பாட்டுக் கலாசார நகரிகங்களும் உள்ளன. ஆனால் இவற்றால் இந்து சமயம் அழிந்துவிடும் என்ற சிந்தனைமட்டும் பொருத்தமற்றது. காலங்களைத்தாண்டி சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்திருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை இந்து நெறி என்பது வாழ்வியலின் சாதனைச் சமயம் எனவே காலதேச வர்த்மானங்களைத்தாண்டி நிலைபெறவேண்டும் என்பது அனைவரது அவாவாகும்.

"வேதாகமவித்தகர் " அலங்காரசிரோமணி"

**சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமாரக் குருக்கள்** B.A (Hons)

பிரதம குரு - கொவன்றி ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வழிபாடுகளில் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி

அறுவகை தெய்வ வழிபாடுகளில் சாக்த வழிபாடாக போற்றப் படுவது அம்பிகை வழிபாடு.சாக்தம் என்றால் சக்தியுடன் சம்பந்தமானது.சக்தியில்லாமல் எதுவும் இல்லை என்பதையே நாம் அறிவோம்.இதனால் ஆகமங்களிலும் எந்த தெய்வத்தைப் பூசித்தாலும் முதலில் ஆதார சக்தயே நமஹ என தொடங்குவதைக் காண்கிறோம்.வேதங்களிலும் ஆதார சக்தியாக காயத்திரி மந்திரத்தை சொல்வதுண்டு. இதனால் எல்லாத் தெய்வங்களுக்கும் எந்த மந்திரம் சொன்னாலும் காயத்திரி மந்திரம் சொல்வதிலும் அக்கறை கொள்கிறோம்.மந்திரமே சக்தியாக இருப்பதால் மந்திர சக்தி என நாம் கூறுவதையும் காணலாம்.

எமது உடலில் உள்ள ஆறு சக்கரங்களையும் எமது உடலைக் காக்கும் சக்திகள் என்று போற்றப்படுகின்றன .அதிலும் மூல ஆதாரத்தை மூலாதார சக்தி எனச் சிறப்பாக கூறுவார்.சக்கரம் என்றால் வட்டம் ,சுழற்சி என்று பல பொருள் படும்.எமது உடலுக்குரிய சக்திகளை சேமித்து சுழற்சி முறையில் கொடுப்பதால் சக்கரம் என்ற அடைமொழியுடன் கூறப்படுகிறதுஉடலில் சக்தியில்லாவிட்டல் அசக்தன் எனக் கூறுவார்கள்.. இதில் சக்தி சேமிப்பதற்கு உணவு மாத்திரமின்றி தபம்,தியானம், ஜெபம், யோகம். போன்ற செயல்களும் அடங்குகின்றன. ஞானிகள் யோகிகள் சித்தர்கள்.போன்றோர் தமது வலிமையான ஞானத்தால் இந்த சக்திகளை சேகரித்து ஆத்ம சக்தியை அதிகரித்தார்கள்.ஆத்ம சக்தி நிறைவானவர்களிடம் இறை சக்தி இலகுவாகப் படிகிறது. இதனால் அவர்கள் மகான்களாக மாறுகிறார்கள்.இவர்கள் ஏனைய மனிதர்களுக்கும் அருள் வழங்கும் சாமியார்களாக மாறுவதும் இந்த அருட்பெரும் சக்திதான் காரணமாகிறது.

இவ்வாறான சக்தி எமது சமயத்தில் பல்வேறு பெயர்களைத் தாங்கி வரும் நிலையை காண்கிறோம்.பொதுவாக அம்பிகையை பராசக்தி என்கிறோம்.இந்த பரா சக்திதான் அனைத்திலும் பரந்து விளங்கியுள்ளது.இதனால் ஆதி பராசக்தி என்றும் போற்றப்படுகிறாள்.

வேதங்களில் பல சக்திகள் போற்றப் படுகின்றன.அவற்றுள்ளும் வாமை ஜேஷ்டை ரௌத்திரி காளி கலவிகரணி பலவிகரிணி பலப்பிரதமை சர்வபூத தமனி மனோன்மணி ஆகிய சக்திகளைச் சொல்லும் மந்திரம் யாவரும் அறிந்ததே.வாமதேவாய நமோ ஜேஷ்டாய நமோ என்ற மந்திரம் சக்திகளின் பரந்த வடிவத்தைக் காட்டுகிறது.

அபிராமிப் பட்டரும் நாயகி நான்முகி நாராயணி நளின பஞ்ச சாயகி சாம்பவி சங்கரி சாமளை மாலினி வராகி சூலினி மாதங்கி பயிரவி பஞ்சமி சண்டி காளிவயிரவி என்று அம்பிகையின் பல வடிவங்களைப் போற்றுகிறார்.

இவ்வடிவங்கள் போலவே லலிதா மீனாட்சி காமாட்சி விசாலாட்சி புவனேச்வரி ராஜமாதங்கி ராஜராஜேஸ்வரி போன்றவையும் போற்றப்படுகின்றன.

இதில் ராஜேஸ்வரி என்றால் எல்லாவற்றையும் ஆட்சி செய்பவர்..ஆட்சி செய்கிறவர்களையே ஆள்பவள் ராஜராஜேஸ்வரி ஆவாள்.ரஜ் என்ற வடமொழிச் சொல்லுக்கு பிரகாசப் படுத்து அல்லது ஒளியூட்டு என்ற கருத்துக்கள் உண்டு.இதனால் தான் தீபம் காட்டுவதை நீராஞ்சனம் என்றார்கள்.ராஜன் என்றால் எல்லோராலும் அறியப்பட்ட பிரகாசம் உடையவன் .விராஜமானஸ்ய என நாம் பொதுவாக இறைவனை புகழ்ந்து பேசுவோம்.எல்லோராலும் அறியப்பட்டவன் மிக பரந்த ஒளி உடையவன் என்ற பொருளும் உண்டு. வழிகாட்டுபவன் இந்த அம்பிகை எல்லோர்க்கும் வழிகாட்டியாக இருந்து நல்வழியில் பிரகாசப் படுத்துவாள்.ஈஸ்வரன் என்றாலும் ஆள்பவர் உலகத்தை ஆள்வதால் ஜெகதீஸ்வரன் என்று இறைவனுக்குப் பெயர். ஆள்வதால் ஆண்டவன் என்கிறோம்.ஈஸ்வரி ஆள்பவள் ராஜ ஈஸ்வரி ராஜேஸ்வரி என்றானது.எந்தப் பொருளுக்கும் ஆட்சி இல்லாவிட்டால் அது வீணாகப் போய்விடும்.ஒரு பொருளுக்கு உரித்தானவர் அதற்குரிய ஆட்சியை செலுத்துகிறார்.உதாரணமாக ஒரு பேனை கீழே இருந்தால் இது யாருடையது எனக் கேட்கும்போது இது என்னுடையது என்று ஒருவர் சொன்னால் அவரது ஆட்சிக்கு உட்பட்டது அந்தப் பேனை என நாம் அவரிடம் ஒப்படைக்கிறோம்.

பொருள் மீது நாம் வைத்திருப்பது பொருளாட்சி இறைவி நம் மீது வைத்திருப்பது அருளாட்சி

வள்ளுவர் பொருளாட்சி அருளாட்சி பற்றிக் குறிப்பிடுகிறார்.பொருளாட்சி அதனைப் போற்றுபவருக்கு உண்டு ஆனால் அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இருக்காது.பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு இங்கு சைவத்தின் மிகப்பெரிய உண்மை உரைக்கப் படுகிறது

சைவ உணவு ஒழுக்கம் முதலியன இறை அருளை இலகுவாக அடைய வழி செய்யும்.இதற்க்கு எமது புலனடக்கம் அவசியம்.அதற்க்கு எமது புலனை நாம் நல்லவழியில் ஆட்சி செய்ய வேண்டும் .அந்த ஆட்சியை நாம் பெற்றுக் கொள்வதற்கு இறையருள் வேண்டும் அவ்வாறான அருளட்சியை தரும் தெய்வ மூர்த்தங்களில் ராஜராஜேஸ்வரி வடிவமும் ஒன்றாகும்.
ஆதி சங்கரர் ராஜ ராஜேஸ்வரி அம்பாளுக்கு அஷ்டகம் அருளியுள்ளார் அம்பா சாம்பவி சந்திர மௌலி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்ற அந்த எட்டுப்பாடல்கள் பலராலும் அறியப்பட்டதொன்று.சாம்ராஜ்ஜ லக்ஷ்மி என சிறப்பாக போற்றப்படுகிறார்.சாம்ராஜ்ஜம் என்றாலே பேரரசு என்ற பொருளையே தருகிறது.உடல் உள்ளம் உலகம் எலாவற்றையும் அவளே ஆட்சி செய்கிறாள்.எந்தப் பெரிய அரசாக இருந்தாலும் நல்ல அறிவு இல்லாவிட்டால் எல்லாமே நட்டமாகும். இதனால் இவ் அம்பிகை சித் ரூபியாக அமர்கின்றாள் சித் என்றால் நல்லறிவு இதனால் ஒவ்வொரு பாடலின் நிறைவிலும் சித் ரூபி பரதேவதா பகவதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி என்ற பெருமை விளங்கும்.எனவே ராஜ ராஜேஸ்வரி அம்மன் வழிபாடு நல்லறிவையும் எந்த விடயத்திலும் வெற்றியையும் தரும்.

லண்டன் ஸ்ரோன்லிபதி ராஜேஸ்வரி அம்மன் கோவிலில் பல ஆண்டுகளாக சிவாச்சார்ய பணி ஆற்றும் அன்பின் மோகன் குருக்கள் அவர்களது அறுபதாவதுஆண்டு மணிவிழா வாகிய சஷ்டி அப்த பூர்த்தி வைபவத்தில் அவரும் அவர் குடும்பமும் இனிது வாழ்ந்து அம்பிகை அருளால் தர்மம் பரவ பல்லாண்டு வாழ்க வையகத்தில்.

சிவஸ்ரீ ராம ஸ்ரீ தரக் குருக்கள்

(இணுவில் கந்த சாமி கோவில்)

லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அம்பிகையின் அருளாலே அவள் தாழ் வணங்கி"

"அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால ஆவதொன்றில்லை
அவளன் நீ ஊர் புகுமாறு அறியேனே" (திருமந்திரம் 1053)

ஐந்தொழில் புரியும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியோ அம்பிகையின் அருளாலேயே கருமம் ஆற்றுகின்றனர் என்று உரைக்கும் திருமூலர் இறுதியில் நாம் முத்தி அடைவதற்கும் அம்பிகையே அருள்புரிய வேண்டும் என்று முடிக்கிறார்.

"தாமம் கடம்பு படை பஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் யிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றொரு இரண்டு நயனங்களே" (அபிராம் அந்தாதி 73)

உலகனைற்குக்கும் அன்னையான அம்பிகைக்கு உகந்த மாலை கடம்பு, படைகளோ ஐந்து மலர்கள், வில்லோ, கரும்பு, வயிரவர் அன்னையைத் தொழும் காலம் நடுஇரவு, எமக்கு அருள்புரியும் திருக்கரங்கள் நான்கு, மேனியின் எழில் வண்ணம் சிவப்பு, எமக்கு அருள்புரியும் திருக்கரங்கள் நான்கு, மேனியின் எழிலை வண்ணம் சிவப்பு, எமக்கு அருள் புரியக்கண்களோ இரண்டல்ல மூன்று இவ்விதகருணைத்தோற்றம் உடைய திரிபுரசுந்தரியான அன்னை இராஜராஜேஸ்வரி எமது பாது காப்புக்காகத்தருவதோ தமது திருவடிகள்?

அவை எத்தகைய திருவடிகள்

"சரணம் பொருள் என்று அருள் இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்னும் முகுந்தனுமே
சரணம் சரணம் என் நின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார்
இந்த வையகத்தே" (அபிராபி அந்தாதி 51)

முப்புரம் உடைய கொடிய அரக்கர்களை அளித்த சிவபெருமானும், திருமாலுமே எமக்கு புகலிடம் இவையே என்று போற்றும் திருவடிகள்.

இத்தகைய மகிமை உடைய இருவடி஌டைய சகல செல்வங்களும் தரும் இமய கிரிராச தனயெயாம் அன்னை இராஜராஜேஸ்வரிக்கு சேவை செய்ய எவ்வளவு பாக்கியம் செய்தருக்க வேண்டும்! சாதாரண அரச சேவை செய்வாரே சமூகத்தில் மதிக்கப்படும் போது உலகனைத்துக்கும் அரசயாம் இராஜராஜேஸ்வரிக்குச் சேவை செய்தல் எவ்வளுவு சிறப்புடையது! இத்தகைய சேவையைக் கடந்த (பத்து) வருடங்களாகக் செய்யும் பாக்கியம் பெற்ற சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள் அவர்களது அறுபது ஆண்டு பூர்த்தி விழாவின் போது, அவர்களும் தனது ஆத்மார்த்த பூசையினாலும் செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் தன்மையினாலும் தமது கணவருக்கு பக்க பலமாக இருக்கும் மனைவியார் மாலினி அம்மையாரும் நோய் இன்மை கல்வி, தன, தான்யம், மெய், அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு பேரப்பிள்ளைகள் எனும் சந்தானம், வலி, துணிவு, வாழ்நாள் வெற்றி, ஆகும் நல்ஊழ் நுகர்ச்சி ஆகிய பேறுகளுடன் வாழ அன்னை இராஜராஜேஸ்வரி தொடர்ந்து அருள்புரிய வாழ்த்துகிறேன்.

**Dr. K. Tharmaseelan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

சிவஸ்ரீ ஸோம .துளசிகாந்தக்குருக்கள் / Sivasri . Soma Thulashikanthan Kurukkal
ஜேர்மனி பிராங்பேர்ட் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பிரதமகுரு/ Sri Naagapooshani Amman Temple
(Moderninternational.hinduculture Germany Branche)

# சங்கின் மகிமை

**'ஓம் பாஞ்சஜன்யாய வித்மஹே**
**பவமானாய தீமஹி**
**தன்னஸ் சங்க ப்ரஜோதயாத்'**

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது பதினாறுவகை தெய்வீகப் பொருட்கள் வெளிவந்தன. அவற்றுள் வலம்புரிச் சங்கும் திருமகளும் வர மஹாவிஷ்ணு இடக்கையில் சங்கையும் வலக்கையில் தேவியையும் ஏற்றுக் கொண்டார்.

சங்கு பொதுவாகவே லட்சுமியின் அம்சத்தை தாங்கி இருக்கிறது. சங்குகளில் பல இனங்கள் உண்டு. அவற்றில் பால் சங்கு என்றொரு இனம் உண்டு. (வெண்சங்கு இதன் அளவுப்பிரமானம் மாறுபடும்) இந்தச் சங்கே சாதாரணமாக அபிஷேகங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதன் சுழற்சி இடப்புறம் நோக்கிக் காணப்படும். அபூர்வமாக சில சங்குகளில் வலமாக காணப்படும். இவற்றை வலம்புரிச் சங்கு என்பார்கள். வலம்புரி சங்கினை "தக்ஷ்ணாவர்த்தி சங்கு" என்றும் "வாமாவர்த்தி" சங்கு என இடம்புரி சங்கையும் அழைப்பர். மகாவிஷ்ணுவின் இடது கரத்தில் இருப்பது வலம்புரிச் சங்காகும். 'சங்கநாதம்' பிரணவ நாதத்தைப் பிரதி பலிப்பதாகும். அதன் சப்த அலைகளால் சுற்றுச் சூழலில் உள்ள எதிர்மறை சக்திகள் விலகியோடக்கூடிய தன்மையைப் பெற்றதாகும். தீய சூழ்நிலைகளை உண்டாக்கும் எதிர்மறை சக்திகள் வலம்புரிச் சங்கு இருக்கும் இடத்தில் தமது சக்திகளை வெளிக்காட்ட முடியாத அளவுக்கு அதிலிருந்து ஓம்கார ஸ்வரூப நாதம் தன்னியல்பாக வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். இதன் பொருட்டே பல முக்கிய நிகழ்வுகளில் சங்கநாதம் ஒலிக்கப்படுகிறது.

இதே போல் கிருஷ்ணருக்கும் பலராமருக்கும் வில்வித்தை கற்றுக் கொடுத்த சாந்திபனி முனிவருக்கு குருதட்சணையாக என்ன வேண்டும் என்று கேட்ட போது குருவின் மனைவி, கண்ணீர் விட்டபடி பஞ்சஜனன் என்ற கடல் அரக்கன் அவர்களது ஒரே மகனைக் கடத்திக் கொண்டு போய்க் கடற்பாதாள அறையில் வைத்திருப்பதாகவும் குருதட்சணையாக அவனை மீட்டுத் தரும்படியும் வேண்டினான். கிருஷ்ணரும் பலராமரும் கடல் ராஜாவை அழைத்து வழிகேட்டுச் சென்று அரக்கனை எதிர்த்துப் போரிட்டுச் சாம்பலாக்கி விட்டு, குரு மகனை மீட்டுத் தந்தனர். பஞ்சஜனனின் சாம்பலே ஒன்று திரண்டு சங்காகியதால்-சங்கிற்குப் பாஞ்சஜன்யம் என்ற பெயர் ஏற்பட்டது. இதை வெற்றியின் சின்னமாகக் கிருஷ்ண பரமாத்மா கையில் எடுத்துக் கொண்டு ஊதத் தொடங்கினார், அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற பஞ்சபாண்டவர்களில் ஐவருமே ஒவ்வொரு விதமான சங்கை வைத்திருந்ததாக பாகவதம் கூறுகிறது.

தருமருடைய சங்கு அனந்த விஜயம், அர்ஜுனனுடைய தேவதத்தம், பீமனுடையது மகாசங்கம். நகுலனுடையது சுகோஷம். மகாதேவனுடையது மணி புஷ்பகம். கடலில் பிறக்கும் சங்குகளில் மணி சங்கு, துவரி சங்கு, பாருத சங்கு, வைபவ சங்கு, பார் சங்கு, துயிலா சங்கு, வெண் சங்கு, பூமா சங்கு, திரிசங்கு என்ற எட்டு வகை சங்குகள் உள்ளன. இவற்றில் வலம்புரி சங்குதான் மிகவும் சக்தி வாய்ந்ததாக ஆகமமும், சாஸ்திரங்களும் சொல்வதைக் காணலாம். மேலே உள்ள இந்த சங்குகள் ஒவ்வொரு தெய்வத்தின் கரங்களில் இருப்பதாக விகனச ஆகமவிதியில் கூறப்பட்டுள்ளது. திருப்பதி பெருமாளுக்கு-மணி சங்கும், ரெங்கநாதருக்கு-துவரி சங்கும், அனந்த பத்மநாப சுவாமிக்கு-பாருத சங்கும், பார்த்தசாரதி பெருமாளுக்கு- வைபவ சங்கும், சுதர்ஸன ஆழ்வாருக்கு-பார் சங்கும், சவுரிராஜப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாளுக்குத் துயிலா சங்கும், கலிய பெருமாளுக்கு- வெண் சங்கும், ஸ்ரீ நாராயண மூர்த்திக்கு-பூமா சங்கும் உள்ளன. சங்கு ஊதுதல். சிவாலயங்களில் பூஜையின்போது ஊதும் ஒரு வாத்தியமாகவும் சங்கு ஒலியில் தீய சக்திகள் நீங்கி நல்ல சக்திகள் உருவாகிறது. மேலும் உடம்பினுள் இருக்கும் ஜீவாத்மா வெளியேறி பரமாத்மாவுடன் சேர்ந்ததும் அங்காரமற்ற உடம்பாக எஞ்சியிருக்கும் உடலை சிவம் என்பர் (சவம்) அவற்றை சுடுகாட்டுக்கு எடுத்து செல்கையிலும் சங்கினை ஒரு வாத்தியமாக மாறுபட்ட ஓசையில் ஒலிப்பர்.

"முதற்சங்க அமுதூட்டும் மொய்குழலாள். நடுச்சங்கம் நல்வழிகாட்டும் கடைச் சங்கம் காதவழிபோம்" என பாடினார்கள். (குழந்தை பிறந்தவுடன் சங்கிலே பாலூட்டும் மரபு, திருமணத்தின் போதும் ஊதப்படுவது, மரணத்தின் போதும் ஊதப்படுவது)

சங்கின் குணம் நுண் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. இதனை அறிந்த நம் முன்னோர்கள் வீட்டு வாசலில் சங்கை பாதி பூமிக்கு அடியிலும் மீது மேலே தெரியும் படியும் பதித்திருப்பார்கள். வெளியில் இருந்து வரும் காற்று சங்கின் துவாரம் வழியாக உள்ளே சென்று சங்கின் உள்ளே கிருமிகள் அழிக்கப்பட்டு சுத்தமான காற்றாக வீட்டுக்குள்ளே வருகிறது. இன்றும் சங்கை வீட்டு வாசலில் கட்டி தொங்க விடுகின்றனர். பழங்காலங்களில் அரண்மனைகளில் அரச விழாக்கள் ஆரம்பிக்கும் முன்பும், போருக்கு தயாராகும் போதும் சங்கினை ஒலிக்க வைப்பார்கள். சங்கினை குழந்தைகளுக்கு பால் பருக்குவதற்கும் அந்நாளில் பயன்படுத்தினர். வெண்மை நிற பால் சங்கை அரைத்து சாப்பிட்டால் உடலில் உள்ள கிருமிகள் அழிக்கபடுவதோடு பல விதமான நோய்களும் குணமாகிறது. சங்கு எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கு லட்சுமி வசிக்கிறாள். மகாலட்சுமிக்கு ஒப்பான பூஜைக்கு உகந்ததாக வலம்புரி பெருமை பெறுகின்றது. வலம்புரிசங்கில் நீர்விட்டு கும்பத்தின் மேல் வைத்து புஸ்பங்களினால் பூஜை செய்து ஆராதனை செய்து அதன் பரிசுத்தமான தீர்த்தம் சுவாமி சிலைகளில் அபிஷேகிக்கும் போது அத்தீர்த்தம் மகாபுண்ணிய தீர்த்தமாக விளங்குகிறது. வலம்புரிச் சங்கு, சாளக்ராம மூர்த்தம், ருத்ராட்சம், விநாயகர் ஆகிய நான்கு தேவதா ஸ்ருப நிலைகளும் எந்தவிதமான பிரதிஷ்டா நியமங்களும் இல்லாமலேயே தன்னியல்பான தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தக்கூடிய இறையம்சம் பெற்றவை. அதிலும் விசேஷமாக ஓம்கார ஸ்வரூபமான சங்கில் நாம் எந்தத் தேவதா மூர்த்தத்திற்கு அபிஷேகம் செய்கிறோமோ, அந்தத் தேவதா மூர்த்தம் தனது அருள்நிலையின் பூரணப் பிரகாசத்தை அடைந்து, பூஜையின் முழுமையான பலன்களை வாரி வழங்கக்கூடிய தன்மையைப் பெறும். இதன் அடிப்படையிலேயே நமது திருக் கோவில்களில் சங்காபிஷேகம் நடத்தப்படுகிறது. ஆலயங்களில் பிரதான சங்காக வலம்புரிச் சங்கு இடம் பெறும். சங்கின் அமைப்பு, அந்தப் பிரணவத்தை உணர்த்துகிறது. வலம்புரி கணபதியின் தும்பிக்கையைப் போல் தோற்றம் அமைந்திருக்கும். பாற்கடலைக் கடைந்த போது வந்த பல மங்கலப் பொருட்களில் இந்தச் சங்கும் ஒன்று.

இந்தச் சங்கு உதயம் ஆனதும் மஹாவிஷ்ணு, அதைத் தன் கரத்தில் வைத்துக்கொண்டு சங்கு சக்ரதாரி ஆனார். சங்கு ஐஸ்வர்யம், வீரம், மங்கலம் இவற்றைப் பிரதிபலிக்கும் பொருளாக அமைகிறது. வலம்புரிச் சங்கில் லட்சுமி, குபேரன் ஆகியோர் வாசம் செய்கிறார்கள். இதை வைத்துப்பூஜை செய்ய, சுபீட்சம் பெருகும். வியாதிகள் நீங்கும்.

ஒரு வலம்புரி சங்கு, கோடி இடம்புரி சங்குகளுக்கு சமம். எனவே, சுவாமிக்கு வலம்புரி சங்கினால் அபிஷேகம் செய்தால், விசேஷமானது. அதிலும் கோடி வலம்புரி சங்குகளுக்கு சமமானதாக கருதப்படும். கோடி சங்கு அபிஷேகம் செய்வது மிகவும் விஷேசம். இதனை, அம்பிகையின் வடிவமான பசுவின் மடியில் இருந்து நேரடியாக சிவனுக்கு அபிஷேகம் செய்யப்படுவது என்பர்.

சிவபெருமான் அக்னி பிழம்பாக காட்சி தரும் கார்த்திகை மாதத்தில் வரும் சோமவாரம்களில் (திங்கட்கிழமை) சிவன் கோவில்களில் இறைவனை குளிர்விக்க, சங்காபிஷேக பூஜைகள் நடத்தப் படுகிறது. இந்த சங்காபிஷேகம் சிவ பூஜையில் சிறப்பானதாக கருதப்படுகிறது. இத்தகைய சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க சங்கை பூஜையறையில் அலங்காரமாக வைத்து வழிபட்டு ஐஸ்வர்யம், குபேரலட்சுமி கடாட்சம் பெறலாம் என்றும் வலம்புரிச் சங்கில் தீர்த்தம் துளசி இட்டு பூஜை செய்து மங்கல ஸ்நானம் செய்தால் நமக்கு பிரம்மகத்திதோஷம் இருப்பின் போய்விடும் என்றும்

இதையே **தர்ம சாஸ்திரம். ஹஹசங்க மத்யே ஸ்திதம் தோயம் ப்ராமிதம் சங்கரோபரி... ஸ்ரீ அங்க லஷணம் மனுஷ்யானாம் ப்ரம்மஹத்யாயுதம் தஹேத் ""** என்று விளக்குகிறது.

செவ்வாய் தோஷம் உள்ள பெண்கள் செவ்வாய் தோறும் வலம்புரிச்சங்கில் பால் வைத்து அங்காரக பூஜை செய்ய தோஷம் விலகி திருமணம் நடந்து விடும் மென்றும் வாஸ்து தோஷம் உள்ள வீட்டில் சுக்கிரவாரம் (வெள்ளி) பூஜித்து தெளிப்பதால் அத்தோஷமும் நீங்குமென்றும் சுவாமிக்கு அபிஷேகம் செய்வதால் தோஷம் நீங்கி "ஸுகம் " கிடைக்கப்பெற்றும் மேலும் 10 பங்கு அபிஷேகம் செய்த பலனையும் பெறுகிறோம். அதிக கடன் வாங்கியவர்கள் பௌர்ணமி தோறும் குங்கும அர்ச்சனை செய்து வர கண்ணுக்குத் தெரியாமல் கடன் தீரும், வலம்புரிச்சங்கு பூஜிக்கப்படும் வீட்டில் பில்லி சூன்யங்கள், ஏவல்கள் நெருங்காது ஓடுவதுடன், வீட்டை சுற்றி எட்டு திக்கிலும் எட்டு வலம்புரிச்சங்கையும் மண்ணில் புதைத்து விட்டால் மனை தோஷம் விலகும். பூஜை அறையில் ஒரு சிறு தட்டில் அரிசி போட்டு அதில் சங்கை வைத்து வணங்கி வருவதால் உணவுக்குப்பஞ்சமே வராதென்றும் பிறந்த குழந்தைக்கு ஜுரம் வந்தால் சங்கில் நீர்விட்டு உத்ராட்சம் இட்டு அது ஊறிய நீரை மட்டும் ஊட்டி விட ஜுரம், தோஷங்கள் அனைத்தும் விலகுமென்றும் சொல்லப்பெறுகின்றது மேலும் "வலம்புரி" சங்கினைப்பற்றி அறிவோம்..

'வலம்புரிச் சங்கு'. இது ஸ்ரீ லட்சுமி சங்கு என்றும் வழங்கப்படுகிறது.

ஆடி மாத பூரம், புரட்டாசி மாதபவுர்ணமி, ஆனி மாத வளர்பிறை அஷ்டமி, அல்லது சித்திரை மாத பவுர்ணமி தினத்தன்றோ, அல்லது இவையனைத்து நாட்களிலுமோ, இரவில் வலம்புரிச் சங்கில் பசும்பால் விட்டு ஸ்ரீ மகாலட்சுமியின் மீது அமைந்த ஏதாவது ஒரு ஸ்துதியையோ, மந்திரத்தையோ சொல்லி அந்தத் திருமகளை எளிய முறையில் பூஜித்து வந்தால் கூடப் போதும், நம்முடைய குறைகள் யாவுமே மெல்ல மெல்ல விலகி வாழ்வில் வசந்தம் மலய மாருதமாய் வீசத் தொடங்கும். சந்தான பாக்கியம் கிடைப்பது தாமதமாகும் காரணத்தால் மனம் கலங்கி நிற்கும் தம்பதிகளின் மனக்கவலை விலக அவர்கள், வலம்புரிச் சங்கின் வாயிலாகக் குரு பகவானைத் துதி செய்தால், சந்தான லட்சுமியின் அருளால், சந்தான பாக்கியத்தைப் பெற்று நிறை வாழ்வு எய்தலாம். அதாவது பஞ்சமி திதிகளில் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் வலம்புரிச் சங்கில் சிறிது தேன் கலந்த பசும்பாலை வைத்து குருவின் ஸ்துதியை 48 முறை உச்சாடனம் செய்து, அந்தத் தேன் கலந்த பசும்பாலை கணவன், மனைவி இருவரும் பிரசாதமாக அருந்தி வந்தால் எண்ணிய எண்ணம் ஈடேறுவதோடு, மனக்குறைகள் யாவுமே மாயமாய் மறைந்து விடும் என்பது திண்ணம்.

முதன்முதலில் ஸ்ரீ லட்சுமி சங்கு எனப்படும் வலம்புரிச் சங்கை வீட்டிற்குக் கொண்டுவந்து

**"ஓம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரீதர கரஸ்தாய**
**பயோநிதி ஜாதய ஸ்ரீதக்ஷ்ணாவர்த்த சங்காய**
**ஹ்ரீம் க்லீம் ஸ்ரீ கராய பூஜ்யாய நமஹ"**

என மந்திரத்தைச் சொல்லி நமது வீட்டில் என்றும் இருந்து, நமக்கு நன்மைகள் தரப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும். பின்னர் சங்கிற்குரிய காயத்திரி மந்திரத்திலொன்றை

**"ஓம் பாஞ்சஜன்யாய வித்மஹே**
**பவமானாய தீமஹி**
**தன்னஸ் சங்க ப்ரஜோதயாத்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் ஸ்நானம் செய்த பிறகு வீட்டிற்கு, நமது கடைகள், வியாபார ஸ்தலங்கள், தொழிற்கூடங்கள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் வைத்து தினமும் 12 முறைகள் உச்சாடனம் செய்து தூப, தீப, நைவேத்தியம், ஆரத்தி என்ற முறைகளில் பூஜை செய்து வரலாம். சங்கை ஒரு மரப்பெட்டியில் மஞ்சள் பட்டு வஸ்திரம் அல்லது சிவப்பு வெல்வெட் துணி விரித்து அதில்தான் வைக்க வேண்டும். இல்லாவிடில், அதற்கான செம்பு அல்லது வெள்ளி ஸ்டாண்டில் அதைத் தென்வடலாக வைக்க வேண்டும். வலம்புரிச் சங்கானது நமது உள்ளங்கையில் அடங்கக்கூடியதாக இருக்கவேண்டும். வலம்புரிச் சங்கை வெள்ளிப்பூண் போட்டு வைத்திருப்பதே மிகவும் நல்லதாகும். தினமும் காலையில் அதைச் சுத்த தண்ணீரால் கழுவிப் பொட்டிட்டு, மலர்தூவி, கற்பூர ஆரத்தி காட்டி மேற்கண்ட மந்திரத்தை உச்சரித்து வரலாம்.

சங்கின் மகிமையறிந்து வளம் பெற எம்பெருமானை வேண்டுகின்றேன். இதில் தொகுத்து எழுதிய விஷயங்களில் சில பிழைகள் இருக்கலாம், பிழை பொறுத்து நிறைகண்டு ஏற்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

சுபமங்களம்

சிவஸ்ரீ ந. யோகானந்த சிவாச்சாரியார் ஸ்ரீமதி மாலினி அம்மா தம்பதிகளின் (எனது பாசமிகு மாமா மாமியின்) 60 அகவை பூர்த்தியின்போது வெளியிடும் இந்த மலர் மூலம் அவர்களது நல்லாசிகளை நாடுவதுடன் வாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்புடன் **துளசி – தர்சினி மற்றும் திவ்வியன், நிதர்சன், வர்ஷினி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சித்தர் வரலாறு

**சிவபாதம் கணேஷ்குமார் B.A**
சர்வதேச இந்து இளைஞர் பேரவை
தலைவர் மற்றும் ஸ்தாபகர்

சித் என்றால் அறிவு, சித்தை உடையவர்கள் அறிவு படைத்தவர்கள், சித்தம் என்றால் அறிவுக்குக் காரணமான அந்தக் காரணமாகும். இதனால் சித்தர்களை அறிவு படைத்தவர்கள் எனக் கூறினாலும் அவர்கள் செயல்களால் ஞானிகள் முனிவர்கள் எனப் பொருள் கொள்வதில் தவறில்லை.

அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற சித்தர்கள் நெடுநாளாக வாழ்பவர்கள் தமது உடம்பை வைத்துவிட்டு இன்னோர் உடம்பில் புகுந்து நடமாடும் வல்லமை பெற்றோர்கள் அற்புதவாதிகள் அக்கினிக்குள்ளேயே நடக்கவல்லோர் சடாமகுடம், லோகதண்டம், கமண்டலம், புலித்தோல், கோவணம், கபாலம், விபூதி, உருத்திராக்கம் போன்றவையே சித்தர்களின் புறத்தோற்ற அம்சங்கள்.

சித்தர்கள் சிலர்படுத்த படுக்கையில் இருப்பர், சிலர் உலாவிக் கொண்டிருப்பர், சிலர் பிச்சைக்காரன் போலிருந்தாலும் எதையும் கேட்கமாட்டார்கள் அன்புடன் கொடுத்தால் பெறுவர், சிலர் பேசமாட்டார்கள, சிலர் எவர்க்கும் புரியா மொழியில் பேசுவர், சிலர் பல்துலக்கவோ குளிக்கவோ மாட்டார்கள் இப்படிப்பல விநோதமானவர்கய் சித்தர்கள் குண்டலினி சித்தி கைவரப்பெற்ற இவர்கள் தம் ஆன்மாவோடே பேச வல்லவர்கள் பஞ்சேந்திரியங்களைத் தம் கட்டுப்பாட்டில் இயக்கவல்ல சித்தர்கள் பல்லாயிரம் பேர் வாழ்ந்திருந்தாலும் ஈழத்தைப் பொறுத்தவரையில் இங்கு வாழ்ந்த

**சித்தர்கள்.**

1. கடையிற் சுவாமிகள்
2. பரமகுரு சுவாமிகள்
3. குழந்தை வேல் சுவாமிகள்
4. அருள்பல சுவாமிகள்
5. யோகர் சுவாமிகள்
6. நவநாதசித்தர்
7. பெரியானைக்குட்டி சுவாமிகள்
8. சித்தானைக்குட்டி சுவாமிகள்
9. சடைவரத சுவாமிகள்
10. ஆனந்த சடாட்சர குரு
11. செல்லாச்சி அம்மையார்
12. தாளையான் சுவாமிகள்
13. மகாதேவசுவாமிகள்
14. சடையம்மா
15. நாகநாதசித்தர்
16. நயினாதீச்சுவாமிகள்
17. முத்துலிங்க சுவாமிகள்

போன்றோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இருப்பினும் எல்லோர் வரலாறும் கிடைக்குமாறில்லை.

**கடையிற் சுவாமிகள்.**

இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். இவர் முத்தியானந்தர் எனும் தீட்சாநாமம் உடையவர் தென்னிந்தியாவில் பெங்களுரில் பிறந்த இவர் நீதவானாகக் கடமையாற்றினார். இரு கொலை வழக்கு காரணமாக கொலைகாரனுக்குத் தூக்குத்தண்டனை விதிக்க அவரது மனச்சாட்சி மறுத்ததன் காரணமாக துறவி வாழ்க்கையை மேற்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் தக்க குரு ஒருவரை இவர் நாடினார். மைசூரிலுள்ள சிருங்கோரி மடத்தின் சங்கராசாரியார் பீடத்தின் முப்பத்திரண்டாவது தலைவராய் வீற்றிருந்த ஸ்ரீ நரசிம்மபாரதியே கடையிற் சுவாமியின் ஞானதீட்சை வழங்கி முத்தியானந்தர் எனும் தீட்சாநாமமும் சூட்டினார்.

செட்டியார் 1862ம் ஆண்டில் ஒரு வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று தம் குழந்தைவேல் குருநாதரைத் தமக்குத் தந்தருள வேண்டும்மென்று முருகப்பெருமானிடம் மனம் உருகிப் பிரார்த்திக்க அங்ஙனமே அவரது இல்லத்திற்கு சுவாமிகள் எழுந்தருளினார். யாழ்ப்பாணம் வந்த இவர் பெரிய கடையையே தமது பிரதான வதிவிடமாக ஆக்கிக்கொண்டார். இதனால் இவரைக் "கடையிற் சுவாமிகள்" என அழைத்தார்கள். அவரது அக்காலத்தோற்றத்தை குழந்தை வேற் சுவாமிகளின்

"பெரிய கடை நாதன் பித்தன் திருக்கோலம்
கயவர்ணச் சீலை கருந்தோலன சால்வை
துரியாதீதப் பொட்டுத் துலங்க நடைமெட்டுச்
சரியாயறிந்தேத்தின் தழைத்தாட்படுவீரே"

என்ற பாடலடி மூலம் அவரது சித்தக் கோலத்தை அறிந்து கொள்ளலாம்.

சுவாமிகள் "பிசாசு" பிடித்தவர் போலவும் "பைத்தியம்" பிடித்தவர் போலவும் பெரியகடைத் தெருவழியே செல்லும் போது நகர் காவலர்கள் பிடித்து மனநோய்க்கு வைத்தியம் செய்ய ஓர் அறையில் பூட்டி வைத்ததும் அவர் அறைக்கதவைத் திறந்து பழையபடி தெருவீதியில் திரிந்தார். இதனைக் கண்ட பலர் அவர் சீடனானார்கள். ஒரு முறை கரையூர்ப்பகுதியாக சென்றபோது ஒரு வீட்டில் அழுகுரல் கேட்ட போது சென்ற சுவாமிகள் கடலுக்குச் சென்ற தன் கணவன் காற்றுப்பிசகால் வீடு திரும்பவில்லை என்பதை அறிந்தார். உடனே பனைமட்டையை எடுத்து ஏலையா ஏலேவோ என்று பாடிச் சென்றவுடன் மீனவன் திரும்பி வந்ததாகவும் அறியப்படுகிறது. இவ்வாறு அற்புதங்கள் பல தம்மை அடைந்த மெய்யடியாரிடையே சாதி மத, பேதம், உயர்வு தாழ்வு என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் ஒரே வித கருணை காட்டி அவர்களது உடல் நோய்க்கும், உள நோய்க்கும் பரிகாரம் செய்தார். ஒரு பொழுது சுவாமிகள் பெரிய கடை வழியே செல்லும் போது புடவை வியாபாரி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தான். இதனை ஏற்றவர் போல நடித்த சுவாமி அதனை அவ்விடத்திலேயே வந்த தீண்டத்தகாதவனுக்கு முற்பிறப்பிலே நீ நேபாளராசா போ என்று கூறிச்சென்றார். பெரியகடை வியாபாரிகள் இவர் தொட்டால் வியாபாரம் பெருகும் என காத்து நின்றனர். இவ்வாறு அற்புதங்களைச் செய்து சமூக நோக்குடன் வாழ்ந்து வந்த சுவாமிகள் புரட்டாதி மாதத்தில் பூரணையும் புரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய வேளையில் மகாசமாதி அடைந்தார். இவரது சமாதியை இன்றும் வண்ணார் பண்ணையிலுள்ள தேரடியில் காணலாம். ஈழத்தின் சித்தர்பரம்பரை ஒன்றே தோற்றுவித்த மூல காரணமானவராக கடையிற் சுவாமிகள் விளங்குகிறார்.

**செல்லப்பா சுவாமி**

யாழ்ப்பாணத்தின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இவர் வாழ்ந்தார். சிறுவயது தொட்டே பக்குவ சீலராக வாழ்ந்த இவர் தனிமையிலே தனது பொழுதை அதிகம் கழித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நல்லூர் கோயில் வீதியில் கடையிற் சுவாமிகளை முதன் முதலாகச் சந்தித்து அவரையே தனது குருவாக ஏற்றுக்கொண்டார். செல்லப்பா கொடுத்த எலுமிச்சம் பழமொன்றையும் கடையிற் சுவாமி ஏற்றார். அன்று முதல் தனது குருநாதரைச் சென்றடைய வேண்டுமென்ற அவா அவரது உள்ளத்தில் நிலையானது பெரியகடைக்குச் சென்ற செல்லப்பாவைக்கண்ட கடையிற் சுவாமிகள் அவரது பக்குவ நிலையை உணர்ந்து அவரை தனது சீடனாக்கிக் கொண்டார். இதற்கு அடையாளமாக ஒரு ரூபா நாணயத்தை வெற்றிலையில் மடித்துக் கொடுத்தார். பின் செல்லப்பாவின் தலைமேல் ஒரு குடையையும் வைத்து தம்கைகளைத் தட்டி “ஓடடா” என்றும் சொல்லி விட்டார். அக்கணமே தன்சுய நினைவிழந்த செல்லப்பா பதினைந்து நாட்கள் அப்பரமானந்த நிலையிலே இருந்தார். அதன் பின் தம் குருவைப் பின்பற்றி சிறந்த ஞானியாகத் திகழ்ந்தார்.

இவர் தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை நல்லூர் கோவில் தேரடிப்படிகளை அடுத்து நின்ற வில்வ மரத்தின் கீழ் நிட்டையிலே கூடி இருந்தார். இவர் தனது நிட்டையில் பல நாட்களாகத் தொடர்ந்திருப்பார். நிட்டை கலைந்ததும் அவரது பேச்சு மக்களை வியப்படையச் செய்தது இதனால் மக்கள் இவரை “விசர் செல்லப்பா” என அழைத்தனர்.

செல்லப்பா சுவாமிகளை ஏளனம் செய்தோர் பலர் இருக்க அவரது உண்மை நிலையை உணர்ந்தவர் சிலர் இவர்களுள் குறிப்பிடத்தக்கவராக யோகர் சுவாமி விளங்குகின்றார். ஆன்மீக நிலையை நாடிவந்த யோகர்சுவாமியை தனது சீடராக இருத்தி ஐந்து ஆண்டுகள் பயிற்சியளித்தார் செல்லப்பா சுவாமிகள். தம் சீடரை அழைத்துக்கொண்டு கால்நடையாகவே நெடுந்தூரம் ஊர்சுற்றக் கிளம்பிவிடுவார். அப்போது தாம் பெற்ற அனுபூதி ஞானத்தைச் சூத்திரம் போன்ற சிறுசிறு வாக்கியங்களாக தம் சீடருக்கு கூறி விளக்கினார். பக்குவ நிலையிலிருந்த சீடர்களுக்கு ஒவ்வொரு வார்த்தையும் ஒரு நூல் போல விளக்கம் அளித்தது.

“எல்லாம் செப்படிவித்தை” அப்படியே உள்ள ஒரு பொல்லாப்பும் இல்லை “முழுவதும் உண்மை” ஒருவருக்கும் தெரியாது ஆர் அறிவார்? என்ற வாக்கியங்கள் அடிக்கடி செல்லப்பா சுவாமிகளிடமிருந்து வெளிப்பட்டன. இவையே பின்னாளில் இவரது சீடரான யோகர் சுவாமிக்கு மகாவாக்கியமானது.

செல்லப்பாச்சுவாமி தமது சீடர் ஆன்மீக நிலையில் முன்னேறி பூரண ஞானியானதும் அவரை நாடெங்கிலும் கால் நடையாகச் சென்று தம் பணியைத் தொடருமாறு அனுப்பி வைத்தார். பின் 1945ம் ஆண்டு பங்குனி மாதம் செல்லப்பா சுவாமிகள் மகாசமாதி அடைந்தார்.

**யோகர் சுவாமிகள்**

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் யோகநாதன் என்ற பெயருடன் 29ம் திகதி வைகாசி மாதம் 1872இல் பிறந்தார். இளவயதில் தாயை இழந்தாலும் தந்தை மஸ்கெலியாவில் வியாபாரம் நடத்தியதாலும் சிறிய தந்தையாரானயோசப்பே இவரது கல்வி விடயத்தில் அக்கறை காட்டினார். இவர் “ஜோன்” என்ற பெயருடன் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியில் 8ம் வகுப்பு வரை கல்வி பயின்றார். இவர் கிளிநொச்சி நீர்ப்பாசன அலுவலகத்தில் களஞ்சியப்பொறுப்பாளராக கடமை ஆற்றினார். இவ் வேளையில் தகப்பனாரை இழந்தார். திருமுறைகளும், புராணங்களும் கதையும் உபநிடதங்களும் அவரது மனதைக் கவர்ந்தது. இவர் நல்லூர்க்கந்தனை வழிபடத் தொடங்கினார். இந்நிலையிலே அவர் செல்லப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியைக் காண நேர்ந்தது. நற்குருவின் தீட்சையும் உபதேசமும் இவரின் வாழ்க்கையில் பெரு மாற்றத்தை உண்டாக்கின. இனசன பந்தத்தை துறந்து செல்லப்பா சுவாமியையே தம் தாய் தந்தை குரு தெய்வம் எல்லாமாகக் கொண்டார். சுவாமிகளை விட்டுப் பிரியாது இருந்தார் சுவாமிகளும் சீடரைப் பலவகைச் சோதனைக்கு உள்ளாக்கி பதப்படுத்தினார்.

இவர் ஒரு நாள் தம் குருவை சந்தித்தார் பின் தேர் முட்டிகள் மேற்படியிலிருந்து நாற்பது நாள் இரவுபகலாக யோக நிஷ்டையில் இருந்தார். தன்பின் குருவின் கட்டளைப் படி அன்பர்கள் வழங்கிய உணவை உண்ணத் தொடங்கினார். அன்றில் இருந்து இவர் யோகர் சுவாமிகள் என அழைக்கப்பட்டார். செல்லப்பா சுவாமிகள் சமாதி அடைந்ததும் யோகர் சுவாமிகள் கொழும்புத் துறையில் சிற்றம்பலம் சம்பந்தர் எனும் சைவப் பெரியார் வளவில் உள்ள இலுப்ப மரத்தின் கீழ் ஆச்சிரமம் அமைத்து இறுதி வரை வாழ்ந்தார். சமய முரண்பாடுகள் வேதாந்த சித்தாந்த சமரசம் அற்புதம் என்ற வகையில் இவரின் செயற்பாடுகளை இணங் காணலாம்.

செவ்வாய், வெள்ளி தோறும் அடியவர் கூட்டம் இன்னல்களை போக்க கூடுவார். "எல்லோரும் ஒரு குலம்" எல்லோரும் ஒரு இனம் என உரைக்கும் என்ன வித்தியாசம் "நீயும் மனிதன் நானும் மனிதன்" என்று தம்மை நாடி வருபவரிடம் கூறுவார். இவர் ஒரு சமரச ஞானி சைவ சித்தாந்த வேதாந்த சண்டைகள், சைவவைணவ சண்டைகள் இவருக்கு ஒரு போதும் பிடிக்காதவை ஆகும்.

"சிவபோதம் நீ" என்னும் அறிவுக்கு அறிவு செய்பவன் சச்சிதானந்த சொரூபியான சிவன் என்னும் சுந்தர சிவ சொரூபத்தை சிந்தித்து சிந்தனை சிவத்தை அடைந்து சிவமாதலே முத்தி என்றும் சைவ சிந்தாந்தமோ வேதாந்தமோ எனில் "சிவபோதம் நீ." அன்று என தள்ளி சிவபோத சாட்சி நீ எனக் கூறும் அச் சிவபோத சாட்சியே சச்சிதானந்த பிரமம் என்றும் அப் பிரமமே நீ என்றும் அறிந்து நிற்குண சொரூபமாகிய பிரம்ம சொரூபமாக இருத்தலே முத்தி என்று கூறும் சிவபோத ஒளி இன்பம் உதிப்பது இன்பதீதமுத்தி என்பதும் இரு சாரருக்கும் ஒத்த முடிவு வேதாந்த சித்தாந்த சமரசம் இது எனக்காட்டி "ஒரு பொல்லாப்பும் இல்லை எப்போது முடிந்த காரியம் நாமறியோம் முழுதும் உண்மை" என்ற மகா வாக்கியங்கள் தம் அடியார்கள் எங்கெங்கு இருந்தார்களோ அங்கெல்லாம் செல்வார். யாருக்கும் அறிவித்தல் கொடுக்கமாட்டார். திடீரென அடியோர் போல் ஒருவர் வீட்டில் தோன்றுவார். கேள்வியுற்று அடியவர் எல்லோரும் அங்கு வந்து கூடுவர் அவர்களுக்கு எல்லாம் நல்ல உபதேசம் கிடைக்கும். சுவாமிகள் தன்னை ஒரு "சிவதொண்டன்" என்றே கூறிக்கொள்வார். சுவாமிகளுடைய சன்னிதியில் ஒரு சில நிமிடங்கள் இருந்தால் மனச்சாந்தி ஏற்படுவதை யாரும் உணரலாம். எந்த நேரமும் சுவாமிகள் சாந்தி அலைகளையே வீசிக்கொண்டு இருப்பார். சுவாமிகளைச் சூழ எந்த நேரத்திலும் ஒரு ஆன்மீக அலை வீசிக் கொண்டே இருக்கும். அந்த ஆன்மீக அலைகள் இருந்து ஆனந்தம் பெற தம்மை தகுதியாக்கிக் கொண்டவர்கள் நாட்கணக்குகளாக உணவையும் நேரத்தையும் தாகத்தையும் மறந்து தியானத்தில் ஈடுபட்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு சுவாமிகள் தாமே உணவைப் பற்றி நினைவூட்டுவார். மனிதன் ஓடிக்கொண்டு இருக்கின்றான். எப்போது தான் இவனுடைய ஓட்டம் ஓயுமோ எனக் கூறுவார். இவருடைய உபதேசங்களை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காக "சிவதொண்டன்" மாத வெளியீடு 1933லும், அதற்கான சிவதொண்டன் நிலையம் 1953லும் நிறுவப்பட்டது. இப்பணிகளை இன்னும் நாம் கண்டு கொள்ளலாம். இவ்வாறு அவர் பணிகள் தொடர்ந்து சென்ற வேளையில் 1964ம் ஆண்டு பங்குனி மாதம் ஆயிலிய நட்சத்திரத்தன்று சமாதி அடைந்தார். இவரது குருபூசை இன்றும் சைவ மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மங்களம் அருளும் மஹா லட்சுமி அஷ்டகம்

1. நமஸ்தேஸ்து மஹாமாயே ஸ்ரீபீடே ஸுரபூஜிதே
சங்க சக்ர கதாஹஸ்தே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
2. நமஸ்தே கருடாரூட கோலாஸுர பயங்கரி
ஸர்வ பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
3. ஸர்வ ஜ்ஞே ஸர்வ வரதே ஸர்வ துஷ்ட பயங்கரி
ஸர்வ துக்கஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
4. ஸித்தி புத்தி ப்ரதே தேவி புக்திமுக்தி ப்ரதாயினி
மந்திர மூர்த்தே ஸதா தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
5. ஆதியந்த்ரஹிதே தேவி ஆதிசக்தி மஹேஸ்வரி
யோகஜே யோகஸம்பூதே மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
6. ஸ்தூல ஸுக்ஷ்ம மஹாரௌத்ரே மஹாசக்தி மஹோதரே
மஹா பாபஹரே தேவி மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
7. பத்மாஸன ஸ்திதே தேவி பரப்ரும்ம ஸ்வரூபிணி
பரமேசி ஜகந்மாதா மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
8. ச்வேதாம் பரதரே தேவி நானாலங்கார பூஷிதே.
ஜகத்ஸ்திதே ஜகந்மாத மஹாலக்ஷ்மி நமோஸ்துதே
9. மஹாலக்ஷ்மிம் யஷ்டகஸ்தோத்ரம்ய: படேத் பக்திமான்நர
ஸர்வஸித்தி மவாப்னோதி ராஜ்யம் ப்ராப்னோதி ஸர்வதா
10. ஏககாலே படேந்நித்யம் மஹாபாப வினாஸநம்
த்விகாலே ய: படேந்நித்தியம் தனதாந்ய ஸமந்வித:
11. த்ரிகாலம் ய: படேந்நித்யம் மஹாஸத்ரு: விநாஸனம்
மஹாலக்ஷ்மீர் பவேந்நித்யம் ப்ரஸன்னா வரதா ஸுபா


நாம் மேலே காண்பது மஹா லட்சுமி அஷ்டகம் ஆகும். இது மஹா லட்சுமியின் அருள் வேண்டி இந்திரனால் இயற்றப்பட்டது. இது மஹா லட்சுமியின் அருளினை வாரி வழங்க வல்லது. மஹா லட்சுமியின் அருள் இருந்தாலே போதும் நம் வாழ்வில் அனைத்து பேறுகளும் தானே வந்தடையும். இதனை தினமும் பக்தியுடன் பாராயணம் செய்து வந்தால் சகல காரிய சித்தியும், நினைத்தவைகள் கைகூடுதலும், அரச போகமும் உண்டாகும்.

இதனை தினமும் 1 வேளை பாராயணம் செய்து வந்தால் அனைத்து பாவங்களும் அழிந்து போகும். இதனை தினமும் 2 வேளை பாராயணம் செய்து வந்தால் இல்லத்தில் செல்வமும், தானிய விருத்தியும் உண்டாகும்.

இதனை தினமும் 3 வேளை பாராயணம் செய்து வந்தால் அனைத்து எதிரிகளும் அழிந்து நிம்மதியான வாழ்வு கிட்டும்.

இதனை தொடர்ந்து பாராயணம் செய்து வந்தால் மகா லட்சுமியின் காட்சியும் வரமும் கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design and Printed by: RS Printers: 07765224337, 020 8782 38